பக்கங்கள் : 20+VIII=28

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :184

### புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல்களைக் கண்டித்து

# புலிகள்-தமிழ்க்கூட்டமைப்பு இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க முடிவு!

## எம்.பிக்களோடு தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் கலந்தாலோசனை

கிளிநொச்சி,மே29

**கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அடையாளம் காட்டாத அணிகள் மூலம் தொடுக்கப்பட்டிருக்கும் நிழல் யுத்தம், வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் உட்பட மக்களின் இயல்பு வாழ்வுக்குத் தடையாக உள்ள இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் பரந்த அளவிலான எதிர்ப்புப் போராட்டங்களை விடுதலைப் புலிகளுடன் இணைந்து முன்னெடுக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முடிவுசெய்திருக்கின்றது.**

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களைநடைமுறைப் படுத்துவதை விடுத்து போரைத் தூண்டும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உடன் படிக்கை மீறல்களைக் கண்டித்தே இந்த எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மாவட்ட ரீதியாக எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின்

(18ஆம் பக்கம் பார்க்க)



கல்முனையில் செய்தியாளர்களுடன் கிளின்டன்

## 100மீ. கரையோரப் பாதுகாப்பு வலயம் சாத்தியமற்றது என்கிறார் கிளின்டன்

கொழும்பு,மே29

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களில் 100 மீற்றர் பாதுகாப்பு வலயம் அமைக்கும் இலங்கை அரசின் திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. இலங்கை - அரச அதிகாரிகளிடம் இதுபற்றித் தெரிவித்துள்ளேன்.

ஐ.நாவின் விசேட பிரதிநிதியும் முன்னாள் அமெரிக்க அதிபருமான பில் கிளின்டன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு மேற்கொண்ட ஒரு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பில் நேற்றுமாலை நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே கிளின்டன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலை பாதித்த கரையோரப் பிரதேசங்களில் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யக்கூடிய பகுதிகளை மட்டும் பாதுகாப்பு வலயமாக்கலாம். ஏனைய இடங்களில்

(18ஆம் பக்கம் பார்க்க)

### மீள்கட்டுமானப் பணிகளில் உள்ள பிரச்சினைகளை

## ரீ.ஆர்.ஓ. பணிப்பாளர் ரெஜி பில் கிளின்டனுக்கு விளக்கினார்

கொழும்பு,மே29

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து ஐ.நாவின் விசேட தூதுவர் பில் கிளின்டனுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

ஐ.நா. அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் கிளின்டனுக்கும் இடையில் நேற்றுமாலை நடந்த சந்திப்பில் பங்குபற்றிய தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி இந்த விளக்கத்தை அளித்தார்.

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான பொருள்களை வாகனங்களில் எடுத்துச்செல்லும்போது இராணுவ சோதனை நிலையங்களில் ஏற்படும் பிரச்சினைகளையும் அவர் எடுத்துக்கூறினார். (ஐ-3)



ரெஜியுடன் உரையாடும் கிளின்டன்

## மட்டு. நகரில் இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,மே29

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை 6.30 மணிக்கு பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பாதுகாப்புமிக்க பகுதி ஒன்றில்வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மட்டக்களப்புப் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்தவரான யூட் தியாகராஜா (வயது 42) என்பவரே கொல்லப் பட்டவராவார்.

கடமை முடிந்து வழமைபோல் சிவில் உடையில் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புத்துறையில் இராணுவக் காவலரண் தீக்கிரை

அரியாலை.மே29

கொழும்புத்துறை. பாண்டியன்தாழ்வுப் பகுதியில் அமைந்திருந்த படையினரின் காவலரண் ஒன்று நேற்றுமுன்தினம் இரவுவேளை இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப் பட்டிருக்கிறது.

இந்தக் காவலரணில் பகலில் மட்டும் இராணுவத்தினர் பணியில் இருப்பது வழக்கம்.

வெள்ளிக்கிழமை கடமை முடிந்து படையினர் சென்ற பின்னர் - இரவு நேரத்தில் - அதற்குத் தீ வைக்கப்பட்டிருக்கிறது. இதனால், காவலரண் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

படையினர் நேற்று அதனை மீண்டும் புதிதாக அமைப்பதில் ஈடுபட்டிருந்தனர். (ஐ-17)

## மண்டபம் நிறைந்த சனத்திரளின் மத்தியில் புதுவையின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே29

கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதிய 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' என்ற கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

மண்டபம் நிறைந்த சனத்திரள் மத்தியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின முன்னதாக பொதுச்சுடரினை கடற்கரும்புலி கப்டன் சுதாகரனின் தந்தையார் மு.அநாதரட்சகன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சை ஏற்றிவைத்தார்.

விழாச் சுடர்களை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்,

(18ஆம் பக்கம் பார்க்க)



புதுவையின் நூல் வெளியீட்டு விழாவில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பிரதி வழங்குவதையும்,புதுவை இரத்தினதுரை ஏற்புரையாற்றுவதையும் விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :பிரபா)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர் பிரதேசத்தின் தேவைகளை நிறைவு செய்ய மருத்துவத்துறை வளர்த்தெடுக்கப்படவேண்டும்

## சுகாதார அபிவிருத்திக் கருத்தரங்கில் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்

மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் மருத்துவத்துறை வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவா இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையை போல் தமிழர் தாயகப் பகுதிகளிலும் சுகாதார மேம்பாடு குறித்த திட்டமிடல்களும் செயற்பாடுகளும ஒழுங்குபடுத்தப்பட்டு பேணப்படவேண்டும் என்ற தேசியத் தலைவரின் உயரிய சிந்தனையின் செயல்வடிவமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசத்திலே சுகாதார ஏனைய மேம்பாடுகள் அனைத்தும் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் உள்ளன. இத்துறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

கடந்த கால யுத்தநடவடிக்கைகள் காரணமாக மிகவும் பின்தங்கிய நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகள் உள்ளன. அதிலும் குறிப்பாக சுகாதார நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. நீண்ட போர், போா நிறுத்த உடன்பாட்டின் மூலம் தற்காலிக அமைதிச் சூழலை உருவாக்கியது.

போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாத சூழலில் தற்போது நிலவுகின்ற அமைதிச் சூழலில் அவற்றை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் நாம் இறங்கியுள்ளோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது போரைத் திணித்து வந்தது. ஆயுதத் தாக்குதல்கள் மட்டுமல்ல தமிழ் மக்களை எப்படியெல்லாம் அழிக்க முடியுமோ அதற்கான சகல வழிகளையும். பின்பற்றியிருந்தது.

போர் காரணமாக தமிழர் தாயகத்தில் மருத்துவ பொருளாதார வளங்கள் பெரும் அழிவுகளைக் கண்டன. அத்துடன் தமிழ் மக்கள் மீது மருத்துவ பொருளாதாரத் தடைகளை ஸ்ரீ லங்கா அரசு இறுக்கமாக விதித்திருந்தது.



யுத்த காலத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த மருத்துவத்துறையினை எதிர்காலத்தில் திட்டமிட்ட ரீதியில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

மக்களுடைய நலன்களை முதன்மைப் படுத்தியதாக மருத்துவத்துறை வளர்த்தெடுக்கப்படவேண்டும் அதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார்.

முற்பகல் 10மணியளவில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன்,அம்பாறை, கல்முனை,மட்டக்களப்பு. திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளின் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் வழங்கினர். (எ)

# கவுணாவத்தை ஆலயத்தில் நேற்று 800 கடாக்கள் வரை பலியிடப்பட்டன

## வேள்விப் பொங்கலில் அடியார்கள் திரண்டனர்

வலி.தென்மேற்கு,மே29

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் நேற்று சனிக்கிழமை காலை வருடாந்த வேள்வி நடைபெற்ற போது பல நூற்றுக்கணக்கான ஆட்டுக் கடாக்களும் நூற்றுக்கணக்கான கோழிகளும் பலியிடப்பட்டன. அத்துடன், இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வசித்துவரும் கவுணாவத்தை வைரவர் ஆலய பத்தர்கள் அங்கு வந்து பொங்கல் பொங்கி வழிபாடுகள் செய்தனர்.

சுமார் 800 ஆட்டுக்கடாக்கள் வரை பலியிடப்பட்டன என்று கூறப்படுகிறது.

அதிகாலை ஐந்து மணி முதல் இளவாலை சேந்தாங்குளம் இராணுவ சோதனைச்சாவடி ஊடாக ஆலயத்துக்கு மக்கள் செல்ல ஆரம்பித்தனர்.

பலர் ஆட்டுக் கடாக்களையும் தம்முடன் கொண்டு சென்றனர். பெண்களும் வழிபாடு செய்வதற்காக ஆலயத்திற்கு வந்திருந்தனர். படையினர் பலரிடமும் அடையாள அட்டையைப் பரிசோதிக்காமலேயே ஆலயத்திற்குச் செல்ல அனுமதித்தனர்.

ஆலய சுற்றாடலில் இராணுவத்தினரும் பொலீஸாரும் பெரும் எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டனர்.

இதேவேளை - பலியிடப்பட்ட ஆட்டுக் கடாக்களை வாங்கிச் செல்வதற்குப் பலரும் முண்டியடித்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இதனால், அவற்றின் விலைகளும் மிகவும் அதிகரித்தன.

(ஐ-135)

# அரங்காலய நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே29

பெண்கள் பண்பாட்டு மையத்தினரால் நடத்தப்பட்டுவரும் அரங்காலய நிகழ்வுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் நிகழ்வு நடைபெறவுள்ளது. (203)

# ஆசிரிய சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே29

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்ட கிளையின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.பாலச்சந்திரன் கேட்டுள்ளார். (3-204-13)



கொழும்பு மாளிகாவத்தையைச் சேர்ந்த பாத்திமா பஸ்னா என்ற 25 வயதுப் பெண் கடந்த வியாழக்கிழமை மருதானை கலீல் மருத்துவமனையில் தனது முதல் பிரசவத்தின் போது நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ளார். மூன்று ஆண் குழந்தைகளுடனும் ஒரு பெண் குழந்தையுடனும் அவர் தனது கணவன் மொகமட் அக்ரமுடன் காணப்படுகின்றார்.

# பெண்ணின் சங்கிலி, தாலிக்கொடி பட்டப்பகலில் வீதியில் அறுப்பு!

## மோட்டார்சைக்கிள் கொள்ளையர்கள் கைவரிசை

கோண்டாவில்,மே29

வீதியால் சென்றுகொண்டிருந்த இளம் பெண்ணினுடைய தாலிக்கொடி, சங்கிலி என்பனவற்றை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அறுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றையதினம் கோண்டாவில் மேற்கில் ஸ்ரேசன் வீதியில் இந்து மகா வித்தியாலயத்திற்கு முன்பாக முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த செல்வம் சாரதா தேவி என்பவரே தனது தாலிக்கொடி மற்றும் சங்கிலியை இழந்தவராவார்.

கணவனுடன் சைக்கிளில் கடைக்கு வந்த பிரஸ்தாபப் பெண் கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு ஸ்ரேசன் வீதியில் இருந்து வீடு நோக்கித் தனியே சென்றுகொண்டிருந்த போதே அவரைப் பின் தொடர்ந்த மோட்டார் சைக்கிள் கொள்ளையர்கள் குறித்த பெண்ணிடம் கதை கேட்பதுபோல் அணுகி திடீரென அவரது கழுத்தில் இருந்த தாலிக்கொடி, சங்கிலியை அறுத்தனர் என்றும் -

அவரது கையில் இருந்த பணப் பையையும் திருடர்கள் பறிக்க முயன்றனர் எனவும் - கூறப்படுகிறது,

பணப்பையை பற்றிப் பிடித்தவாறு அந்தப் பெண் கூக்குரலிடவே மோட்டார் சைக்கிள் திருடர்கள் தப்பியோடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-49)

# எட்வர்டின் அபார பந்துவீச்சால் 144 ஓட்டங்களுடன் சுருண்டது பாகிஸ்தான்



எட்வர்ட்

பார்படோஸில் நடைபெறும் மேற்கிந்திய தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டில் நேற்று முன்தினம் நடந்த 2ஆம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி அதன் முதல் இன்னிங்ஸில் 144 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அதற்குப் பதில் அளித்து இரண்டாம் இன்னிங்ஸில் மேற்கிந்திய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 168 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாம் நாள் ஆட்டத்தில் தனது முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி தொடர்ந்து ஆடியது.

மேற்கிந்திய அணி வீரர் எட்வர்ட்டின் அபார பந்துவீச்சால் பாகிஸ்தானின் விக்கெட்டுக்கள் சரியத்தொடங்கின.

இந்த அணி நூறு ஓட்டங்களை எடுப்பதற்குள் 6 முக்கிய துடுப்பாட்டக்காரர்களை இழந்தது.

அதிரடி ஆட்டக்காரரான அப்ரிடி 16 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்துக் களமிறங்கிய ஹமீது, 12 ஓட்டங்களுடனும் சல்மான் பட் 27 ஓட்டங்களுடனும் பாசித்கான் 6 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

அணியை சரிவில் இருந்து மீட்பார் என எதிர்பார்க்கப்பட்ட கப்டன் யூனுஸ்கான் 31 ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்தார். முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களை மட்டுமே பெற்றது பாகிஸ்தான் அணி.

எட்வர்ட் அபாரமாகப் பந்துவீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கோரி மோர் 3 விக்கெட்டுக்களையும் கிங் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

'பாலோ ஆனை' தவிர்க்க பாகிஸ்தான் 145 ஓட்டங்கள் எடுத்திருக்கவேண்டும். ஆனால், அந்த அணி 144 ஓட்டங்களையே பெற்றது.

ஆனால், மேற்கிந்திய அணியின் கப்டன் சந்தர்போல் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை ஆட முடிவுசெய்தார்.

தொடக்க ஆட்டக்காரர்களான கெய்லும் ஸ்மித்தும் இறங்கி அபாரமாக ஆடினர். கெய்ல் 50 ஓட்டங்களையும் லாரா 48 ஓட்டங்களையும் அதிரடியாக ஆடிக் குவித்தனர்.

ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களை மேற்கிந்திய அணி பெற்றது. சந்தர்போல் 37 ஓட்டங்களுடனும் ஹின்ட்ஸ் 14 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.(3)

# இங்கிலாந்துக்கு வெற்றி வாய்ப்பு



லோர்ட்ஸில் நடைபெறும் பங்களாதேஷ் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றியை நோக்கிச் செல்கின்றது.

முதலாவது இன்னிங்ஸில் 108 ஓட்டங்களுடன் பாகிஸ்தான் சுருண்டது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து ஒரு விக்கெட்டை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

2ஆவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதில் டிரெஸ்கோதிக் 194 ஓட்டங்களையும் கப்டன் வோகன் 120 ஓட்டங்களையும் பெற்றனர்.

2ஆவது இன்னிங்ஸை ஆடத்தொடங்கிய பங்களாதேஷ் அணி ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (3)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,மே29

டொனால் கணேசகுமார் வெற்றிக்கிண்ணத்திற்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று காலை 9 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக லாவண்யா மூக்குக் கண்ணாடி அக உரிமையாளர் றெஜி சொலமனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.இராசதுரையும் கலந்துகொள்வர். (3-190)

# நீறுபூத்த நெருப்பாக திருமலை...!

நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கும் சர்ச்சைக்குரியதான திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் இன்று திருகோணமலை மாவட்டத்தை மட்டுமன்றி நாட்டையே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கின்றது. அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்புகளின் மத்தியில் நகரம் காலையில் மலர்வதும் நண்பகலுக்குப் பின்னர் வெறிச்சோடிக் கிடப்பதுமாக பரபரப்பும் பதற்றமுமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

ஐந்து தினங்களாக அடுத்தடுத்து இடம்பெற்ற ஹர்த்தால், கடை அடைப்புகளைத் தொடர்ந்து திருகோணமலைக்கு ஓடோடி வந்த அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் பல மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசி இரண்டாம திகதி வரை ஹர்த்தால் கடை அடைப்புகளுக்கு விடுப்பு விடுத்திருக்கின்றார்கள். இந்த நிலையில் ஜனாதிபதியும் தனது பங்குக்கு அறிக்கையொன்றினை விடுத்திருக்கின்றார்.

கடந்த புதனன்று இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் பணிமனையில் உயர்மட்ட மாநாடொன்று இடம்பெற்றது. இந்த மாநாடு கூட சுமார் ஒன்றரை மணித்தியால தாமதத்தின் பின்னரே ஆரம்பமானது. இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட முக்கிய பிரமுகர்கள், மதகுருமார்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இந்த மாநாட்டுக்காகக் காத்திருக்க ஆளுநர் பணிமனையிலேயே மாநாடு நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மதகுருமார்களும், பிரமுகர்களும், ஊடகவியலாளர்களும் வாகனங்களில் திணிக்கப்பட்டு ஆளுநர் பணிமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் ஊடகவியலாளர்கள் எரிச்சலடையும் வகையிலான அறிவித்தலொன்று அங்கு விடுக்கப்பட்டது. ஆளுநரின் இணைப்பதிகாரி அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் மாநாட்டு மண்டபத்திற்கு வெளியே இருக்குமாறும் மாநாடு முடிந்த பின்னர் கூட்டறிக்கை வெளியிடப்பட்டு தகவல் தெரிவிப்பதாகவும் கூறினார்.

ஊடகவியலாளர்களோ மாநாடு ஆரம்பமாகும் முன்னர் சில படங்களை எடுத்த பின்னர் மாநாட்டை ஆரம்பியுங்கள் எனக் கோரிய போதும் அதுவும் மறுக்கப்பட்டது.

மூன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்த மாநாட்டினைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பமானது.

இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய பிரதியமைச்சர் டிலான் பெரேரா மாநாட்டின்

**திருமலையிலிருந்து சங்கீத்**

சாராம்சம் தொடர்பாக பேசுகையில் இந்தப் பிரச்சினையை சுமுகமாகவே தீர்க்க விரும்புவதாகக் கூறினார். இதுதொடர்பாக சட்டமா அதிபரின் உதவியைப் பெற்றுக்கொடுக்கப் போவதாகவும் - கூறினார்.

இங்கு சமுகம் அளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் இந்த விடயம் தொடர்பாக அதிகாரிகளும் தங்கள் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் கூறினார்.

இந்த மாநாடு முடிந்து நான்கு தினங்களாகி விட்டன. இங்கு வழங்கப்பட்ட காலக் கெடுவுக்கும் இன்னும் சில தினங்களே உள்ளன. ஆனால், இது தொடர்பான நடவடிக்கைகள் எந்த அளவில் மேற்கொள்ளப்பட்டன என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாம் திகதிக்குள் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படாவிட்டால் மீண்டும் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களே உள்ள நிலையில் இதற்கான தீர்வு காணப்படுமா என்பது தான் அனைவரிடமும் எழும் கேள்வியாக உள்ளது.



கௌதம புத்தர் அமைதி வழியைக் காட்டுவாரா? ★

## காலாவதியான மருந்து வகைகள் அழிப்பு

யாழ்ப்பாணம்,மே29

யாழ். மாவட்ட மக்கள் நலன் பேணும் அமைப்பினர் மேற்கொண்ட திடீர்சோதனையில் யாழ். நகரிலுள்ள பல மருந்தகங்களிலிருந்து காலாவதியான 22 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. யாழ். நகரின் மருந்தகங்களில் காலாவதியான மருந்துகள் விற்பனை செய்வதாகப் பொதுமக்கள் முறையிட்டதைத் தொடர்ந்து அப்பகுதியின் மருந்தகங்களை மேற்படி அமைப்பினர் சோதனையிட்டபோது, பல ஆயிரம் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துகள் இனங்காணப்பட்டு மருந்தக உரிமையாளரின் அனுமதியுடன் மருந்துகள் யாவும் அழிக்கப்பட்டன என்று மக்கள் நலன் பேணும் அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிவசுப்பிரமணியம் சிவகுமார்**

- அராலி -

ஓராண்டு ஓடி மறைந்து போனாலும்
தீராத உம் கவலை தீரவே தீராது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில்.
காலிங்கன் தியேட்டர் ஒழுங்கை.
இணுவில். (45955)(26-33-16-18)

அன்பு மனைவி,
மக்கள், சகோதரர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**செல்வி மேரி நிகாயா நிம்மி சிங்கராஜா**

தோற்றம் 23-11-1995 மறைவு 29-05-2004

எம் நெஞ்சில் நிறைந்த திருமுகமே!
அனைவரையும் மகிழ்வித்த பாசவிளக்கே
கண்ணீர்க் கடலில் நாம் கதறிஅழ
கருணைக் கடவுளிடம் நீ சென்று
ஓராண்டு சென்றாலும் - உன்
நினைவும் புன்னகையும்
என்றும் எம்மைவிட்டு மறையாதம்மா!

தாளையடி வடக்கு.
தாளையடி.

(45953)(26-33-16-18) - குடும்பத்தினர்.


உங்கள் விமானப் பயணத்திற்கு!

**Aero Lanka**

In Domestic Operation




Head office
No.500.Galle Road.
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


## மரண அறிவித்தல்கள்

### இராசையா இராசரத்தினம்

**(சின்னராசா டிரைவர்)**



மீசாலை வடக்கு, புத்தூர்ச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட இராசையா இராசரத்தினம் (சின்னராசா - டிரைவர்) அவர்கள் 25.05.2005 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் புவனேஸ்வரி (கிளி) யின் அன்புக் கணவரும் ரஜனி (ஜேர்மனி), ரமணன் (ஜேர்மனி), வதனி, லோஜினி (இந்தியா), இலக்குமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பத்மலோசன் (ஜேர்மனி) ஆனந்தி (ஜேர்மனி), கண்ணதாசன், தவகரன் (இந்தியா), சசிக்கா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகேஸ்வரி, நவரத்தினம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சஜீவன், பகீரன், லக்ஸ்மன், கஜானா, ரம்மியா, லவனிசா, கௌசல்யன், சுவாதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-05-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*
T.P.: 0776 171403

தகவல்:
குடும்பத்தினர்.
(45947)(26-33-18-16)

### திருமதி லில்லி நேசமலர் தேவராசா



**(தேவராசா ரீச்சர் - ஓய்வுபெற்ற ஆசிரியை, ஊறணி கனிஷ்ட வித்தியாசாலை, வட்டு.மத்திய கல்லூரி)**

உசனைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி லில்லி நேசமலர் தேவராசா அவர்கள் 25-05-2005 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் க.தேவராசாவின் அன்பு மனைவியும் திருமதி அரியமலர் தனபாலசிங்கம் (கனடா), கா.செல்வராஜா (உசன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயக்குமாரன் (ஜேர்மனி), ஜெயமதி (பெறறி - ஜேர்மனி), ஜெயநிதி (சுட்டி - கனடா), ஜெயரதி (ரதி - கனடா), ஜெயசுதன் (சுதன்), ஜெயவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகன் சாந்தனன (ஜேர்மனி), நீதிராஜா (கனடா), டிரேன் ஜேசுதாசன் (கனடா) ஆகியோரின் மாமியும் ஜெபேந்திரா (ஜேர்மனி), பிரேமிக்கா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அனனாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29-05-2005) ஞாயிற்றுககிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி றோட், குளத்தடி,*
*சங்கரத்தை, வட்டுக்கோட்டை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(45957)(26-33-18-16)


## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல இலத்திரனியல் விற்பனை நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. இன்று ஞாயிறு காலை 10 மணி முதல் 4 மணி வரை நேரில் வரவும் தொடர்புகளுக்கு:

**J CITY TELE COM**
59/2, Power House Rd.,
Jaffna. (மலாயன் கபே அருகில்)
T.P.: 8072
(45951)(26)

மிகக் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு அழைப்புக்களைப் பெற்றிட நாடுங்கள J CITY


## கண்ணீர்க் காணிக்கை

குப்பிளான் வடக்கு, தெற்கு விவசாயிகள் சார்பில் விவசாயிகள் சம்மேளனத்தினரின் கண்ணீர்க் காணிக்கை

எமது விவசாயிகள் சம்மேளனத்தினரின் செயலாளர்
செல்லப்பா - நவரத்தினராசா (J.P.) அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செல்லப்பா செல்லம்மா**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-43087)(26-33-16-18)

குப்பிளான் வடக்கு, தெற்கு விவசாயிகள்
சம்மேளனம், குப்பிளான்.

## மரண அறிவித்தல்

### திருமதி பூபதி சபாரத்தினம்

கொக்குவில், நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பூபதி சபாரத்தினம் அவர்கள் (27.05.2005) வெள்ளிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் -அழகம்மாவின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற சபாரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், கோபாலகிருஷ்ணன் (முருகன் களஞ்சியம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரஸ்வதி, சிவனேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பவளம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சர்வானந்தம், தெட்சணாமூர்த்தி (இளைப்பாறிய கட்டடப் பரிசோதகர், கட்டடத் திணைக்களம்), சரோயினிதேவி, சொர்ணமலர் (கனடா), ஞானரூபி, வசந்தரூபி (கனடா), கணேசமூர்த்தி (வர்த்தகர்), சாந்தரூபி, சத்தியமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சர்வேஸ்வரரூபி, வயிரவப்பிள்ளை மற்றும் கலைவாணி, சர்வேஸ்வர விமோஷனம், சுயம்புலிங்கம் (கனடா), பாலச்சந்திரன் (வர்த்தகர், மாத்தறை), மகேஸ்வரன் (கனடா), செல்வபாஸ்கரி, கருணாமூர்த்தி (இயந்திரம்ஸ்), வசந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தேவானந்தன் - சுஜாத்தா (ஜேர்மனி), சுகிர்தரன் - தயாபதி (இந்தியா), சுதர்சன் - யசோதரா (ஜேர்மனி), மனோகரன் (P.H.I.) - சுனித்தா (கச்சேரி காணிப்பதிவுத் திணைக்களம்), ருத்திரன் - சுஜீபா (கனடா), அலோசியஸ்ரவி - சுஜந்தனி (கொழும்பு), சுரேந்திரன் - சுதர்சினி, சுதாகரன், சஞ்ஜீன், அகிலன் (கனடா), லஷ்மி (வர்த்தக வாணிப அமைச்சு), அகிலன் - அபிராமி (ஆஸ்திரேலியா), கௌரி, நிமலன், லிங்கேஸ்வரன் - சர்மிலா, சர்மிலன், சர்வன் (லண்டன்), பிரஜீவ் (வர்த்தக வங்கி, யாழ்.) பிரவீனா (யாழ். மருத்துவபீடம்), பிரசாந் (மருத்துவபீடம், கொழும்பு) சமீரா, ஜெனித்ரா (கொழும்பு), மொனிசா, பிரவீன் (கனடா), கிருத்திகா, கார்த்திகா, துஷாந்தன், துஷாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில் அம்மன் கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு.* (45949)(26-33-18-14-16)

தகவல்:
- குடும்பத்தினர்.

## இவரைக் காணவில்லை



இளவாலையைச் சேர்ந்தவர்களான
இரத்தினம் - அருந்தவம் தம்பதியரின்
கனிஷ்ட புதல்வி
**செல்வி ஜெகதீஸ்வரி**
என்பவரைக் கடந்த 22-05-2005
ஞாயிறு முதல் காணவில்லை. இவரைக்
கண்டவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும்
முகவரிக்கு உடனே அறியத்தரவும்.

திருமதி கந்தசாமி தயா,
உயரப்புலம், இளவாலை.
(45909) (24-14-17)

---

உ
சிவமயம்

## புகலி திருச்செந்தூர் சிவசுப்பிரமணியர் ஆலய பொதுக்கூட்டம்

(ஞானியார் கோயில்)

இடம்: ஆலய மண்டபம்
காலம்: (30-05-2005) திங்கட்கிழமை
நேரம்: காலை 9.30 மணிக்கு

சிவஸ்ரீ தெ.சோமசுந்தரக் குருக்கள்
(ஆலயப் பிரதமகுரு).
மணற்பிட்டி,
காரைநகர்.
(45929) (24-14-17)

---

குப்பிளான் கிராம மக்களின் சார்பில்

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி செல்லப்பா செல்லம்மா**

குப்பிளான் வடக்கு, தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளரும் குப்பிளான் கன்னிமார் கோயில் உப தலைவருமான திரு.செ.நவரத்தினராசா (J.P.) அவர்களின் அன்புத் தாயார் திருமதி செல்லப்பா செல்லம்மா அவர்களின் மறைவுச்செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குப்பிளான் கிராம மக்களின் சார்பாக,
சோ.பரமநாதன் (கி.சே.அ.) குப்பிளான் தெற்கு J/210
செ.ஞானசபேசன் (கி.சே.அ.) குப்பிளான் வடக்கு J/211
(சி-43088) (24-14-17)

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராணி வேல்நாயகம்

அல்வாய் வடக்கு, சாரதா இல்லத்தைச் சேர்ந்த திருமதி செல்வராணி வேல்நாயகம் அவர்கள் 26-05-2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பவுலீஸ் - செல்லம்மா தம்பதியினரின் மகளும் வேலநாயகத்தின் மனைவியும் செல்வநாயகம் (கனடா), இராசநாயகம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவமலரின் மாமியாரும் சகானாவின் பேர்த்தியும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி (பூண்டுலோயா), சாரதா தேவி (அல்வாய்), சகாதேவன் (இந்தியா) ஆகியோரின் சகோதரியும் விசாலாட்சி, தங்கராசா (இன்சூரன்ஸ்), கலாஜோதி ஆகியோரின் மைத்துனியும் லண்டனில் வசிக்கும் விக்னேஸ்வரன், பரமேஸ்வரன், புவனேஸ்வரி, விமலேஸ்வரன், ஜெகதீஸ்வரன், குகனேஸ்வரன், யோகேஸ்வரி, ராஜேஸ்வரி, சிவனேஸ்வரன் (நுணாவில்), செல்வராஜ் (பூண்டுலோயா), ஜெயரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் சிறியதாயாரும் கௌரி, சாந்தி மகேந்திரன், சரளா, லோஜி, அஜந்தா குமாரதாசன், கிருஷ்ணமூர்த்தி, விஜிதா (நுணாவில்), சாரதா, சரோஜா நாகேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் சின்னமாமியும் ஸ்ரீவித்தியா, ஸ்ரீலேகா, ஸ்ரீரூபா, தினேஸ், கலைவாணி, கஸ்தூரி, அபிராமி, ஆர்த்திகா, அஸ்வினா, மாதங்கி, பவரதன், கிரோசிகா, சாகித்யா, நிவிந்தன், லக்ஸிகா, ஹர்சன், வாருணி, சஜிதன், லக்ஸதன், பிரசோபன், டிலக்ஷனா, பிரவக்சன், பிரணவன், விமலா, விக்னேஸ், விது, வினோத், அபிநயா, மதுஷன், அக்ஷியா ஆகியோரின் ஒன்றுவிட்ட பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30-05-2005) திங்கட்கிழமை அல்வாயில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் சுப்பர்மடம் இந்துமாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வே.தங்கராசா (இன்சூரன்ஸ்)
*"சாரதா இல்லம்"*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.*
(சி-43093) (24-14-45)

தகவல்:
வே.இராசநாயகம் (மகன்)
V.V.T.சிவா (சக்தி வீடியோ)
(பெறாமகன்).
077 6012242

---

# யாழ்.பல்கலையில் திரைப்படக் காண்காட்சி

யாழ்ப்பாணம்,மே29

யாழ். பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் தொடராகக் காண்பிக்கப்படும் இயக்குநர் குருதத்தின் திரைப்படத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புவியியற்றுறை மண்டபத்தில் பியாஸா (தாகம்) என்ற ஹிந்தித் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தப் படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் சு. யேசுராசா தலைமையில் திரையிடப்பட்ட படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். (ஒ-13)

---


## REQUIREMENTS

**UNIT requires candidates who has with power of challenges**

***Promotion Executives***

Eligibilities
* *Candidate who has completed A/L*
* *Added knowledge in computing*
* *Attractive communication skill*
* *Computer Hardware knowledge preferred*

Attractive Salary + perx
Do you have touch in above just
Walk-in with testimonials on **01.06.2005**

**UNIT** 347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737 / 0776093477


---


வாடிக்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்

யாழ்ப்பாணம்.
0714168475

யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com
(C-43566) (54-15)


---

## 'வரதர் வெளியீடு'

எழுத்தாளர்களை அழைக்கிறது!

### இது ஓர் அரிய சந்தர்ப்பம்!

✱ 'இன்றைய இளைஞர்களின் நாளைய வாழ்வுக்காக' என்ற நோக்கத்தோடு, பல சிறிய நூல்களை வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

✱ இந்த நூல்களைப் படிப்பதனால் இளைஞர்களின் பொது அறிவு வளர்வதோடு, முக்கியமாக, தாங்களும் எதிர்காலத்தில் நல்ல பல சாதனைகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் உள்ளங்களில் துளிர்க்க வேண்டும். தாங்களும் ஒழுக்க சீலர்களாக, கறறிந்த சான்றோர்களாக எல்லோரும் போற்றும் படியாக வாழவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.

✱ உதாரணமாக - வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து தமது விடாமுயற்சியினாலும் திறமையினாலும் உச்ச நிலைக்கு வந்த சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கி எழுதலாம். (வசனநடை வாசகரை ஈர்க்கவேண்டும்).

✱ சாதாரண புத்தக அளவில் 25 பக்கங்களுக்கு எழுதினால் போதுமானது.

✱ வெளியிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கட்டுரைக்கும் அதன் முதல் பதிப்பிற்காக மட்டும் ரூபா 1,000/= சன்மானம் வழங்கப்படும்.

✱ கட்டுரையில் மூலப்பிரதிகளை வைத்துக்கொண்டு பிரதிகளை மட்டும் எமக்கு அனுப்புங்கள். உங்கள் கட்டுரை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் அது வெளியீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் உங்களுக்கு அறிவிப்போம்.

✱ இன்றைய் இளைஞர்களின் எதிர்கால நலன்கருதி - ஒரு நல்ல சேவையாகக் கருதி - இக்கட்டுரைகளை எழுதுங்கள். (சி-43068)

✱ வரதர் வெளியீடு, 226, காங்கேசன் துறைச்சாலை,யாழ்ப்பாணம். (தொலைபேசி: 222 2820) அல்லது 84/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே.: 222 6164)

---

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

**யா/இணுவில் மத்திய கல்லூரி**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 12-06-2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் தலைவர் திரு.துரைஎங்கரசு தலைமையில் கூடவுள்ளது. நிகழ்வுக்கு சலக உறுப்பினர்களையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் குறித்த தினத்துக்கு முன்பதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும்.

திரு.ச.சந்திரகுமார்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.
(45928) (24-14-17)

---

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 08 - 12 - 1915

ஆண்டவன் அடியில் 11 - 06 - 2001

**அமரர் பசுபதி சோமசுந்தரம் (P.S.)**

திதி: அபரபக்க சஷ்டி 29-05-2005

*களங்கமற்ற அன்பு செய்த கருணைத் தெய்வமே*
*ஆளானாய் அரவடிக்கீழ் ஆண்டு நான்கானதுவே*
*விண்ணின் விளக்காய் விளங்கிடும் எம் ஐயா!*
*மண்மிசை யாமிருந்து மலர்தூவித் துதிக்கின்றோம்.*

*236, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி.*
*யாழ்ப்பாணம்.*

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(45936)(14-17-24)

---

நெஞ்சை விட்டு அகலாத

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



உதயம் 16 - 02 - 1977

அஸ்தமனம் 27 - 05 - 2001

**அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்**

திதி: ஷஷ்டி

அன்புச் செல்வனே!
உனது நீண்ட காலக் கனவுகள்
யாவும் நனவான போது - நீ
எம்மிடையே இல்லை
ஆறாத ரணமாக உன்
ஞாபகங்கள்...

தகவல்:
ஐ.பஞ்சரத்தினம் (தந்தை).
3/3. பத்திரகாளி கோயிலடி.
யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் கலங்கித் தவிக்கும்:
அப்பா, அம்மா, சகோதரிகள், மைத்துனர்மார்
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.
(45936)(26-14-17-24)

---


Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux Dulux

ICI

**ICI தயாரிப்பான CIC Paints (Pvt) Ltd இன்**
**தரமான பெயின்ற் (Paint) வகைகளான**

CIC

**DUCO DULUX PENTALITE PLUS**
**NECOL ALTRA MASTER PALETTE GLIDDEN**

இவற்றை உங்கள் தேவைக்கேற்றவாறு
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்:
யாழ். வன்னி அங்கீகாரம்பெற்ற
ஏக விநியோகஸ்தர்கள்:

# சீவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 222 2763

(C/43074) (54)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பொருத்தமற்ற போக்கு இது

விடுதலைப் புலிகளிடம் வான்கலங்கள், விமானங்கள் இருப்பதாகக் கூறப்படுவது குறித்தும் புலிகளிடம் உள்ள விமான ஓடுபாதை குறித்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் கூறியவை எனத் தெரிவித்து வெளியான கருத்துக்கள் தமிழர் தரப்பைப் பெரும் விசனத்துக்குள் ஆழ்த்தியிருக்கின்றன.

கண்காணிப்புக்குழுத் தலைவர் தமது பொறுப்புக்குரிய எல்லை தாண்டிக் கருத்துக் கூற முனைந்திருக்கின்றார் என்ற எண்ணம் தமிழர்களின் மனதில் தோன்றியிருக்கின்றது.

இலங்கையில் உள்ள - வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களின் சார்பில் செயற்படுகின்ற - ஊடகவியலாளர்களின் மத்தியில் உரையாடுகையிலேயே இவ்விடயங்கள் குறித்து அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார். இந்த ஊடகவியலாளர்கள் இட்டுமட்டான கேள்விகளைக் கேட்டு பிரமுகர்களை மடக்குவதில் வல்லவர்கள். அத்தகையோரிடம் தெரியாமல் வாயைக் கொடுத்ததால் இவ்வாறு தேவையற்ற விடயங்களை அவர் வாரிக்கொட்ட வேண்டியதாயிற்றோ என்னவோ தெரியவில்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான விடயத்தில் - விவகாரங்களில் - கண்காணிப்புச் செய்யும் பணிதான் கண்காணிப்புக் குழுவினருக்கும் அதன் தலைவருக்குக்கும் உரியது. அதில் பக்கச்சார்பின்றி - நடுநிலையாக - செயற்படுவது அவரது பொறுப்பு; கடமை.

இந்த இரண்டு தரப்புகளுக்கும் அப்பால் தம்மை இந்தப் பணியில் அமர்த்தியவர்கள் என்ற முறையிலும், யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த அனுசரணையாளர்கள் என்ற வகையிலும் நோர்வேத் தரப்புடன் சேர்ந்து இயங்கவேண்டிய கடப்பாடும் அவருக்கு உண்டு.

இதற்கு மாறாக, இலங்கையில் செயற்படாத ஒரு சக்தியோடு இலங்கையில் உள்ள இந்தத் தரப்புக்களில் ஒன்றைத் தொடர்புபடுத்திக் கருத்து வெளியிடுவது கண்காணிப்புக் குழுத்தலைவர் போன்ற முக்கிய பதவியில் இருப்பவருக்கு அழகுடையதல்ல; பொருத்தமானதல்ல.

விடுதலைப் புலிகள் வான் கலங்களைச் சுவீகரிப்பது இலங்கைத் தீவின் பாதுகாப்பை மட்டுமல்ல, அயல்நாடான இந்தியாவையும் பாதிக்கும் என்று கருத்துக்கூறியதன் மூலம் -

புலிகளின் பலத்தை - வலுவை - அண்டை நாடான இந்தியாவின் விவகாரத்தோடு ஒப்பிட்டு - கண்காணிப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் - கருத்துக் கூறியதன் மூலம் -

தமது பதவிக்குரிய அதிகார எல்லையை அவர் தாண்டிவிட்டார் என்றே கருதவேண்டியிருக்கின்றது.

புலிகளின் பலத்தை, அவர்கள் சம்பந்தப்பட்ட விடயத்தை இன்னொரு நாட்டின் பாதுகாப்போடு கொண்டுபோய்ச் செருகிக் கருத்துக் கூறுவதற்கு அவர் என்ன இராணுவ விமர்சகரா? இல்லையே. அவருக்கு ஒரு கண்ணியமான பதவிக்குரிய பொறுப்பும், கடமையும் உண்டு.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு ஒன்றைத் தேடும் தமிழர் தரப்பும் , அவர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான புலிகளும் நமது அயல்நாடான இந்தியாவுடன் சுமுக உறவைப் பேணுவதன் மூலம் தமது உயரிய இலக்குகளை அடைய முடியும் எனக் கருதுகின்றனர்.

இத்தகைய நிலையில் - புலிகள் விமானங்களைச் சுவீகரிப்பது இந்தியாவைப் பாதிப்பதாக உண்மையில் இருந்தால் கூட, இலங்கையில் இராணுவ விவகாரங்கள் சம்பந்தப்பட்டவற்றில் நடுநிலையாளராக நின்று, விசாரித்து, தீர்ப்பு வழங்கவேண்டிய நீதிபதி ஸ்தானத்தில் அமர்ந்திருப்பவர் அதற்கான கண்ணியத்தைக் காப்பாற்றியே ஆகவேண்டும். நீதிபதி ஸ்தானத்தில் இருப்பவர் வழக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் தொடர்புபட்ட விடயங்களைக் குறிப்பிடலாம், விமர்சிக்கலாம், அவை குறித்துக் கருத்தும் கூறலாம். அதைவிட்டு, வழக்கில் ஒரு கட்சிக்காரருக்கும், வழக்கில் சம்பந்தப்படாத வேறு ஒரு தரப்புக்கும் இடையில் 'கொழுவி' வைப்பதுபோல பகிரங்கமாகக் கருத்துக் கூறிக் குழப்புவது, அந்த நீதிபதியின் நடுநிலைத் தன்மையை - சுயாதீனப் போக்கை - கேள்விக்குள்ளாக்கும்.

சகல இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும் என ஒப்பந்தம் கூறுகின்றது.

ஆனால், இலங்கை விமானப்படை ஆள் இல்லாத வேவு விமானங்களைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவச் செய்து புலிகளின் முகாம்கள், தளங்கள், இராணுவ மையங்கள், நிலைகள், பயிற்சிகள், தயாரிப்புகள் போன்றவற்றை உளவு பார்க்கின்றது. புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படும் விமானங்களைக் கூட அரசுத் தரப்பு இத்தகைய வேவு நடவடிக்கை மூலம்தான் கண்டுபிடித்தது என்று கூறப்படுவது புதிய விடயமல்ல. அப்படி ஆளில்லா விமானங்கள் மூலம் வேவு நடவடிக்கைகளை அரசுத் தரப்பு மேற்கொள்கிறது என்பதை இனித்தான் கண்காணிப்புக் குழுவுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதல்ல.

இப்படி மற்றைய தரப்பின் பிரதேசத்துக்குள் ஊடுருவுவதும் வேவு பார்ப்பதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் - சகல விதமான இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்படல் அவசியம் என வலியுறுத்துகின்ற ஷரத்து 1.2 பிரிவை - குறிப்பாக ஷரத்து 1.2 (அ) பிரிவை - அப்பட்டமாக மீறும் செயல்களாகும்.

அதைப் பகிரங்கப்படுத்தி, அரசுத் தரப்பைக் கண்டிக்கத் திராணி இல்லாத கண்காணிப்புக்குழுத் தலைவர் "புலிகள் தமது விமானங்களைப் பறக்கவிட்டால் அது இலங்கை நாட்டின் ஆகாய எல்லையை மீறுவதாக மட்டுமல்லாமல், சர்வதேச சட்டத்தையும் மீறுவதாக அமையும்", என்று இனிமேல் நடக்கப்போகின்ற ஒரு விடயத்துக்காகத் தீர்ப்புக் கூற முயல்கிறார்.

இது அவருக்குக் கட்டாயம் இருக்கவேண்டிய நடுநிலைப் போக்குடைய தன்மைக்கு மாறானதாகும்.

# ஜனாதிபதி - ஜே.வி.பி. இரண்டு சுற்றுப் பேச்சு; பொதுக்கட்டமைப்புக் குறித்து மூச்சே இல்லை

கொழும்பு.மே29

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் இரவு ஜே.வி.பி. தலைவர்களுடன் இரண்டு சுற்றுப்பேச்சுக்களை நடத்தினார். ஆனால், எந்தச் சமயத்திலும் பொதுக்கட்டமைப்புக் குறித்து இப்பேச்சுக்களில் இரு தரப்பிரனரும் மூச்சே விடவில்லை எனத் தெரியவருகின்றது.

ஜே.வி.பி. தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முதலாவது சுற்றுப் பேச்சு நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணி முதல் 9 மணிவரை நடைபெற்றது. அப்பேச்சுக்களில் ஜே.வி.பி. தரப்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ. அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் பங்குபற்றினர். ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் கதிர்காமர், அனுரா பண்டாரநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சுக்களில் மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து அதிகம் பேசப்பட்டது. அந்தப் பிரேரணையை சற்று காலத்துக்கு விட்டுக்கொடுக்கும்படியும், முதலமைச்சரை நீக்குவது அரசுக்கு நெருக்கடியான விடயமாக அமையும் என்பதால் அதில் விட்டுப்பிடிக்கும்படியும் ஜனாதிபதி, ஜே.வி.பியினரைக் கேட்டுக் கொண்டார் எனத் தெரிகின்றது.

ஆனால், இவ்விடயத்தில் மசிந்து கொடுக்க ஜே.வி.பியினர் மறுத்துவிட்டனர் என்றும், மேல் மாகாண முதல்வருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் இருப்பதால் இதில் பின்வாங்கும் விடயத்துக்கே இடமில்லை என்று கூறிவிட்டனர் என்றும் தெரியவந்தது.

இந்தச் சந்திப்புக்கு ஜே.வி.பியின் அமைச்சர் விஜித்த ஹேரத்தை ஜே.வி.பி. தலைவர்கள் அழைத்துச் செல்லவில்லை என்பதும் இப்பேச்சுக்களில் பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேசப்படவேயில்லை என்பதும் - குறிப்பிடத்தக்கவையாகும்.

அடுத்த சுற்றுப்பேச்சை ஆளும் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களோடு ஜனாதிபதி நடத்தினார்.

இரவு 9 மணி முதல் சுமார் 45 நிமிட நேரம் நடந்த இந்தச் சந்திப்பில், முன்னைய ஜனாதிபதி - ஜே.வி.பி. தலைவர்கள் சந்திப்பில் கலந்துகொண்டவர்களோடு அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, டியூ குணசேகர, டக்ளஸ் தேவானந்தா போன்றோரும் பங்குகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தால் எழுந்துள்ள நிலைமை குறித்தும் அதைச் சமாளிப்பதற்குத் தாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு விளக்கினார்.

நேற்றுமுன்தினம் காலை திருமலை விவகாரம் தொடர்பாகத் தமது தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் கட்சித் தலைவர்களுக்கு அவர் விளக்கினார் எனத் தெரிகின்றது.

கூட்டமைப்புக் கட்சிகளுக்கு இடையில் உள்ள குழப்பங்கள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட ஜே.வி.பி. தலைவர்கள் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் இதுவரைக்கும் கூட்டப்படவேயில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர். அதனால்தான் எல்லாக் குழப்பங்களும் என்றனர் அவர்கள்.

இந்தக் கூட்டம் கூட்டப்படாததால் ஒவ்வொருகட்சியும் தனித்தனியாகத் தன்பாட்டில் இயங்குகின்றன. பிரச்சினைகளைக் கலந்துபேசி, தீர்வுகண்டு ஒன்றாகச் செயற்படுவதற்குக் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டுவது அவசியம் என்றனர் அவர்கள்.

அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி . அந்தக் கூட்டங்களைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்வார் என அங்கு உறுதியளித்தார் என்று தெரியவந்தது.

நேற்றுமுன்தினம் மாலை ஐ.தே. கட்சி எம்.பியான மிலிந்த மொறகொட ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்து எஸ்.பி.திஸநாயக்கா விடயம் குறித்துப் பேசினார் என்றும் தெரியவந்தது. (எ-க)



வெசாக் பண்டிகையை முன்னிட்டு 533 ஆவது படையணியின்கீழ் நிலைகொண்டுள்ள 4ஆவது காலாற்படையினர் கடந்த 23ஆம் திகதி கைதடிச் சந்தியில் அன்னதான நிகழ்வு ஒன்றை நடத்தினர். தென்னிலங்கையிலிருந்து வருகைதந்தவர்கள் உட்படப் பொதுமக்கள் அன்னதானத்தில் பங்குகொண்டதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: பலாலி படைத்தலைமையகம்)

# ஜனாதிபதி சந்திரிகாவை மெச்சுகிறார் கிளின்ரன்

சென்னை, மே29

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைத் தமிழர்களுடன் இணைந்து மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதி பூண்டிருப்பதை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரன் பாராட்டியுள்ளார்.

ஐ.நா.சபையின் விஷேட பிரதிநிதியாக ஆழிப் பேரலை பாதித்த இடங்களைப் பார்வையிட வரும்அவர், நேற்றுமுன்தினம் சென்னையில் வைத்துப் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு பாராட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை ஜனாதிபதி, தமிழர்களுடன் இணைந்து செயற்பட முயல்வதை நான் பாராட்டுகிறேன்: மெச்சுகிறேன்.

இப்படி அவர் செயற்பட முயல்வது, இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தத்தை மேலும் தொடர வழிவகுக்கும். இதனால் சமாதானத்திற்கான வாசல்கள் திறக்கும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் குடும்பமும், இனப்பிரச்சினையை எதிர்கொண்டது. ஏன், அவரும் கூட ஒரு கண்ணை இழந்தார்.

இருந்தும் அவர் தொடர்ந்தும் தமிழர்களுடன் இணங்கிப் போவதற்கு முயற்சி எடுக்கிறார். இது அரசியல் தீர்வை அங்கு தோற்றுவிக்கும். அதற்கான சிறு முயற்சியே எனது விஜயம் எனத் தெரிவித்தார் ஆழிப் பேரலை விசேட பிரதிநிதி பில்கிளின்ரன். (எ-க)

# பாடசாலை அதிபரின் மணிவிழா நிகழ்வு

கொக்குவில், மே29

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் செ.செல்வராசாவின் மணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மணிவிழாச் சபையின் தலைவர் க.தேவராஜா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ச.சொக்கலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக இளைப்பாறிய உப அதிபர் சி.சிவசுப்பிரமணியமும் பங்குகொள்வர். (எ-76)

## உதயவாக்கு

வாழ்க்கையின் வெற்றியே போராட்டத்தில்தான் இருக்கிறது.
- காண்டேகர்.

## நாளை

*வைகாசி 16*
*திங்கட்கிழமை*
*30.05.2005*
*திதி : ஸப்தமி*
*முற்பகல் 10.39வரை*
நட்சத்திரம் : *அவிட்டம்*
*காலை: 06.47 வரை*
சதயம் *பின்னிரவு 05.23 வரை*
*சுபநேரம் : 11.52 - 01.22*
*ராகுகாலம்: 07.22 - 08.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்; சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,மே29

சிவராம் படுகொலையைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் பயமுறுத்தல்கள் மற்றும் கொலை அச்சுறுத்தல்கள் இவற்றில் மேலும் ஒரு சந்தர்ப்பம் என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகிறது. எனவே - இவ்வாறான படுகொலைகள் இடம்பெறுவதைத் தடுக்க உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளது ஊடக இயக்கம்.

வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியரான வி.தேவராஜிற்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அந்த இயக்கம் விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு -

வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியரான வி.தேவராஜின் இல்லத்திற்கும் மற்றும் அலுவலகத்திற்கும் தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகச் சுதந்திர ஊடக இயக்கத்திற்குத் தகவல் கிடைத்துள்ளது. தமிழ்நெற் இணையத்தள ஆசிரியரான தர்மரத்தினம் சிவராம் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறான கொலை மிரட்டல்கள் விடுக்கப்படுவதனையிட்டு சுதந்திர ஊடக இயக்கம் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

ஊடகவியலாளர் தேவராஜ் தமக்கு கிடைக்கப் பெறும் தொலைபேசி ஊடாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக மே மாதம் 25 ஆம் திகதி கல்கிசை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறும் கோரியுள்ளார்.

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் கடிதங்கள் மற்றும் தொலைபேசிகளினூடாக ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் பயமுறுத்தல்கள் மற்றும் கொலை அச்சுறுத்தல்கள் இவற்றில் மேலும் ஒரு சந்தர்ப்பம் என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகிறது. தேவராஜ் அவர்களின் கோரிக்கைப்படி இதுதொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அதற்குரிய அதிகாரிகளிடம் சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை விடுக்கின்றது - என்று அதில் உள்ளது. (எ-204)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ஏறிஸ்ற் இன், இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி, (அரசடி வீதி) யாழ்ப்பாணம். T.P.: 021 2225680, 0776 923623.**

(45666)(21-16-11-42)

உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீகக் குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்



## வாழும் கலைப் பயிற்சி

(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கிய)

மனஇறுக்கம், மனஉளைச்சல் நீங்கி தெளிந்த மனம்,அமைதி,தன்னம்பிக்கை வளர

இரத்த கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவற்றை நீங்கி உடல் ஆரோக்கியம் பெற

தன் சக்தி அறிந்து, உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டு செவ்வனே பணி செய்ய

## இலவச அறிமுக உரை

சாவகச்சேரியில்...
நாள்:- 30.05.2005 திங்கட்கிழமை மாலை 5 மணி
இடம்:- றிபேர்க் கல்லூரி அரங்கு, சாவகச்சேரி.

யாழ்ப்பாணத்தில்...
நாள்:- 30.05.2005 திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்:- இந்து சமயப்பேரவை, பலாலி வீதி, கந்தர்மடம்.

பயிற்சி நாள்கள் :- 31.05.2005 செவ்வாய்க்கிழமை முதல் 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை வரை

பயிற்சி நேரம் :-காலை 6 மணிமுதல் 8 மணிவரை
அல்லது
மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

*அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்*

மேலும் விவரங்களுக்கு:-
**வாழும் கலை அறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.**
தொ.பே. 077 9059 549, 077 9059 544, 222 6048, 0777 078 349
www.artofliving.org (45942)(42-11-16)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 09 - 1947 | 05 - 06 - 1999 |

### அமரர் வல்லிபுரம் முருகையா
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சஷ்டி

ஆண்டுகள் ஆறு ஆனதப்பா!
மறந்துவிடுமா எங்கள் உள்ளம்?
உங்கள் நினைவு எங்கள் எல்லோருடைய
மனதைவிட்டு என்றும் நீங்காதப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

உங்கள் பிரிவால் துயருறும்: **மனைவி, மக்கள், மருமகன்.**

(45887)(42-11-03)

## அந்தியேட்டி அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 03 - 1937 | 30 - 04 - 2005 |

### அமரர் சின்னத்தம்பி குமரகுரு
(சுழியோடி வைரப்பா)

கடந்த (30-04-2005) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த நாட்டுப்பற்றாளரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30-05-2005) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறுகின்ற மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை. (45680)(46-16-11-42)

**- குடும்பத்தினர்.**


### விற்பனைக்கு

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A.C. என்பவற்றுடன் கல்சியம், இரும்பு, தாதுப்பொருள்கள் என்பன அடங்கும்.

தொடர்பு: **BIO TEC ORIENT (PVT) LTD**
**இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.**
**021 4590907 (விவசாயப் பண்ணைக்கு அருகில்)** (45910)

### தையலுக்குத் "தையல்" தேவை

சிறந்த அனுபவமுள்ள சான்றிதழ் பெற்ற ஆண், பெண் ஆடை தைக்கத் தெரிந்த 'பெண்' தொழிலாளி ஒருவர் தேவை. இதற்குத் தகுதியானோர் தங்களது சுயவிவரக் கோவையை திருமதி சிவகுமார் 104, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15-06-2005இற்குள் அனுப்பிவைக்கவும்.

(45863) **- உரிமையாளர்.**

### HOUSE WANTED

European couple looking for rental house or villa in southern part of Jaffna. Rental period for initially one year, semi or fully furnished,

*Contact*
Mr. Sured at HUDEC,
Telephone: 021 222 7435, office hours. (45805)

### பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்


திருமதி. வனஜா சுரேஸ்குமார்


திரு. ஜெகநாதன் சுதர்சன்

எமது நிறுவனத்தினூடாக தகவல் தொழில்நுட்பமானி (Bachelor of Information Technology – BIT) கற்கைநெறியைப் பூர்த்தி செய்து இன்று கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது நிறுவன மாணவர்களான திருமதி. வனஜா சுரேஸ்குமார் திரு. ஜெகநாதன் சுதர்சன் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையுடன் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள்

IIS City Campus
# 181, Navalar Road,
Jaffna.


### வாக்காளர் பட்டியல் பார்வைக்கு

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் வாக்காளர் பட்டியல் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகங்கள், மாநகர சபை, பிரதேச கிராம சேவையாளர் பிரிவுகள், தபால் நிலையங்கள் ஆகிய இடங்களில் வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும். வாக்காளராகப் பதிவதற்கான தகுதியுள்ளவர்கள் தமது பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பெயர் தவறவிடப்பட்டவர்கள் தமது பகுதி கிராம அலுவலினூடாக எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என யாழ்மாவட்டத் தேர்தல் ஆணையாளர் எஸ்குகநாதன் தெரிவித்தார்.

(ஒ-204-203)

### கல்விக்கருத்தரங்கு

பகுதிநேர வேலை வாய்ப்புடன் சிங்கப்பூரில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு 'ஸ்ரிர்லிங் ஸ்கூல் ஒப் பிசினஸ்' என்ற நிறுவன ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(8-202)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டப்பின் படிப்புகள் பீடம்

பட்டப்பின் கல்வித் தகைமை [பகுதி நேரம் I (2004/06)& முழு நேரம் (2004/05)]
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பட்டப்பின் கல்வித் தகைமை [பகுதி நேரம் II (2003/05)]
(யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)

### முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2005

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தகுதியான மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. வவுனியா வளாகத்தில் கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் பீடாதிபதி அலுவலகம், வியாபாரக் கற்கைகள் பீட வவுனியா வளாகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்கள், பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப்படிப்புகள் பீடத்திலும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பற்றுச்சீட்டுடன் இணைத்து எதிர்வரும் 06.06.2005 இற்கு முன்னர் அவ்வப் பீடங்களில் ஒப்படைத்தல் வேண்டும்.

பரீட்சை அனுமதி அட்டை, நேரசூசி என்பவற்றை எதிர்வரும் 10.06.2005 முதல் அவ்வப்பீடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
யாழ்.பல்கலைக்கழகம்,
26-05-2005

(ச.45870)(48-15-11-18)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 10 - 1961 | 09 - 06 - 2004 |

### திருமதி ஜீவா இரத்தினேஸ்வரன்

அன்போடும் பாசத்தோடும் எம்மோடு
இணைந்து பண்புடன் வாழ்ந்த எம்
இனிய அம்மாவே! நீங்கள் எம்மை
விட்டு மறைந்து போனாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மாறாது!

31, நடுத்தரு லேன், அரியாலை.

பாசமிகு கணவர், பிள்ளைகள், தாய், தந்தை, சகோதரர்கள்.

(45858)(46-11-16-42)


## JAFFNA DIRECTORY

### இலங்கைத் தமிழ் மக்களின் முதலாவது தொலைபேசி மற்றும் முகவரிக் கோவை

யாழ்ப்பாணத்தின் கல்வி, வியாபார, மற்றும் கனனி நிலையங்கள், வைத்தியசாலைகள், வைத்தியர்கள், அரச அலுவலர்கள், பாடசாலைகள், அதிபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கோயில்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள், கூட்டுத்தாபனங்கள், பத்திரிகைகள் அடங்கலாக அனைத்து விபரங்களும் அடங்கிய JAFFNA DIRECTORY வெளியிடப்படுகிறது. அத்துடன் இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் கொழும்பு, மற்றும் வெளிமாவட்ட விளம்பரங்களோடு வெளிநாடுகளில் வாழும் மக்களின் பல விபரங்களும் அடக்கப்படுகின்றது.

1. அளவு ☐ 27cm* 21cm (அண்ணளவாக A4)
2. பக்கங்கள் ☐ 480 3. மொழி ☐ ஆங்கிலம், தமிழ்
4. பிரதிகள் ☐ 30,000 5. வெளியீடு ☐ 24 July 2005
6. விளம்பர கட்டணம் ☐ இலவசப் பட்டியலிடல் இலவசம் (யாழ் மட்டும்)
☐ பெட்டி விளம்பரம் - 300/=
☐ Coulmns Cm - 200/=
7. வர்ண விளம்பரம் ☐ முழுப்பக்கம் 40000/= ☐ அரைப்பக்கம் 25000/=
8. அட்டை(வர்ணம் மட்டும்) ☐ பின் அட்டை 100,000/= ☐ உள் அட்டை 50000/=
9. விளம்பரம், விநியோகம் ☐ 50% யாழ்ப்பாணம் ☐ 25% கொழும்பு
☐ 15% ஏனைய மாவட்டங்கள் ☐ 10% வெளிநாடு

#### இலவசப் பட்டியலிடலுக்கான விண்ணப்பப்படிவம்

தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பவும் (மேலதிக விண்ணப்பத்திற்குப் பிரதியெடுத்துப் பயன்படுத்தவும்)

நிறுவன அல்லது அலுவலகப் பெயர் : ......................................
வகை : ☐ அரச ☐ அரச சார்பற்ற : ............................(உ+ம்) பாடசாலை
☐ தனியார் ☐ தனிநபர் : ............................(கீழுள்ள பட்டியலிலிருந்து)
(தனியார் மற்றும் தனிநபர்கள் தங்கள் அடையாள அட்டையின் பிரதியினை இணைக்க வேண்டும்)
முகவரி : ......................................
தொடர்பு கொள்பவர் பெயர் : .................... பதவி :....................
தொலைபேசி :.................... Mobile (இருப்பின்):....................
அடையாள அட்டை இல :.................... (தனியாருக்கானது)
ஒப்பம் :.................... திகதி :....................

• சிறு கைத்தொழில் • சினிமா • புடைவை • கல்வி நிறுவனம் • புத்தகசாலை • தொலைத்தொடர்பு • வாகன முகவர்கள் • மின் இலத்திரனியல் • மருந்தகம் • வைத்தியம் • சுற்றுலா விடுதி • பதிப்பகம் • களஞ்சியம் • கட்டட வேலை • ஒப்பந்தக்காரர் • கூட்டுத்தாபனம் • நகைத்தொழில் • காரியாலயம் • முகவர் • உணவுச்சாலை • கணனி நிறுவனம் • அழகுக்கலை • சீமெந்து • அரைக்கும் ஆலை • அடைவுத்தரகர் • மரக்காலை • நில அளவையாளர் • அரங்கு • இரும்பு வேலை • ஆடைத்தொழில் • தையல் தொழில் • Internet • Website • வன் பொருட்கள் • முதியோர் இல்லம் • சிறுவர் இல்லம் • மனநலமற்றவர் இல்லம் • ஏற்றுமதியாளர் • இறக்குமதியாளர் • இனிப்பு வகைகள் • இசைத்தட்டு • இசைவகுப்பு • வாகனத்திருத்துனர் • தளபாடக்கடை • இளைஞர் சங்கம் • சமச்சடங்குச் சேவை • காப்புறுதி நிறுவனம் • சமுர்த்தி/கிராமிய வங்கி • சனசமூக நிலையம் • சலவைத் தொழிலகம் • விமானச்சீட்டு வழங்குனர் • தபால் நிலையம் • கூரியர் சேவை • பாற்பண்ணை • கோழிப்பண்ணை • சிறு உணவு உற்பத்தி • ஆற்றுப்படுத்துதல் • எண்ணெய் நிறுவனம் • சமய நிறுவனம் • வரைபுனர் • கோயில் • ஒலி, ஒளி அமைப்பு • தச்சு வேலை செய்பவர் • பாடசாலை • தொழில்நுட்பக்கல்லூரி • பல்கலைக்கழகம் • சட்டத்தரணிகள் • சமூக சேவை நிறுவனம் • சிகை அலங்கரிப்பு நிறுவனம் • படப்பிடிப்பாளர் • பலசரக்கு விற்பனையாளர் • வெளிநாட்டு நாணயத் தரகர் • படச்சட்ட உற்பத்தியாளர்கள் • மீன் கடலுணவு விற்பனையாளர் • முதலீட்டு ஆலோசனையாளர் • வேலைவாய்ப்பு முகவர் • விலங்கு வைத்தியர்கள் • இறப்பர் முத்திரை வழங்குநர்கள் • வர்த்தக சங்கங்கள் • விளம்பர முகவர்கள் • மோட்டார் கார் விற்பனையாளர்கள், திருத்துநர்கள் • ஏனையவை

**கட்டண விளம்பரங்களுக்கு நேரடியாகத்தொடர்பு கொள்ள : 4591571**

JAFFNA DIRECTORY
(45935) 841, HOSPITAL ROAD, JAFFNA. PH : 021 - 4591571

# குவான்டனாமோ சிறையில் நடந்த சம்பவமும் 'நியூஸ் வீக்' சஞ்சிகை வெளியிட்ட செய்தியும்

உலக வலம்
பேனா

பிறமத சின்னங்களை - மிகப் புனிதமாகக் கருதுபவைகளை இழிவுபடுத்துவ தென்பது மேற்குலகினருக்கு மிகவும் இலகுவாகக் கைவந்தகலை.

- அதில் ஒன்றுதான் குவான்டனாமோ சிறையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம்.

அங்கு சிறையில் வைக்கப்பட்டுள்ள இஸ்லாமிய கைதிகளை சிறை அதிகாரிகள் படுமோசமாக சித்திரவதை செய்தார்கள் என்பது பற்றிய விவரங்கள் பத்திரிகைகளில் விளம்பரமாகிப் பழைய கதையாகிவிட்டன. அவைபற்றி உலகம் மறக்க தலைப்பட்டிருந்த வேளையில் தான் இந்தப் புதிய சம்பவம் பற்றியசெய்தி வெளியாகியிருந்தது.

இஸ்லாமியரின் புனிதநூலான அவர்கள் சமயத்தின் அடிப்படை அம்சமான அல்-குர்ஆனின் பிரதிகள் கழிவறைகளில் போடப்பட்டதாகக் கூறப்பட்டதே அந்தச் சம்பவமாகும்.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், அந்தச் செய்தியை, ஏதோ தமக்குக் கிடைத்த பிரத்தியேக செய்தியாக வெளியிட்டு பெருமையைத் தேடிக்கொள்ள முயன்ற மிகப்பொறுப்புவாய்ந்த ஒரு பத்திரிகையான 'நியூஸ் வீக்' சஞ்சிகை அசசெய்தி தவறானது என்று இப்பொழுது மறுப்பு வெளியிட்டிருப்பதாகும்.

தவறான தகவல்களைக் கொண்டு அச்செய்தி அறிக்கை வெளியிடப்பட்டிருப்பதாக அந்தப் பத்திரிகை நிறுவனம் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதுவும் பென்ரகன் நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் நடைபெற்ற விசாரணையில் அச்செய்தியில் உண்மையில்லையென்று கண்டறியப்பட்டதன் பின்தான் அநாமதேய வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்களைக் கொண்டு அச்செய்தி எழுதப்பட்டதாக அப்பத்திரிகை நிறுவனம் அறிவித்திருக்கிறது.

**பாரதூரமான விடயமல்லவா**

எவ்வளவு பாரதூரமான ஒரு விடயம்! இது வெளிவந்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் எப்படியிருக்கும்? அதனால் பாதிக்கப்படும் நலன் எவை என்பதையெல்லாம் ஆராயாமல் ஒரு பரபரப்பு (Sensational) செய்தியாக அதனை வெளியிட்டமை ஒரு பொறுப்புவாய்ந்த பத்திரிகைக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இந்தச் செய்தியால் உலகம் முழுவதிலுமுள்ள இஸ்லாமியர்கள் கொதித்தெழுந்திருக்கிறார்கள். ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. இவை உலகளாவிய அளவில் அமெரிக்காவுக்கும் அதன் நேசநடுகளுக்கும் எதிராகப் பெரும் எடுப்பில் வெடித்து நாசம் விளைவிக்கு முன்னர் பென்ரகன் விழித்துக்கொண்டதைப் பாராட்டவேண்டும்.

இம்மாதிரி ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதனால் அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டுவரும் அல்-கெய்டா போன்ற அமைப்புகளின் வளர்ச்சிக்குத்தான் உதவியாக இருக்கும். உலக அமைதியை மேலும் கெடுப்பதாகவும் அமையும்.

'நியூஸ் வீக்' போன்ற பத்திரிகைகளே இவ்வாறு பொறுப்பற்றமுறையில் நடந்துகொள்ளுமானால் உலகில் - குழப்பங்களையும், இனக்குரோதங்களையும், தூண்டிவிட்டு உயிர்பிழைக்கும் நோக்கம் கொண்ட பத்திரிகைகளை என்னவென்று கட்டுப்படுத்தமுடியும்?

மறைக்கப்படும் செய்திகளைப் புலனாய்வு செய்து தேடிக்கண்டுபிடிக்கவேண்டும். அவ்வாறு கிடைப்பவற்றைச் சரியானவைதானவென்று ஆராய வேண்டும் -சரியானவை என்று கண்டுகொண்டால், அவைகளை மேலும் தாமதிப்பதற்கு நியாயமில்லை - அவைகளை உடனடியாக வெளியிட்டு மக்கள் அறியச்செய்துவிடவேண்டும் என்பது கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த தோமஸ் டிலானே என்ற புகழ்பெற்ற பத்திரிகையாளரின் கூற்று.

ஆனால், ஒரு செய்தியை வெளியிடுவதானால், ஏற்படும் பொதுவானதாக்கம் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் உலகுக்கும் ஏற்படக்கூடிய பிரதிகூலமான விளைவுகளைப்பற்றிச் சிந்திக்கத்தேவையில்லையென்று அவர் கூறியிருப்பதாகத் தெரியவில்லை.

எந்தச் செய்தியும், ஒருமக்களைப் புணபடுத்துமானால், அதனால், பெரும் தீமை விளையக்கூடும் என்று தெரியுமானால், அவ்வாறான செய்தியை வெளியிடாமல் விடுவதனால், எதுவித நாட்டமும் ஏற்படப்போவதில்லை.

அவ்வாறானால் உண்மைச் செய்திகளை இருட்டடிப்புச்செய்து விடுவது பத்திரிகாதர்மமாகுமோ என்ற கேள்வி எழுவது இயற்கை.

இவ்வாறான நிலைமைகளில்தான் பத்திரிகைகள் தங்களுக்கென ஒழுகக்க் கட்டுப்பாட்டு விதிகளை ஏற்படுத்திக்கொண்டு செயற்படுத்துவதை வலியுறுத்துகிறார்கள் இத்துறைசார்ந்த நிபுணர்கள்.

'நியூஸ் வீக்' போன்ற பத்திரிகைகளிடமிருந்து இப்படியான முன்மாதிரிகளைப் பத்திரிகை உலகம் எதிர்பார்க்கின்றது. ஆனால், அநாமதேய வட்டாரங்களை நம்பி செய்திகளைப் பிரசுரிக்குமளவுக்கு இப்பத்திரிகை சென்றிருக்கக் கூடாது. என்றாலும், காலம் கடந்தேனும் தவறை அவர்கள் உணர்ந்து இனி அவ்வாறு தவறு இடம்பெறமாட்டாது என்று அறிவித்திருப்பது ஆறுதல் தருகின்றது.

**சின்னங்களை இழிவுபடுத்துவது ஒருவாடிக்கை**

பிறமதச் சின்னங்களை இழிவுபடுத்துவது மேற்குநாடுகளில் சர்வசாதாரணம். இதற்கு அந்த நாடுகளின் அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும. அல்லது அவ்வாறான செயற்பாடுகளால் பாதிக்கப்படும் மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடுகள் ஏதாகிலும் செய்தாக வேண்டும்.

காலத்துக்குக்காலம் இது வெவ்வேறு விதமாக நடைபெற்றுவருகின்றது.

அண்மைக்காலத்தில்தான் புத்தபெருமானின தலையின் மீது ஒருவர் அமர்ந்துகொண்டிருப்பது போன்ற படம் ஒன்றை விளம்பரத்தில் பிரசுரித்திருந்த சினிமாப் படநிறுவனம் ஒன்று கண்டனத்துக்குள்ளாகி - அவ்விளம்பரத்தை வாபஸ் பெற்றுக்கொண்டது. இன்னொரு மதுபான நிறுவனம் பிள்ளையாரின் கையில் 'இந்திக்கா' என்ற பியர் போத்திலை வைத்திருப்பது போன்ற படத்தை வெளியிட்டு கண்டனத்துக்குள்ளானது. சில காலத்துக்கு முன் இந்துமதக் கடவுள்களை கழிவறை தரைகளிலும் மிதிபடிகளிலும் பொறித திருந்த இங்கிலாந்துக் கம்பனிகள் எதிர்ப்பின் காரணமாக அவைகளை வாபஸ் பெற்றுக் கொண்டன. இந்துமதக் கடவுள்களின் படங்கள் கவர்ச்சியாக இருப்பதால் விளம்பரங்களில் பயன்படுத்தியதாக அவர்கள் கூறியிருந்தார்கள. கவர்ச்சியாக இருக்கின்றன என்பதால் கழிவறைகளுக்கும் மிதிபடிகளுக்கும்தான் பாவிக்க வேண்டும் என்ற உண்மை இவர்களுக்கு எப்படி வருகின்றது.

என்னதான் வெளிநாகரிகத்தில் மேற்குலகம் வளர்ந்துவிட்டாலும் உள்ளத்தின் அளவில் - அவர்கள் இன்னும் எவ்வளவோ முன்னேறியாகவேண்டும் என்பதையே இவை காட்டுகின்றன.

**துணை போகின்ற சக்திகள்**

இன்று இலங்கை போன்ற நாடுகளில் இனக்குரோதங்களும் -பிணக்குகளும் தீர்வுகாண முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளன என்றால் அதற்கு தென்னிலங்கையிலுள்ள இனவிரோத சக்திகளுக்குத் துணைபோகின்ற பத்திரிகைகளும் காரணமாய் இருந்துள்ளன - இருக்கின்றன வென்று தென்னிலங்கையைச் சேர்ந்த அறிவாளிகளே ஒப்புக்கொள்கிறார்கள்.

நாடும் - நாட்டு மக்களும் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்ற ரீதியில் பத்திரிகைகள் செயற்படுவதை எழுத்து சுதந்திரம்- கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அப்படியே விட்டுவிடலாமா? என்ற வகையில் சமீப காலமாக சில பல வட்டாரங்களில் விவாதிக்கப்படுவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைப்பதை எவரும் விரும்பமாட்டார்கள்தான். அதற்காகவே இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் கழகம் சில நடைமுறை ஒழுக்க நெறிகளை வெளியிட்டிருக்கின்றது. இந்த ஒழுக்கவிதிகளை நம் நாட்டில பத்திரிகைத்துறையினர் கடைப்பிடிக்கத் தொடங்குவார்களானால் எதிர்காலத்தில் ஆரோக்கியமான விதத்தில் இத்துறை வளர இடமுண்டு.

ஆனால், பெரும்பான்மை என்ற இன மேலாதிக்க உணர்வு தளரும் வரை அவர்களை எவரும் திருத்தமுடியாது.

## பாகிஸ்தானுடன் உறவை வளர்க்க இந்தியப் பிரதமர் சிங் ஆர்வம்

**பாக். - இந்திய உறவில் முன்னேற்றம்**

அண்மையில் இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெற் போட்டியைப் பார்த்து மகிழ்வதற்காக பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஸ் முஷராப் புதுடில்லிக்கு வந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் மேலும் சீர் பெற்றுவருவது அவதானிக்கப்படுகின்றது.

காஷ்மீர் பிரச்சினையை முற்றுமுழுதாகத் தீர்த்துக்கொள்வதற்கு இருநாடுகளும் முனைப்பான முன் நடவடிக்கைகளை எடுத்து வருவதும் கண்கூடு.

இதற்குள் ஒருபடி மேலே சென்று பாக். அதிபர் முற்றிலும் புதிய யோசனையொன்றை வெளியிட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்த யோசனையின் விவரங்கள் இன்னமும் சரியாக வெளியிடப்படாவிட்டாலும் அவைகளில் பெரும்பாலும் இருதரப்பும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அம்சங்கள் நிறையவே இருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

அண்மையில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் காங்கிரஸ் கட்சியின் கூட்டணி அரசு பதவிக்கு வந்த ஓராண்டுப் பூர்த்தியையொட்டிய நிகழ்வில் உரை நிகழ்த்தியபோது பாகிஸ்தானுடனான இரு தரப்பு உறவை மேம்படுத்திக் கொள்வதில் தமது அரசு அதிக அக்கறை கொண்டிருப்பதாகவும் அதில் பெரும் மதிப்பு வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தென் ஆசியாவில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படவேண்டும் என்பதில் அதிக மதிப்பு வைத்திருக்கின்றோம். அண்டை நாடுகள் எல்லாவற்றோடும் ஒத்துழைப்பை அதிகரித்து பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற துறைகளில் முன்னேற விரும்புகிறன்றோம் என்று அவர் கூறினார்.

பர்வேஷ் முஷாரப்புடனே தமது சந்திப்பு இருதரப்பு உறவை குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றியிருப்பதாக அவர் கூறினார். எமது நாட்டிலுள்ள மக்கள் வாழ்க்கை முறையில் உயர் தராதரங்களை எதிர்பார்கிறார்கள். அதனை நிறைவேற்றாதுவிட்டால் நாம் தோல்விகண்டவர்களாவோம் என்று அவர் தெரிவித்தார்.

★ ★ ★

இதற்கிடையில் காஷ்மீரில் பிரிவினை கோரி இயக்கம் நடத்திவரும் சகல கட்சிகளின ஹிரியட் மாநாடு பிரதிநிதிகளை பாகிஸ்தானுக்கு வரும்படி விடுத்தகோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களை அண்மையில் காஷ்மீரின் இந்திய பகுதியிலிருந்து பாகிஸ்தான் வசமுள்ள பகுதிகளுக்கு ஆரம்பிக்கப்பட்ட பஸ்சேவையைப் பயன்படுத்தும்படி கேட்டிருப்பதாக பாகிஸ்தான் வெளியறவு அமைச்சின் பேச்சாளர் ஜவில அப்பாஸ் கிலானி என்பவர் கூறியிருக்கிறார். ஆனால், ஹிரியட் மாநாட்டு பிரதிநிதிகள் பாகிஸ்தான் செல்வதை இந்தியா அனுமதிக்குமா என்பது தெரியவில்லை. மேலும் குறித்த பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டதைச் சில முக்கிய ஹிரியட் மாநாட்டு கட்சிகள் எதிர்த்து வந்துள்ளன. அதனால், இந்த பஸ்சேவையைப் பயன்படுத்தி அவர்கள் பாகிஸ்தானுக்குச் செல்வார்களா என்பதும் தெரியவில்லை.



காங்கிரஸ்கட்சி தலைமையிலான அரசு ஒருவருடம் பூர்த்திசெய்ததையொட்டிய நிகழ்வில் பிரதமர் மன்மோகன்சிங் உரையாற்றுகிறார். படத்தில் சோனியாகாந்தி - தயாநிதிமாறன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## சீன-ஜப்பான் உறவில் மேலும் விரிசல்

**ஜப்பான் - சீனா உறவில் மேலும் முறுகல்**

ஜப்பானுக்கும் சீனாவுக்குமிடையிலான முரண்பாடுகள் மேலும் முறுகலடைவதாகவே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

கடந்த முப்பது வருடகாலமாக இருநாடுகளுக்குமிடையில் பல்வேறு விடயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

அண்மைக் காலத்தில் ஜப்பானிய பாடப் புத்தகங்களில் 2 ஆவது உலகப் போரின் போது ஜப்பான், சீனாவில் மேற்கொண்ட அட்டூழியங்கள் பற்றிய விடயங்கள் மறைக்கப்பட்டு விட்டதாகவும் அதனை ஜப்பானிய அரசு அங்கீகரித்ததாகவும் கூறி சீனாவிலும் வேறு இடங்களிலும் ஜப்பானுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அந்தவிடயம் ஒருவாறு தணிந்துவரும் வேளையில் இப்பொழுது இன்னொருவிடயம் தலைதூக்கியிருக்கின்றது.

யக்கூனி என்ற இடத்தில் இருக்கும் ஜப்பானிய போர்வீரர்களின் நினைவுத் தூபிக்கு ஜப்பானியர்கள் குறிப்பாக ஜப்பானிய தலைவர்கள் சென்று அஞ்சலி செலுத்துவதை சீனர்கள், சீனத்தலைவரர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். இரண்டாவது உலகமகாயுத்தத்தில் மரணமான 20இலட்சத்து 50ஆயிரம் பேரை நினைவு கூர்வதாகும். இந்த யசுக்குளிசமாதி இங்கு மிகப்பெரிய 14 போர்க் குற்றவாளிகளின் ஞாபகச் சின்னமும் இருக்கிறது. இந்தச் சமாதிக்கென்று ஜப்பானியத் தலைவர்கள் அஞ்சலி செலுத்துவதானது அந்தப் போர்க்கால குற்றச் செயல்களை ஜப்பானியர் அங்கீகரிப்பதாகும் என்று சீனர்கள் கருதுகிறார்கள்.

ஜப்பானிய அரசு நேர்மையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அது வெறுவார்த்தைகளில் அல்ல செயல்களில் பிரதிபலிக்க வேண்டும் என்று 'பீஜிவி நியூஸ்' பத்திரிகை தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது.

ஜப்பானியப் பிரதமர் ஜினிசிரோ கொய்சுமி அந்தப் போர்க்கால நினைவுச் சமாதிக்கு விஜயம் செய்யவிருபபதாக் வெளிவந்துளள செய்திகள் சீனர்களை மேலும் ஆத்திரங்கொள்ளச்செய்துள்ளது.

2001ஆம் ஆண்டு பதவியேற்றத்திலிருந்து ஜப்பானியப் பிரதமர் அந்தச் சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

கடந்தவாரம் டோக்கியோ சென்றிருந்த சீன உதவிப் பிரதமர் வூயி ஜப்பானியப் பிரதமருடனான ஒரு சந்திப்பிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டு திரும்பியிருந்தார். மேற்படி நினைவுச்சின்னம் தொடர்பாக ஜப்பானிய அதிகாரிகள் சிலர் வெளியிட்ட கருத்துக்கள் பிடிக்காததால் சீன அமைச்சர் அவ்வாறு செய்தார்.

யசுகுனி நினைவாலயத்துக்கு விஜயம் செய்வது தொடர்பாக ஏனைய நாடுகள் அலட்டிக்கொள்ளத்தேவையில்லையென்று கொய்சுமி கூறுகிறார். இந்த விஜயங்களின் கருத்து என்னவென்பது அவருக்குத் தெரியும். இன்றும் அவர் அங்கு போவதற்கு உறுதியாய் இருக்கிறார். இதனால், அண்டை நாடுகளின் உறவு பாதிக்கப்படும் என்பதை அவர் உணரவில்லை என்று சீன தேசியப் பத்திரிகையொன்று எழுதியுள்ளது.

★

# விவசாய பீட கட்டடப் பணிகள் அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே29

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்திற்குரிய கட்டடவேலைகள் கிளிநொச்சியில் அடுத்தமாத முற்பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

கிளிநொச்சியில் விவசாய பீடம் முன்னர் அமைந்திருந்த வளாகத்தில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடத்திற்கான பூர்வாங்கப் பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்றும் கட்டடப் பணிகள் அடுத்தவருட இறுதிப் பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டுவிடும் என்றும்-

விவசாய பீடாதிபதி பேராசிரியர் சு.இராசதுரை தெரிவித்தார்.

கட்டடப் பணிகள் பூர்த்தியாகியதும் விவசாய பீடம் அங்கு இயங்க ஆரம்பிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-12)


## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



(C/43071)

இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms-

SCHOLARS INFORMATION CENTER

2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.

email : peter@scholars-info.com



## றோயல் தங்கப் புதையல் போட்டி

இரக்குமதி செய்து பொதி செய்வோர்

றோயல் இண்டஸ்ரீஸ்

கொழும்பு - 12

T.P.:- 0777- 277670, 011-4712439.

ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

**சிவா நறுமணப் பூங்கா,**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 222-2567




**றோயல் குளுக்கோஸ்**

**பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.**

(C/42504) (54)



## அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka

பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)

இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிக்கப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)

இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

(C/43073)

**CODseas** (Cod Liver Oil)

உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)

இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் எந்நாளும் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது. மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள்,விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.

Tel : 021 2223188



EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

*Your health partner in life*



# VACANCY

## Communication / Media relations officer

CARITAS - Hudec is a Humanitarian Organization.
Within the framework of its 2 years program for relief after the tsunami disaster, CARITAS - Hudec needs a communication/media relations officer, operating in Jaffna and Vanni districts, with basis in Jaffna.

**Job description, M/F**
**Communication / Media relations officer**

The officer is responsible for organizing the logistics of the (national and international) visitors to CARITAS-Hudec who stay in Jaffna as well as their travels (clearances, transport, vehicles, logistics and accommodations) to the field.
The officer is to accompany the visitors on field trips, where he/she presents the program activities, is in charge of translation and ensures a good understanding by the visitors of the CARITAS-Hudec program activities.
The officer assists the international communication officer in the development and production of tools and communication materials for journalists and visitors such as maps, presentation of our programs, fact sheets, press release and data such as photos, interviews held and updated reports of all our activities.

**Requirements**

* Experience in media relations, journalism, or corporate communication (minimum 2 years)
* Good writing and editing skills in English
* Good knowledge of local newspapers and information gathering
* Fluency in Tamil and English. Basic knowledge in Sinhala is a plus
* Good interpreting and translating skills (oral and written)
* Ability to work in the field and travel extensively, in particular in Vanni district
* Good team player with good communication skills
* Proficient computer skills (Microsoft office, Internet, Photoshop…)

Please send an application (CV and covering letter) by Monday the 6th of June to the director of CARITAS - Hudec: E-mail application shall be sent to hudec@sltnet.lk

Father Jeyakumar
CARITAS - Hudec
14, Mathew's Road, Deogu Street, Jaffna

Only short listed candidates will be contacted.

(C/45877)

# “... மக்கள் நல்லதையே விரும்புகிறார்கள்... கொடுப்பதற்குத்தான் நாம் தயாராயில்லை...”

*“... நாம் எதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை விட நாம் எதைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில் தெளிவாகஇருக்க வேண்டும்.... ” என்கிறார் தமிழகத்தின் பிரபல ஓவியரும் ஈழத்தமிழர் அபிமானிகளில் ஒருவருமாகிய புகழேந்தி.*

*ஈழத்தமிழர்களின் போராட்டத்தையும் அவலங்களையும் தனது ஓவியப்படைப்புகள் மூலம் ஆழமாகப் பதிவு செய்து வருபவர் புகழேந்தி.*

*அழுத்தங்கள், நெருக்குதல்களுக்கு அஞ்சாமல் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டே ஈழத் தமிழர்களுக்காகவும் அவர்களது தலைமைக்காகவும் நியாயத்தின் பக்கம் நின்று தனது ஓவிய மொழியில் ஓங்கிக் குரல் கொடுத்து வருபவர்.*

*தனது ஓவியப்படைப்புகளோடு ஈழ மண்ணில் காலடி பதித்திருக்கும் புகழேந்தி, ஓவியக் கண்காட்சிகளையும் ஓவியப் பயிலரங்குகளையும் இங்கே நடத்தி வருகிறார்.*

*வன்னியில் தங்கியுள்ள அவரைச் சந்தித்தோம். அவர் எம்மோடு மிகவும் உணர்வு பூர்வமாக உரையாடினார்.*

*உதயனுக்கு அவர் வழங்கிய சிறப்புச் செவ்வியின் இறுதிப்பகுதி இது.*


❑ தமிழக ஆட்சிப்பீடம் ஈழத்தமிழர்களுக்கு எப்போதுமே சாதகமாக இருப்பதில்லை. இப்படியான நிலையில் தமிழ் நாட்டு மக்களுடைய உணர்வுகள் எப்படியிருக்கின்றன?

■ தமிழ்நாட்டில் வெளியில் பேசமுடியாவிட்டாலும் கூட உள்ளுக்குள் அழுகின்ற மக்களது நிலை நிறைய உண்டு. கண்ணீர் மிக வலிமையானது. அது ஒரு நாள் வெடிக்கும். இந்த வெளிப்பாட்டில் தான் நான் இருக்கின்றேன்.

❑ தமிழ் நாட்டில் பல கலைஞர்கள் இருக்கும்போது உங்களைப் போன்றவர்களால் மட்டுமே ஈழம் சார்ந்த படைப்புகளை, தடைச்சட்டங்கள், அழுத்தங்கள் மத்தியிலும் வெளிக் கொணரமுடிகிறதே?

■ என்னைப் பொறுத்த வரையில் ஒரு படைப்பாளனுக்கு சுதந்திரம் இருக்கிறது என நான் கருதுகிறேன். அந்தச் சுதந்திரத்தைத் தடுப்பதற்கு நான் என்றும் அனுமதிக்க மாட்டேன். இந்த ஓவியங்களை ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் வைத்திருக்கின்றேன். தமிழ் நாட்டில் மிகப் பெரிய வரவேற்பு இருந்தது. இன்று மட்டுமல்ல 83 இல் இருந்து 2003 வரை வரையப்பட்ட ஓவியங்கள் அனைத்தையுமே காட்சிப்படுத்தியிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, ஒரு படைப்புக்கான அங்கீகாரம் நிச்சயமாக இருக்கிறது. எந்தப் படைப்பையும் யாரும் நிச்சயமாக வெளிப்படுத்துவதைத் தடுக்கமுடியாது. யாருடைய வாயையும் பூட்டுப் போடமுடியாது. குறிப்பிட்ட காலம் வரைக்கும் தடுத்து வைக்கலாம். ஆனால், தடுக்கத் தடுக்க அழுத்தம் அதிகமாகி ஒரு நாள் வெடிக்கும். அதுதான் நடக்கும். தமிழ் நாட்டில் மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள் எனப் பல்வேறு இடங்களில் இவை கண்காட்சியாக வைக்கப்பட்டிருக்கிறது. நான் ஈழத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. உலகத்தில் நடைபெறுகின்ற அத்தனை வகையான ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கவும் நாம் எல்லா விதமான மனித விடுதலையை ஆதரிக்கிறோம். உலகத்தில் அடக்கப்படக்கூடிய அத்தனை மக்களும் விடுதலை பெறவேண்டும் - என்று நாம் குரல் கொடுக்கின்றோம். நிறவெறியாளர்கள், மத வெறி, மொழி இப்படி எல்லாவற்றையும் எதிர்க்கின்றோம். எதிர்க்கும்போது தான் கூடுதல் பலம் உருவாகும்.

நமக்கென்று ஒரு அரசியல் உண்டு. அந்த அர



சியலில் உள்ள ஆழம், அழுத்தம் இதெல்லாம் பக்கபலமாக இருக்கிறது. பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவையெல்லாம் எனது ஓவியத்திற்குத் துணை புரிகின்றன.

ஒரு படைப்பை மிக எளிதாக முடக்கிவிட வேண்டும் என நினைத்தால் அது முடியாது. அதற்கு முடங்குகின்றவன் நான் அல்லன். என்னை முடக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. இன்றைக்கு ஓவியக் கண்காட்சியை உலகம் பூராக நடத்துகிறோம். நான் இலங்கைக்கு வந்து ஓவியக் கண்காட்சி நடத்துவது எல்லோருக்கும் தெரியும். ஆக ஒரு படைப்பை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்கு ஒரு தடையும் இருக்க முடியாது. அதில் வெளிப்படையாக இருக்கவேண்டும். அந்தப் படைப்பால் உண்மை, நேர்மை இருக்கிறது. இந்த உண்மையும் நேர்மையும் என்னை வழிப்படுத்துகிறது.

❑ தமிழ்நாட்டில் இருக்கும்போதும் ஈழத்துக்கு வந்து இங்குள்ள மக்களோடு கதைக்கும் போதும் உங்களது உணர்வு நிலை எப்படி இருக்கிறது?

■ ஒரே உணர்வுதான் இருக்கிறது எனக்கு இருவேறு உணர்வுகள் கிடையாது. இந்த மண் எனக்குப் புதிதாக இருக்கலாம். இந்த மக்கள் என்றைக்கும் பழையவர்கள். இந்த மக்கள் போராட்டத்தோடு 23 வருட கால உறவு இருக்கிறது. இங்கு வந்ததில் ஊடகங்களில் வெளிவராத சில தகவல்களைப் பெறமுடிந்தது.

❑ கலைகளில் பல்வேறு வகைகளில் இருந்து ஓவியம் தனித்தன்மைக்குரிய வடிவமாகியிருக்கிறது. மரபு ஓவியத்தில் இருந்து தங்களது ஓவியம் மாற்றமடைந்திருக்கிறது. இந்த ஓவியத்தின் வளர்ச்சி எது சார்ந்து நிகழ்ந்திருக்கிறது?



■ பொதுவாக சிறுகதை, கவிதை போன்றவற்றிற்கு ஊடாக மொழி வேறு. ஓவியம் ஒரு காட்சி வழியான ஊடகமொழி. இதற்கென்று ஒரு மொழியில்லை. உலகத்தில் உள்ள பொதுமொழியாகத்தான் இதைப் பார்க்கிறோம். பாறை ஓவியங்கள் மூலம் கற்கால மனிதன் தனது வாழ்க்கை முறையை பிரதிபலித்தான். தன்னுடைய சக மனிதனிடம் பேசுவதற்கு இதைப் பயன்படுத்தினான். அவனிடம் மீன்பிடித்தல், வேட்டையாடுதல் போன்ற ஓவியங்கள் தான் முதலில் இருந்தன பின்பு அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்த வாழ்க்கை முறை குகை ஓவியங்களில் இருந்தது.

இன்று அஜந்தா, எல்லோரா ஓவியத்தில் எதைப் பார்க்கிறோம் என்றால் வாழ்க்கையைப் பதிவு செய்திருப்பதைத் தான். ஆக அதன் தொடர்ச்சியாக ஐரோப்பிய ஓவியங்களைப் பார்த்தால் அவர்களது தேவாலயங்களில் கிறிஸ்தவ மத வெளிப்பாடுகளை ஓவியப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். அந்த நிலைதான் நவீன ஓவியத்திலும் தொடர்கின்றது. என்னைப் பொறுத்தவரையில் நான் கையாளுகின்ற ஓவியத்தில் [illegible]ய வாழ்வு, போராட்டம், அரசியல் குறித்த கருத்துக்களைப் பதிவு செய்கிற ஊடகமாகத்தான் இதைப் பார்க்கிறேன்.

### போர்க்கால ஓவியங்கள்

❑ ஐரோப்பிய போர்க்கால ஓவியங்களில் காணப்படுகின்ற உணர்வு வெளிப்பாட்டை உங்களுடைய ஓவியத்திலும் காணமுடிகிறது. இது பற்றி....

■ உள்ளதை உள்ளபடியே சொல்லுகின்ற ஒரு நிலை இருந்தது. அதுதான் காட்சியாக வெளிப்படுத்தும் தன்மை. ஆனால், உள்ளத்து உணர்வுகளை சொல்லுகின்ற ஓவியங்களாக இந்த நவீன ஓவியங்கள் இருக்கின்றன என நான் கருதுகிறேன்.

❑ ஆரம்பகாலத்தில் மனிதன் கையாண்ட ஓவிய உத்திகள், நவீன காலத்தில் மனிதன் கையாளும் ஓவிய உத்திகள் பற்றி.....

■ இரண்டு வகையான வளர்ச்சிகள் இருக்கின்றன. அந்தக்காலங்களில் மனிதன் மூலிகைகளின் துணைகொண்டு நிறங்களைத் தயாரித்தான். அதை வைத்து ஓவியங்களைத் தயாரித்தான். அதேபோல இன்று அறிவியல் வளர்ச்சியின் விளைவாக பல்வேறு வகையான நிறங்கள் வந்திருக்கின்றன. எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம், எண்ணெய் வர்ணத்தையும் நீர்வர்ணத்தையும் கலந்த ஒருநிறம் வந்திருக்கிறது. இது போன்று பல்வேறு வகையான நிறங்கள் வந்திருக்கின்றன. இது மிகப் பெரிய வளர்ச்சி. அறிவியல் பல்வேறு துறைகளில் வளர்ச்சிபெற்றிருக்கிறது. அதில் ஓவியத்துறையும் ஒன்று. பின்பு ஓவியத்தில் வெளிப்படுத்தல் என்ற ஒரு வளர்ச்சி இருக்கிறது. இதை வளர்ச்சி என்றே பார்க்கலாம். உலக அளவில் இதை நாம் பார்த்தோமானால் பல்வேறு வகையான நிலைகளில் வெளிப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. அதில் எமக்கு உடன்பாடும் இருக்கலாம், முரண்பாடும் இருக்கலாம். எப்பொழுதுமே நாம் எல்லாவற்றுடன் முரண்பட்டு விடவும் முடியாது. உடன்பட்டு விடவும் முடியாது. ஏனென்றால், எமக்கு இன்று இருக்கக் கூடிய கலை இலக்கியங்களை எடுத்துக்கொண்டால், ஓவியங்கள் தான் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. இது ஒரு வாயிலாக இருந்திருக்கின்றது. ஒரு பெரிய மாற்றம் என்று சொன்னால் ஓவியத்தில் தான் அது நிகழும். பல்வேறு இயல்கள் இதன் இயக்கங்களாக வந்தன. அதன் காரணம் என்னவென்றால் ஆரம்பகாலத்தில் உள்ளதை உள்ளபடியே வரைவதற்கு தேவை இருந்தது. பின்பு மாற்றத்தை ஏற்படுத்தியது புகைப்படக்கருவிதான். இது வந்ததனால் உருவ ஓவியங்களை வரைவதற்கான தேவை ஓவியர்களுக்கு இல்லை. அவர்களுக்கு புதிய தொன்றை படைப்பதற்கான தேவை ஏற்பட்டது.

அதனால் புதியவற்றைப் படைப்பதற்குத் தங்களை அவர்கள் தயார்ப்படுத்திக் கொண்டார்கள்.

அதனால்தான் இயக்கங்கள் தோன்றின. ஐரோப்பாவில் தான் இந்த மாற்றம் முதலில் நிகழ்ந்தது. அதன்பின்புதான் எழுத்துத்துறையில் மாற்றம் ஏற்பட்டு நவீனம், பின்நவீனத்துவம் என்று பல்வேறு துவங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஓவியத்தில் இன்று உச்சமென்று பல்வேறு வகையைப் பார்த்திருக்கிறேன். இன்ஸ்ரோலேசன் (Installation) என்று ஒன்று இருக்கிறது. இவை எனக்கு உடன்பாடு அற்றவை. வெளிப்படையாக இந்தக் கருத்தை வைத்தால் சில நேரங்களில் இதெல்லாம் எந்தளவுக்கு பயன்படும் என்றதொரு கேள்வி எழுகின்றது. சிலவேளை அதைப்பற்றியதான புரிதல் எனக்கு இல்லையென்று சிலர் கருதலாம். நிஜங்களில் ஓர் அந்நியமான உணர்வொன்றை இவை ஏற்படுத்துகின்றன. மக்களுக்கு எந்த வகையிலும் தொடர்பில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஜேர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இந்த வகை ஓவியங்களைப் பார்க்கின்ற போது அந்த நாடுகளிலே கூட அந்த வடிவங்களை உள்வாங்கிக்கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் அதை உள்வாங்கிக் கொள்வதில்லை. அங்கிருக்கின்ற மக்கள் சிலபேர் அதைப்பற்றி விவாதிக்கிறார்கள். நவீனம், அதிநவீனம் என்று வந்துகொண்டிருந்த நிலையில், அருவம் சார்ந்து வெளிப்படுத்திய நிலையில் கூட மக்கள் அதை ஓரளவு ஏற்று விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். கருத்துப் பரிமாற்றங்கள் கூட நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் இந்த (Installation) (ஸ்தாபித்தல்) தான் இன்று உலகளவில் பெரிய வடிவமாகி பல்வேறு பொருள்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு படைப்பை உருவாக்குகிறார்கள். அதற்கு ஒரு நிரந்தரத்தன்மை இல்லை. அதனைக் காட்சிப்படுத்துவார்கள். காட்சிப்படுத்திவிட்டு அதனை அழித்துவிட்டுப் போய் விடுவார்கள். அதற்கு மேல் அந்தப் படைப்பில் வேறொன்றும் இல்லை. அதில் ஒரு செய்தியை அவர்கள் சொல்கிறார்கள். எனக்கும் அதை உணரக்கூடியதாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஓர் வடிவத்தை பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்துகின்ற நிலையில் அதனைக் கையாள்வது பயன்தருவதாகக் கருதுகின்றேன்.

அந்த அடிப்படையில்தான் முரண்பாடுகள் வலுக்கின்றனவே தவிர மற்றும்படி அவர்கள் கையாளுகின்ற வடிவத்தில் அல்ல. ஆனால், மக்கள் அதைப் பார்க்கின்றபோது அதனை நான் உணர்ந்தேன். அதைப்பற்றி விவாதிக்கின்ற நிலையில் கூட இல்லை. இந்தியாவிலும் அந்தப் போக்கு வந்திருக்கின்றது. ஸ்தாபித்தல் (Installation) என்று பல்வேறு இளைஞர்களும் அதைச்செய்து கொண்டிருக்கிறார்கள். வெளிப்பாட்டில் எனக்கு சில முரண்பாடுகள் உண்டு . காரணம் என்னவென்றால், அதனைக் கையாள்பவருக்கு இன்னும் பல்வேறு தளங்களைச் சென்றடையவேண்டும் என்னும் சிந்தனை கிடையாது. அந்த அடிப்படையில்தான் எனக்கு முரண்பாடே தவிர வடிவத்தில் அல்ல. ஆனால் அந்த வளர்ச்சியை மாற்றம் என்றுதான் நாம் பார்க்கவேண்டும். அதன் வளர்ச்சியில் நமக்கு ஒரு கேள்வி இருக்கிறது. ஆனால் அதைநாம் புரிந்துகொள்ளவேண்டும் அது எந்தளவுக்கு பயன்படும் என்பதில் நமக்கு விமர்சனம் இருக்கிறது. ஆனால், அது அடுத்த கட்ட நகர்வுக்கு இட்டுச் செல்கிறது என்பது உண்மை. நாம் அதனை அங்கீகரிக்க வேண்டும். அதன் பயன்பாடு பற்றி நமக்குக் கருத்து முரண்பாடு இருக்கிறது. இன்று தவறாகக்கூட அது இருக்கலாம். நாளை அது சரியான, முறைப்படுத்தப்பட்டதொன்றாகக் கூட இருக்கலாம்.

ஆரம்பத்தில் நவீன ஓவியங்களுக்கு எதிர்ப்பு இருந்தது. ஆனால் இன்று அதை நாம் தனதாக்கிக் கொண்டிருக்கிறோம். இன்று அந்த சூழல் வந்திருக்கிறது. நான் கையாள்வது நவீனம் சார்ந்துதான். இது மக்களுக்கு பழக்கப்படவில்லை. அதற்கான பயிற்சி அவர்களிடத்தில் இல்லை. வெளிநாட்டில் வாழ்கின்ற மக்கள் கூட ஓவியத்தைப் பார்த்துவிட்டு மயக்கம் தருவதாகச் சொல்கிறார்கள். அவர்களும் அதை அந்நியத்தன்மையாகத் தான் பார்க்கிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இன்னும் மோசமாகத்தான் இருக்கிறது. அந்த இடத்தில் கூட நவீன ஓவியங்களைக் கொண்டு சென்று மக்களிடத்தில் பரீட்சயப்படுத்தியிருக்கிறோம் என்றால் அது நமது இடைவிடாத முயற்சி. தொடர்ந்து 20 ஆண்டுகளாக இந்தப் படைப்புகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கிறோம். மக்கள் மத்தியில் கொண்டும் செல்லும் போது அவர்களுக்கும் ஒரு பயிற்சி ஏற்படுகிறது. ஓவியத்தைக் கொண்டுசெல்வது ஒன்று, ஓவியத்தின் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது இன்னொன்று. நாம் கருத்தை முதன்மைப்படுத்தினாலும் ஓவியத்திலும் சேர்த்துக்கொண்டு செல்கிறோம்.


ஓவியத்தைக் கொண்டுசென்றாலும் ஓவியத்தின் மூலம் கருத்தைக் கொண்டு செல்கிறோம். இரண்டையும் நாம் ஒரே நேரத்தில் கொண்டு செல்கின்றோம். மக்களை அதற்குப் பயிற்றுவிக்கிறோம். தமிழ் நாட்டில் புகைமூட்டம் என்ற எனது ஓவியக் கண்காட்சியில் பல்வேறு வகையான கருத்துக்களை உள்ளடக்கிய 27 ஓவியங்கள் வைக்கப்பட்டன. குஜராத் படுகொலை, அமெரிக்கா ஈராக்கில் நிகழ்த்தும் போர், அடக்குமுறைச் சட்டங்கள் (தடா, பொடா) திண்ணியத்திலே தலித்துகளுக்கு எதிராக செய்யப்பட்ட கொடுமைகள். இப்படிப் பல கருத்துக்களைக் கொண்ட கண்காட்சி அது. இன்று மக்கள் சினிமாவோடு மட்டும் இருந்து விடவில்லை. அதையும் தாண்டி அவர்கள் பலவற்றைப் பார்க்க இருக்கிறார்கள். நாம் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. நல்ல எழுத்தைப் படிக்க நினைக்கிறார்கள். நல்ல ஓவியத்தைப் பார்க்க நினைக்கிறார்கள். நல்ல சினிமாவைப் பார்க்க நினைக்கிறார்கள். ஆனால் கொடுப்பதற்குத்தான் அங்கு ஆள்கள் இல்லை. சினிமாக்காரர்கள் இதுதான் மக்களது ரசனை என்று கூறிக்கொண்டு தரமற்ற படங்களைப் பொய் சொல்லிக் கொடுக்கிறார்கள். நல்ல சினிமாவைக் கொடுத்தால் பார்க்க முடியாது என்று யாரும் சொல்லமுடியாது. காதல், ஆட்டோகிராப், அழகி என்று நல்ல படங்கள் உள்ளன. சரியான தொன்றைக் கொடுக்கும்போது மக்கள் சரியாகவே நடந்து கொள்வார்கள். அதுதான் என்னுடைய அனுபவம். நல்ல ஓவியத்தை அவர்களுடையது என்று கருதுவதில் அவர்கள் என்றும் விட்டுக்கொடுப்பதில்லை.

**செவ்வி கண்டவர்கள்:**
**சித்தாந்தன், சுதேசிகன்**

### ஓவியக் கற்பித்தல்

❑ ஓவியக் கற்பித்தல் என்ற பொருள் பற்றி...

■ ஓவியத்தைக் கற்பிக்க முடியாது. கவிதை, சிறுகதை எழுத கற்பிக்கமுடியுமா? ஆனால் இருக்கின்ற ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டியாக நாம் இருக்கலாம். நாம் கோட்பாட்டு இயல்புகளை கற்பிக்கலாம். ஒரு செய்முறை என்ற நிலையில் அதற்குரிய வழியைத்தான் காட்டமுடியும். மாணவன் ஓவியத்தை வரையும்போது அவனது குறைகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் அந்த மாணவன்



தன்னை வளர்த்துக் கொள்ளலாம். அதிக பட்சமான பயிலரங்குகளே ஓவியத்தில் மாணவருடைய வளர்ச்சிக்கு உதவும். ஓவியம் வரைவது மட்டும் வேலையல்ல. ஓவியத்தைப் பற்றிப் பேசவேண்டும்; எழுதவேண்டும். இந்தத் தன்மை ஓவியனிடம் வேண்டும். ஓவியத்தைப் பற்றிய வரலாறுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். வரைவதற்கு ஓவியத்தைப் பற்றி வரலாறும் முக்கியம். அதைப்பற்றியதான அறிவும் முக்கியம்.

### கலை மக்களுக்காகவே!

❑ சமகாலத்தில் ஓவியத்தின் வெளிப்பாடு எப்படி இருக்கிறது?

■ பல்வேறு போக்குகள் உண்டு. கலை கலைக்காவே என்ற நிலையும் உண்டு. கலை சமூகத்தைப் பற்றி பேசவேண்டும் என்ற நிலையும் உண்டு. என்னைப் பொறுத்தவரையில் கலை மக்களுடைய பிரச்சினையைப் பேச வேண்டும் என்று கருதுகின்றவன் நான்.

நான் ஓர் ஓவியனாக, படைப்பாளனாக பிறருடைய ஓவியங்களைப் பார்க்கிறேன். இன்று ஓவியம் பற்றி சமூகத்தில் பல்வேறு பார்வைகள் இருக்கின்றன. ஓர் ஓவியத்தை எத்தனை ஆயிரம் ரூபா வசூலாகி இருக்கின்றது என்றே பார்க்கின்றார்கள். நான் எதைப் பார்க்கிறேன் என்றால் எத்தனை ஆயிரம் மக்கள் இதைப் பார்த்தார்கள் என்றுதான். ஒரு காட்சியினுடைய வெற்றியைப் பார்க்கிறேன்.

❑ தங்களுக்கு ஈழத்து ஓவியங்களைப் பற்றிய பரீட்சயம் உண்டா?

■ எனக்கு ஈழத்து ஓவியங்கள் பற்றி அதிக பரீட்சயம் இல்லை. மாற்கு என்ற ஓவியரின் பெயர் அறிமுகம். அவருடைய ஓவியங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். ஈழத்து ஓவியங்களைப் பற்றி அதிகமாக பேசுவது இயலாத ஒன்று.

(10ஆம் பக்கம் பார்க்க)

# "...மக்கள் நல்லதையே..."

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஓவியப் பயிலரங்கு பற்றி....**

❑ இங்கு பயிலரங்கு நடத்துவது பற்றி...

■ பயிலரங்குப் பயிற்சி சம்பந்தப்பட்ட தொன்று. ஆற்றல் உள்ள மாணவர்களை வளர்த்து விடுவதற்கான ஓர் உத்தியாக இந்தப் பயில ரங்கை நாம் நடத்துகிறோம். ஆக இங்குள்ள மாணவர்கள் அதிக பயிற்சி இல்லாதவர்களா கக் காணப்படுகிறார்கள். சரியாகப் பயிற்றுவிப் பதற்கான ஆசிரியர்கள் இங்கு இல்லாததும் ஒரு குறையாகக் காணப்படுகின்றது. மாணவர் களுக்கு மட்டுமல்ல. இதை ஆசிரியர்களுக்கு மான பயிலரங்காகவே நடத்துகின்றோம். எனக்கு ஓவியத்தை வரைவதில் உள்ள ஆர்வத்தைப் போன்று, ஆற்றல் உள்ள மாணவர்களை வளர்த்து விடுவதிலும் மிகுந்த விருப்பம் உண்டு. இப்பொழுது இந்த மண்ணில் பயிலரங்கை நடத்துவதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல ஓவி யர்கள் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அதை நான் இரண்டு நாள்களாகப் பார்க்கின்றேன். ஆனால், படிக்கின்றவர்கள் எல்லோரும் ஓவியர்களாக உருவாகிவிட முடி யாது. ஆனால், ஒரு சிலர் நல்ல ஓவியர்களாக வருவார்கள். மற்றவர்கள் பெற்றுக்கொண் டதை வைத்து நல்லதொரு வாழ்க்கையை உருவாக்கலாம். அதுதான் இந்தப் பயிலரங்கு செய்யும் என்று நம்புகின்றேன். ஆற்றலுள்ள வர்கள் தென்படுகிறார்கள். தொடர்ந்து நாம் நல்ல பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர் களை நல்ல ஓவியர்களாக உருவாக்கலாம்.

❑ யாழ்ப்பாணத்தில் கண்காட்சி, பயிலரங்கு நடத்துவதற்கு உரிய வாய்ப்புகள் உண்டா?

■ அதற்குரிய வேலைகள் தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருக்கின்றது. யாழ் பல்கலைக்கழ கம் மற்றும் வெளி இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம். பயிலரங்கு பற்றி இன்னும் எப்படி என்று தெரியவில்லை.

❑ ஓவியத்தின் மூலமாகச் சொல்லமுடியாது என எதையாவது கருதியதுண்டா?

■ ஓவியத்தின் மூலம் சொல்லமுடியாது என எதையுமே கருதியதில்லை. எல்லாவற் றையும் சொல்ல முடியும் என்று நினைக் கிறேன். ஏனென்றால் ஓவியத்தை அந்தள வுக்குத் தன் வயப் படுத்தியிருக்கிறேன். எண்ணத்தை அதற் குத் தக்கவாறு வரை வேன். இதில் நான் வெற்றி பெற்றிருக் கிறேன். ஏனென்றால் அதை நான் மக்கள் மயப்படுத்தியிருக்கி றேன். வடிவத்திற்காக நாமல்ல. எமக்காக வடிவத்தை மாற்றியி ருக்கிறேன்.

(முற்றும்)




## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

பண்டிதர் நரசிம்ம நாயுடு

World Expert Astrologer

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர்.

இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின் றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன் களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன்,**
அறை இல.9, 31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

**Pillaiyar Inn,**
Room No. 9,
31, Manipay Road,
Jaffna, Sri Lanka.

(45577)(26-14-45)



## பதவி வெற்றிடம்

**காரியாலய உத்தியோகத்தர் (Office Staff)**

**(Walk - in - Interview)**

யாழ். நகரில் இயங்கும் கிறிஸ்தவ கல்வி நிலையத்திற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் பணியாற்றக்கூடிய 18 இற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட கிறிஸ்தவ ஆண்கள் இப்பதவியை நிரப்ப நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம்.

கல்வித் தகைமை: க.பொ.த (உ/த)

திருச்சபைப் போதகரினது சிபாரிசு கட்டாயமானது.

எதிர்வரும் 31.05.2005 அன்று 462, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 'கிறிஸ்துவிற்காக இளைஞர்' ஸ்தாபனத்தில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணிவரை நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குச் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்கவும்.

- இணைப்பாளர்,
**C.T.S யாழ். நிலையம்.**

(45848)(21-14-45-26)



## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல தனியார் காப்புறுதிக் கம்பனியில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. இதற்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

i) விற்பனை மேற்பார்வையாளர்.
ii) வியாபார அபிவிருத்தி உதவியாளர்கள்.
iii) வியாபார அபிவிருத்தி அலுவலர்கள்.

**தகைமைகள்:**

1) க.பொ.த. (சா/த) கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி
2) க.பொ.த. (உ/த) சித்தி
3) வயது 21இற்கு மேல்
4) காப்புறுதித்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். *(எனினும் அவசியமில்லை.)

**சலுகைகள்:**

1) மாதாந்த சம்பளம்.
2) பிரயாணப் படிச்செலவு.
3) கமிஷன்.
4) திறமைக்கேற்ப மேலதிக கமிஷன்
5) ஊழியர் சேமலாப நிதி.
6) ஊழியர் நம்பிக்கை நிதி.

விண்ணப்ப முடிவு திகதி: 10-06-2005

அனுப்ப வேண்டிய முகவரி:

**விளம்பர இல. 2599, மே/பா உதயன்.**

(45827)(26-14-45)



உலகில்

215 நாடுகளையும், 138 000 ஊழியர்களையும், 50 000 க்கும் மேற்பட்ட முகவர்நிலையங்களையும் தனது சேவையில் உள்ளடக்கிய

**FedEx Express®**

ஐரோப்பிய நாடுகளுக்கான விஷேட சலுகை



ஊடாக

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் , உணவுப்பண்டங்கள், உடைகள், வீடியோப்பிரதிகள், மற்றும் ஏனைய அன்பளிப்புப்பொருட்களை துரிதமாகவும்,விரைவாகவும்,பாதுகாப்பாகவும் உத்தரவாதத்துடன் அனுப்பிட FedEx Express

யாழ் நகரில் **திருமுருகன் கொம்நெற்**

259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

வாடிக்கையாளர்களின் நன்மைகருதி

வடமராச்சியில்

36, செல்வபிள்ளையார் கட்டடம்

நெல்லியடி,

கரவெட்டி.

எமது நிறுவனத்துக்கு வேறு கிளைகள் இல்லை



## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077- 3086939,
0777-246117,
077-6018467.

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26-14-45) (43005)



## பொதி செய்ய பெண் பிள்ளைகள் தேவை

முன்பு தொழிலகங்களில் பொதிகள் செய்து அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. கிராம சேவகர் அல்லது தொழிலதிபர் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். சம்பளம் நாளொன்றுக்கு 160/-

G.C.E. (OL) படித்தவர்கள் விரும்பத்தக்கது.

**சிவா நறுமணப் பூங்கா,**

288,ஆஸ்பத்திரி வீதி [சத்திரத்துச் சந்திக்கு அருகில்],
யாழ்ப்பாணம்.

T.P.No: 021 222 2567

(A/43053)(24-14-45-26)



மிகக்குறைந்த விலையில்

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

- மேற்படி திட்டத்தில் மொத்தமாக 8 வீடுகள் மட்டுமே அமையவுள்ளன
- Tiles பதிக்கப்பட்ட ஆடம்பர வீடுகள்
- தனித்தனி மின்சார, தண்ணீர் வசதிகள்
- 4 தவணைகளில் இலகுக் கொடுப்பனவு
- சட்டபூர்வமான உறுதியான உறுதிப்பத்திரங்கள்

**தயா ஏஜென்சி**

இல.3,நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசித் தொடர்பு இரவு 7 மணிக்குப் பின் 0777 283795



## கெயர் சர்வதேசம் –இலங்கை

care

சுனாமி தொடர்பான திட்ட நடவடிக்கைகளிற்கான விநியோகத் திற்குப் பின்வரும் பொருள்களைத் தகுதியான உற்பத்தியாளர் களிடமிருந்து அல்லது வழங்குநர்களிடமிருந்து பொறியிடப் பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விடயம் : தும்புக் கண்ணாடி இழை வள்ளங்கள்

2.தொகை : 170 அலகுகள் (நூற்றி எழுபது மட்டும்)

3.முப்பரிமாணம் :நீளம் $17\frac{1}{2}' - 18\frac{1}{2}'$
அகலம் $6\frac{1}{2}' - 7'$
ஆழம் $2\frac{1}{2}' - 2\frac{3}{4}'$

4.வங்கு :7 மர வங்குகள் 600 இலக்கத் தும்புநார் இழையினால் மூடப்பட்டது.

5.பிரதான உறை : 'ஜெல்' படை
ஒரு படை பாய் - 300
ஒரு படை பாய் - 450
றோவிங் - 850
ஒரு படை பாய் - 600 கொண்ட மேல் படை

6.ஏரா உறை : பிரதான உறையிட்டதன் பின் ஏரா உறை மணலினாலும், ரெசினாலும் நிரப்பப்படவேண்டும். இதன்மேல் 60ZS, CSM வழங்கப்படவேண்டும்.

7.றாம்சம் பகுதி : பிரதான உறை + மேலதிக 600 மர காப்புக் கவச பாய். மர காப்புக் கவசம், 600 பாய்

நியதிகளும் நிபந்தனைகளும்

1. சகல வள்ளங்களும் நியமத்திற்கும், தரத்திற்கும் தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. சகல வள்ளங்களும் மாதகலில் விநியோகிக்கப்படவேண்டும். ஏற்றி இறக்கும் செலவுகள் வேறாகக் குறிப்பிடப்படவேண்டும்.
3. கேள்விதாரர்கள் வழங்கும் கால அட்டவணை குறிப்பிடப்படவேண்டும்.
4. பூரணமற்ற கேள்விகளை ஏற்கவோ நிராகரிக்கவோ கெயர் நிறுவனத்திற்கு உரிமையுண்டு.
5. மேற்குறிப்பிட்ட பொருள்களிற்கு முற்பணம் கொடுப்பது பரிசீலிக்கப்படமாட்டாது. தரப்பரிசோதனைக்கு உட்படுத்தி பூரணமாக விநியோகிக்கப்பட்ட பின் கொடுப்பனவுகள் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட நியமங்களைப் பூர்த்திசெய்யாதவற்றையும் தகுதியற்றவைகளையும் நிராகரிக்க கெயர் நிறுவனத்திற்கு உரிமையுண்டு.
6. மேற்குறிப்பிட்ட பொருள்கள் உடனடியாகத் தேவைப்படுவதனால் வழங்கும் கால அட்டவணைக்கமைய கெயர் ஒரு கேள்வியாளரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்வியாளர்களையோ தெரிவுசெய்யும் உரிமையைக் கொண்டுள்ளது.
7. கீழ்க் கண்டவாறு முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடதுபக்க மூலையில் "தும்புக் கண்ணாடி இழை வள்ளங்கள் வழங்குவதற்கான கேள்விகள் " எனக் குறிப்பிடப்பட்டு பொறியிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

**இலங்கைக்கான பணிப்பாளர்,**
**கெயர் சர்வதேசம் இலங்கை.**
**இல.7A, கிறகறி வீதி, கொழும்பு-7**

அல்லது

**திட்டப்பணிப்பாளர்**
**கெயர் சர்வதேசம் இலங்கை**
**இல.15, கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

8. இதற்கு மாற்றீடாக பொறியிடப்பட்ட கேள்விகள் கெயர் அலுவலகங்களில் உள்ள கேள்விப் பெட்டிகளுக்குள் 10.06.2005இற்கு முன் அலுவலக நேரத்தில் போடப்படவேண்டும்.

*மேலதிக விவரங்களுக்கு:*

**திட்டப்பணிப்பாளர்**
**கெயர் சர்வதேசம், 15, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021 226 4259/4260**

(C/43060)(50)

# தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு பெருக ஜெயலலிதா செய்த உதவி



அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதும், அது தோல்வியில் முடிந்து கரிபூசிக்கொள்ளும் போதெல்லாம் விடுதலைப் புலிகள் தன்னைக் கொலைசெய்யப் போகிறார்கள் என்று பிலாக்கணம் பாடுவதும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு வாடிக்கையாகிப் போனதொன்று.

சமீபத்தில்கூட புலிகள் தன்னைக் கொல்லப்போகிறார்கள் என்று புலம்பித்தீர்த்துள்ளார் அவர். வைகோ, பழ.நெடுமாறன், சுபவீரபாண்டியன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் மீது இந்தியாவில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் (பொடா) கீழ் வழக்குத் தொடர்ந்தது தமிழக அரசு. அவர்களைக் கைதுசெய்து சிறையிலும் அடைத்தது. ஆனால், இந்திய அரசால் நியமிக்கப்பட்ட 'பொடா' மறு ஆய்வுக்குழு இவர்கள் குற்றமற்றவர்கள் என்றும், அவர்கள்மீது தொடரப்பட்ட வழக்குகளைத் தமிழக அரசு திரும்பப்பெற வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

இதனைத் தொடர்ந்தே தன்னைப் புலிகள் கொலைசெய்யத் தற்கொலைக் குண்டுதாரியை அனுப்பியிருக்கிறார்கள் என்று - பழைய கள்ளை புதிய மொந்தையில் - தமிழக (ரசிக) பெருமக்களுக்கு படைத்திருக்கிறார் ஜெயலலிதா.

## பிசுபிசுத்துப்போன 'பொடா' வழக்குகள்

இதேவேளை, 'பொடா' வழக்குகள் பிசுபிசுத்துப்போன கையோடு, இது தொடர்பாக மத்திய அரசின் நெருக்கடி ஏற்படக்கூடும் என்ற அச்சம் அவருக்கு எழுநததாகவும் கூறப்படுகின்றது. ஏனெனில், மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் புலிகளை ஆதரிக்கும் ம.தி.மு.க., பா.ம.க. என்று வரிசையாகக் கட்சிகள் உள்ளன. புலி எதிர்ப்பு என்பது ஒருபுறமிருக்க, வைகோவை சிறையில் அடைத்துப் பழிதீர்த்த ஜெயலலிதாவுக்கு எதிராக - தோழமைக் கட்சிக்காக - நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் காங்கிரஸ்"க்கு - அதன் தலைவி திருமதி சோனியா ராஜீவ் காந்திக்கு - உள்ளது. ஆகவேதான், கொலைக் 'கூப்பாடு' போட்டார் ஜெயலலிதா.

இந்த அறிக்கையை அவர் வெளியிடுவதற்கு முன்னரே - அதாவது சுமார் இருவாரங்கள் முன்பாகத் தமிழக இதழான ஜுனியர் விகடனில்:-

*"புலிகளின் தோழர்களை மத்தியில் கூட்டணித் தோழர்களாக வைத்திருக்கிறது காங்கிரஸ் அரசு. கூட்டணித் தோழர்கள் கொடுக்கும் பிரஷர் (அழுத்தம்) காரணமாக மத்திய அரசும் தமிழகத்தில் மீண்டும் புலிகள் நடமாடுவது குறித்து அக்கறை காட்டவில்லை. ஆனால், அக்கறை இருப்பதுபோல் காட்டுவதற்காக உள்துறைமூலம் அறிக்கை கொடுக்கிறார்கள். இது சர்வதேச விவகாரம் என்பதால் மத்திய அரசுதான் எல்லாவற்றுக்கும் பொறுப்பு - என்று சீக்கிரமே (விரைவில்) தமிழக அரசிடமிருந்து அறிக்கை அம்பு பாயக் கூடும்" என்று வெளியானது.*

*இந்தச் செய்தி வெளியாவதற்குச் சில நாள்கள் முன்னர், அதாவது மே 5ஆம் திகதி வெளியான தமிழகப் பத்திரிகைகளில் மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட ஆண்டறிக்கையில் 'தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இன்றும் தொடர்கின்றன' என்று கூறப்பட்டிருந்தது.*

*இந்த அறிக்கையில்தான்:* "விடுதலைப் புலிகளின் கொள்கைகளை எதிர்க்கும் தலைவர்களைப் பற்றி ஏராளமான தகவல்களைத் திரட்டிவைத்துள்ளனர். தேவைப்பட்டால் அவர்களைக் கொலைசெய்வதற்காகவே இத்தகவல்களை விடுதலைப் புலிகள் திரட்டிவைத்துள்ளனர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் தகவலைத்தான் தனக்கு ஏற்ற வகையில் கண், காது, மூக்குவைத்து 'கொலைக கூப்பாடு' போட்டிருந்தார் ஜெயலலிதா.

ஜெயலலிதாவின் இந்த நாடகத்துக்குக் காரணம் தமிழ் ஆதரவாளராக எப்படித்தான் வேஷம் போட்டாலும், அது எடுபடாது என்பதை அவர் நன்கு உணர்ந்திருப்பதுதான். அத்துடன், தமிழக மக்களின் ஞாபக மறதிபற்றி அவரைவிடத் தெரிந்தவர்கள் வேறுயாருமில்லை.

தமிழக முதல்வராக அவர் முதன்முறையாகப் பதவியேற்றபோது கோடிக்கணக்கில் பணம் சுருட்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதையும், 'அவர்மீதான வழக்குகளில் ஆதாரமில்லாததால் ஜெயலலிதா விடுவிக்கப்படுகிறார். ஆனால, அவர் தனது மனசாட்சிக்குப் பதில் சொல்லட்டும்' என்று நீதிபதி தீர்ப்பில் கூறியதையும் அடியோடு மறந்துபோய் மீண்டும் தன்னை முதலமைச்சர் ஆக்கிய தமிழக மக்களைப் பற்றி அவரை விடத் தெரிந்தவர் வேறுயார் இருக்க முடியும்.

விடுதலைப் புலிகள் எதிர்ப்பு தமிழகத்தில் மழுங்கடிக்கப்பட்டு, தமிழ் உணர்வாளர்களின் கை ஓங்கிவிடுமோ என்று இதனால்தான் பயப்படுகிறார் ஜெயலலிதா.

தமிழ் உணர்வாளர்களின் கை ஓங்கிவிடாமல் இருக்கப் புலிகள் தீவிரவாதிகள், அவர்களை இவர்கள் ஆதரிக்கிறார்கள் என்ற ஒப்

**இந்தியாவிலிருந்து இந்திரஜித்**

பாரிப்பாட்டைத் திருப்பிப் போடுகிறார் அவர்.

ஆனால், அவரது இந்த நாடகம் பலதடவைகள் தோல்வியுற்றபோதிலும் ஏனோ அதனை உடும்புப்பிடியாகப் பிடித்திருக்கிறார்.

சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்த மத்திய அரசு முடிவெடுத்தபோது, அதனைக் கடுமையாக எதிர்த்தவர் ஜெயலலிதா. பல ஆண்டுகளாகத் தமிழகம் வலியுறுத்திவந்த இந்தத் திட்டத்தை ஜெயலலிதா எதிர்த்தபோது சொன்னகாரணம்:- இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் அப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துவிடும் என்பதுதான்.

## உண்மையான காரணம்

ஆனால், உண்மையான காரணம் என்ன? மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் தி.மு.கவைச் சேர்ந்த ரி.ஆர்.பாலு அமைச்சராக இருக்கிறார். அவரது அமைச்சின் கீழேயே சேது சமுத்திரத்திட்டம் அடங்குகிறது. இப்போது இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், அதன் பெருமையின் பெரும்பகுதி கருணாநிதிக்கும், ஓரளவு பங்கு வைகோவுக்கும் போய்விடும். அதனைப் பொறுத்துக்கொள்ள ஜெயலலிதாவால் முடியவில்லை. அதனால், பரணைக் கிளறி பழைய பல்லவியை எடுத்தார் விடுதலைப் புலிகள் நடமாட்டம் அதிகரித்துவிடும் என்று. ஆனால், இப்போது போலவே அப்போதும் ஜெயலலிதாவின் புலம்பல் எடுபடவில்லை. இப்போது சேது சமுத்திரத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. தமிழக மக்களும அதனை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இதேவேளை, ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான அனைவரின் வயிற்றெரிச்சலுக்கும் ஆளாகியுள்ளார் ஜெயலலிதா என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும். இதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் பற்றி மட்டுமல்ல, ஈழத்தமிழர்களின் துன்ப, துயரங்களைப் பற்றிக் கூடப் பேச தமிழகத்தில் அச்சம் நிலவிய காலம் இருந்தது. ஆனால், ஜெயலலிதாவின் புண்ணியத்தால் அந்த அச்சம் இப்போது விலகியுள்ளது. 'பொடா' மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரையில் குறிப்பிட்ட விடயங்களே அதற்குக் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஈழத்தமிழர் பிரச்சினையோடு பரிச்சயமுள்ள மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

*"விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேச வேண்டும் என்பதுகூட இல்லை. ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் அவமானங்களை, வேதனைகளை, அடக்குமுறைகளைப் பற்றித் தமிழகத்தில் பிரசாரம் செய்தாலே போதும். ஈழத் தமிழர்கள் என்றாலே விடுதலைப் புலிகள் என்ற கருத்து பரவியுள்ள தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு மேலும் அதிகரிக்கும். இதற்குத தான் எங்கள் முதலமைச்சர் வழியேற்படுத்தியிருக்கிறார்." என்று கூறினார்.*

## 'பொடா' மறுஆய்வுக் குழுவின் பரிந்துரை

'பொடா' மறு ஆய்வுக்குழுவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைப் பார்க்கும்போது அந்த மூத்த பத்திரிகையாளர் கூறியது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே உள்ளது.

உதாரணத்துக்குப் பார்த்தால், 'பொடா' மறுஆய்வுக் குழுவின் பரிந்துரையில்,

*".....ஈழத்தமிழர்களையும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தையும் பற்றிப் பேச்சாளர்கள (பழ. நெடுமாறன், சுபவீரபாண்டியன் உள்ளிட்ட பொடாசட்டத்தில் கைதானவர்கள்) குறிப்பிட்டது, தமிழ் இனத்தின்மீது இலங்கை அரசு நடத்தும் போர் குறித்த அனுதாபமே. தமிழர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் பற்றிக் குறிப்பிட்ட பேச்சாளர்கள், "தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் சரி அவர்களுக்கு எந்தப்பிரச்சினை ஏற்பட்டாலும் சரி இந்தத் தாய்நாட்டில் தலைமைப் பொறுப்பு வகிப்பவர்களுக்கு அதனைத் தட்டிக்கேட்கவேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு என்று கூறுகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களைக் களைய இந்திய அரசு உதவவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில், ஈழத்தமிழர்கள் அவர்களுடைய சகோதர, சகோதரிகள். இந்தப் பேச்சாளர்களைப் பொறுத்தவரை தமிழக மக்கள் தங்கள் அரசியல் வேறுபாடுகளை மறந்து, ஒன்றிணைந்து குரல் எழுப்பியிருந்தால் ஈழத் தமிழர்கள் இந்த அளவுக்குத் துன்பப்பட்டிருக்கமாட்டார்கள். இங்குள்ளவர்கள் செய்த தவறினால்தான் ஈழத்தமிழர்கள் துன்பப்படுகிறார்கள. தமிழக அரசு சரியாகச் செயற்படாத காரணத்தால்தான் ஈழத்தமிழர்கள் இத்தகுகொடுமைகளையும், இன்னல்களையும் அனுபவிக்கிறார்கள் - என்று கூறுகின்றனர்..."*

*"......இலங்கையில் தமிழர்களுக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கான வாய்மொழி ஆதரவு தடைசெய்யப்பட்ட இயக்கத்துக்கான ஆதரவாகவோ, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான ஊக்கமாகவோ எடுத்துக்கொள்ளப்பட முடியாது....*

*"அனுதாபத்தைத் தெரிவிப்பதும், பிறரைப் புரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்வதும், ஈழத் தமிழர்களின் துன்பத்தைப் பகிர்ந்துகொள்வதும், தமிழர் நலன்குறித்துப் பேசுவதும், விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதாகாது. ஆகையால், அவர்கள் பேச்சு பொடா சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் குற்றமாகாது. அதனால், தமிழக அரசு பிரிவு 2(3)இன்படி வழக்கைத் திரும்பப் பெறும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்..."*

'பொடா' மறு ஆய்வுக்குழு தனது பரிந்துரையில் இவ்வாறெல்லாம் குறிப்பிட்டிருக்கிறது.

நெருக்கடியான காலத்தில்கூட ஈழத்தமிழர் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் வைகோ, பழ.நெடுமாறன், டாக்டர் இராமதாஸ் போன்றோருக்கு 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலல்லாவா' இருக்கும் என்று கேள்வி எழுப்புகின்றனர் விடயமறிந்தவர்கள். இதற்கிடையில் இந்திய அரசுக்கும் இதனால் பிரச்சினை வேறுவிதமாக எழக்கூடும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இன்றுவரை இலங்கை அரசு கொடுக்கும் தகவல்களும், இந்திய உளவுத்துறை தரும் தகவல்களுமே ஊடகங்களில் 'விளம்பரப்படுத்தப்பட்டன'. இந்தச் செய்திகள் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்கிய - காட்டுக்குள் ஒளிந்துள்ள - தீவிரவாதக் குழு வென்ற பிரமையையே - சாதாரண மக்களுக்கு இன்று வரை ஏற்படுத்திவருகின்றன. இது இந்திய வல்லாதிக்கத்தைப் பேண விரும்புபவர்களுக்கு மிக வசதியான ஒன்றாக இருந்து வந்தது. இலங்கையில் விடுதலைப் புலிகள் தனி அரசொன்றை நடத்தும் நிலைக்கு உயர்ந்துவிட்டார்கள் என்ற உண்மை நிலை - இந்தியாவில் கற்பனைக்கெட்டாத ஒரு விடயமாக - மூடிமறைக்கப்படுகிறது.

தற்போது ஈழத்தமிழர்களின் வாழ்க்கை







என்று பேசப்பட்டால் 'தமிழீழ அரசு' என்பதன் செயற்பாடுகளும் பேசப்பட்டேயாகவேண்டும் என்ற சூழ்நிலையில் -

'பொடா' மறுஆய்வுக்குழுவின் பரிந்துரை தந்த தெம்பில் தமிழகத்தில் 'புலிகளின் அரசு' பிரஸ்தாபிக்கப்படும்.

அப்போது-

குற்றவாளிகளுடன் கைகோர்க்கும் தமிழகப் பொலீஸாருடன் தமிழீழக் காவல்துறையை ஒப்பிட்டுப்பார்க்கவும் -

கட்சிக்காரர்களிடம் சிக்கிச்சீரழியும் தமிழக அரசு இயந்திரத்தைத் தமிழீழ நிர்வாக சேவையுடன் சீர்தூக்கிப்பார்க்கவும் -

ஊழல் பெருச்சாளிகள் ஆக்கிரமித்த தமிழக அரசியலைத் தமிழீழ நிதித்துறையுடன் அளவிடவும் -

தமிழக மக்கள் முனைவார்கள். அப்போது தமிழக அரசு மட்டுமல்ல, இந்திய அரசும்கூட தற்போதைய நிலையிலிருந்து இறங்கிவர வேண்டியிருக்கும் என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

அப்போதாவது இந்தியா யதார்த்த நிலையயை உணருமா? அல்லது இப்போது போலவே வீம்பு பிடிக்குமா?

வரலாறு தீர்மானிக்கும். ★

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Delica LX 100 நல்ல நிலையிலுள்ள டீசல் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு:0776151746. (45919)

நல்ல நிலையிலுள்ள ஹீரோ ஸ்ரீம் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 54/6, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். T.P.: 077 6094497. (45938)

யமகா மேற் 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.S.நாதன், No. 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (45931)

தரமான, தடுப்பு மருந்து வழங்கப்பட்ட ஊர்க் கோழிக்குஞ்சுகள், முட்டையிடும் Prima பேடுகள், பல்லின கோழிக்குஞ்சுகள், எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இ.விக்கி, மூளாய் றோட், மாவடி, வட்டுக்கோட்டை (சுப்பிரமணிய வித்தியாசாலை அருகில்). (45927)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் 5 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 570132 (நண்பகல் 12.00 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்). (45778)

அளவெட்டி தெற்கு, பிரதான வீதியில் 7 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தொலைபேசி இலக்கம்: 4202623 (சீ-43077)

## வீடு வாடகைக்கு

யாழ்.பிரதான வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தனியார் அலுவலகங்களுக்கும் உகந்தது). தொடர்பு: T.P.: 222 5576, 222 7593. (45890)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய நல்ல அழகான Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (45831)

## தவறிவிட்டது

ஹொலண்ட் நாட்டைச் சேர்ந்த சித்திரா தேவி வேலாயுதம் என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை, வங்கிக் கணக்கு அட்டை - 03, கைத்தொலைபேசி அட்டை, சில புகைப்படங்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் அடங்கிய சிறிய கைப்பை 27.05.2005 வெள்ளிக்கிழமை இருபாலைக்கும் யாழ்.நகருக்கும் இடையில் மினிபஸ்ஸினுள் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.P.: 0776589008 என்ற இலக்கத்துடன் அல்லது குணசிங்கம் சதீஸ், பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (45930)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 ஆம் ஆண்டு, பூசம் 2 ஆம் பாதம், 2இல் செவ்வாய், கிரகபாவம் 15 உள்ள, பயிற்றப்பட்ட விஞ்ஞான, B.A. கல்வி டிப்ளோமா தராதரமுடைய ஆசிரியைக்கு எழுதுவினைஞர், ஆசிரியர் அல்லது அதற்குச் சமமான தொழில் தகைமையுடைய மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (45891)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு, அச்சுவினி முதலாம் பாதம், கிரகபாவம் 13 உள்ள, மிக அழகான, சிவில் எஞ்சினியர் பெண்ணுக்கு டாக்டர், எக்கவுண்டர், எஞ்சினியர் மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் பின் வீதி, சாவகச்சேரி. (45892)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் - திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அம்பட்டப்பாலத்துக்கு அருகிலுள்ள காணி (பரப்பு 2 குழி 6.5) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வநாயகம், இல.05, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (45861)

உரும்பிராய், பெற்றோல் நிலைய அருகில் சாயி மில் முன் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.இரத்தினசிங்கம் (துரை), உதயசூரியன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (45939)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர் 1 kg 190/=, சுத்தம் செய்தது 285/=, கல்பேட் 1 kg 190/= மற்றும் புறொயிலர் குஞ்சு, கோழி எரு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K. Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K. Farm பெரிய மதவடி, மானிப்பாய் வீதி, உடுவில். (45670)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி, உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோசென்றர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45829)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், 06.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளான சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம், தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் என்பனவற்றிலும்கிடைக்கும். (45830)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள், எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289, A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா, T.P.:024 4588410, 0776 630207. (45057)

விவரங்கள் வழங்கப்பட்ட வயதடிப்படையில் வகுக்கப்பட்ட, புகைப்படங்களிணைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான கடிதக்கோப்புக்களிலிருந்து "இலகுவழி சுயதெரிவு முறையில்" Easy Method self selection விரும்பும் நாட்டிலிருந்து மணமகனையோ மணமகளையோ சுகமாகத் தெரிவுசெய்யும் வாய்ப்பு வசதியுண்டு! தெரிவுசெய்யப்பட்டவை சோதிட ரீதியாகப் பொருத்தமுடையனவா என்பதையும் நொடிப்பொழுதில் அறியவும் முடியும். மேலதிக விவரங்களைச் செவ்வாய், அரச பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் மாலை 4.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரையான நேரகாலத்துள் திருமணப் பொருத்துநர் வேல் அமுதனிடம் விசாரித்தறிக. வேல் அமுதனின் கொழும்புத் தொலைபேசி இலக்கங்கள் 2360488, 4514396. (சீ-43055)

## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட G.S.M. - LAND PHONES மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. SIM மைப் பாவித்து எப் பகுதியிலும் உபயோகிக்கலாம்.

தொடர்பு: 0714 - 555622, 2363263.

(சீ-43056)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், சொந்த நிறுவனமும் முதுசமும் உள்ள, 47 வயது, விவாகரத்துப் பெற்றவருக்குத் தகுந்த பெண் தேவை. திருமணமாகாதவர்கள் , விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் விரும்பத்தக்கது. ஜாதகம் மற்றும் சகல விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். மே/பா உதயன் விள.இல2601. (45869)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 34 வயதுடைய, கிரகபாவம் 6, செவ்வாய்க் குற்றமற்ற, ரோகிணி நட்சத்திரம், பயிற்றப்பட்ட ஆசிரியருக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு விள.இல. 2603, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (45888)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயதுடைய, கேட்டை நட்சத்திரம், 15½ பாவம், செவ்வாய் தோசமற்ற, அரச மருத்துவத்துறையில் உதவி வைத்தியராகப் பணிபுரியும் மணமகனுக்கு நற்குணமுள்ள, படித்த, அழகிய மணமகள் தேவை. சகல விவரங்களுடனும் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 2600, C/o உதயன். (45842)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் (Computer Science) படித்த, 30 வயதுடைய மணமகனுக்கு வெளிநாட்டில் PR உள்ள, கிரகபாவம் 10 இலும் குறைந்த மணமகள் தேவை. (லண்டன் ஆயின் விரும்பத்தக்கது) விவரங்களுக்கு பொ.சிவகுரு, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (45837)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வயது 30, நட்சத்திரம் கார்த்திகை M.Sc. Computer Engineering in S/W and H/W, B.Sc. Engineering, Electrical and Electronics Cima Fully Qualified P.R.உள்ள ஆஸ்திரேலியாவில் தொழில்புரியும் Engineer மணமகனுக்குப் படித்த குணமுள்ள மணமகள் தேவை. MBBS டாக்டர் Accountant விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 2604, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (45926)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976, பூர நட்சத்திரம், 7 இல் செவ்வாயும் 55 கிரகபாவமும், 6 அடி உயரமும் கனடாவில் வதிவிட உரிமையும் தற்சமயம் டுபாயில் கணக்காளராக (ACMA) தொழில்புரியும் மணமகனுக்கு கணக்காளர், பொறியியலாளர், Doctor பெண்கள் விரும்பத்தக்கது. (தயவுசெய்து முதல் கடிதத்திலேயே முழு விவரமும் அறியத்தரவும்) தொடர்பு: விளம்பர இல. 2605, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (45937)

## தவறிவிட்டது

கடந்த 3 நாள்களுக்கு முன்பு நாவற்குழிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் கதிர்வீச்சுப் படம் (X RAY) அடங்கிய பயணப் பை ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து நோயாளியின் நன்மை கருதி கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி, நவீன சந்தையில் அமைந்துள்ள கீதா ஆ[illegible] மாளிகையில் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(45925) T.P.: 0777 737336.

## இசை நிகழ்வு

சக்தி ரீ.வி., சக்தி எவ்.எம். இணைந்து நடத்தும் மாபெரும் இசை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மண்ணில் முதல் முதலாக சக்தி எவ்.எம்.இன் அறிவிப்பாளர்களுடன் ராஜன் இசைக்குழுவினரும் தமிழீழ எழுச்சிப் பாடகர்களான சாந்[illegible], சுகுமார் ஆகியோரும் இணைந்து இந்த இசைக் கச்சேரியை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-202)

## வல்லைப் பாலத்திலிருந்து தவறிவீழ்ந்தவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே29

வல்லைப் பால இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த வேலையாள் ஒருவர் அதிலிருந்து தவறி கீழே வீழ்ந்து ஒரு கை முறிந்தும் தலையிலும் படுகாயமடைந்தார். குருநாகலைச் சேர்ந்த எஸ்.திலகரட்ணா (வயது-45) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(எ-15)

## விழிப்புணர்வுக் கூட்டம்

வலி.தென்மேற்கு,மே29

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடத்தும் விழிப்புணர்வுக் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குச் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி எஸ்.சுரேஷ்மோகன், வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன், வலி.மேற்கு அரசியற்றுறைப் பொறுப்பாளர் அனபு ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

(எ-135)


## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்க, இலக்கணம் பயில மேற்படிப்பு வரை By: விக்னேஸ்வரன் ஆச்சாரி, Dip. in English, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (45946)

வாழ்க்கையாளர்களே...

பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்

வி.ம. ஸ்ரான்லி வீதி, (பழைய தாம் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475

யாழ். வீதி, மானிப்பாய். T.P: 021-222 2884

E.mail: moorthylazer@yahoo.com

(C-42586) (54-15)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா பல்கலைக்கழகத்தில் உயர் பட்டம்பெற்று அங்கு தொழில்புரியும், 38 வயதுள்ள 7 இல் செவ்வாய் ஆட்சியில் சதய நட்சத்திரமுடைய மணமகனுக்கு 28-34 வயதுக்குட்பட்ட, மெல்லிய, சிவந்த, குறைந்தது Degree தகமையுடைய மணப் பெண் தேவை.

தொடர்பு: 'கிருபா சக்தி வாசா', கஸ்தூரி வீதி, ஆனைக்கோட்டை.

[மானிப்பாய் தியாகசீலம் சிறுவர் பூங்கா முன் ஒழுங்கை]

31.05.05 - 04.06.2005 காலப் பகுதியில் மாலை 2.00 - 4.30 மணிக்கிடையில் படத்துடன் நேரடித் தொடர்பு மாத்திரம் வேண்டும். T.P.: 077 6648688

(45944)

## இளம் இசைப்பிரியர்களே!

யாழ்.குடாநாட்டின் பல பாகங்களில் மேடை ஏறிப் பல பாராட்டுக்களையும் வரவேற்புகளையும் பெற்றவர்களான யாழ்.புகழ்

ரிதம்ஸ் இசைக்குழுவினர்

ரசிகர்களை இசை வெள்ளத்தில் ஆழ்த்திட வருகின்றார்கள். புதிய, பழைய, இடைக்காலப் பாடல்களையும் இளைஞர்களைக் குதூகலிக்க வைக்கும் துள்ளல் இசைப்பாடல்களையும் அள்ளி வழங்குவதோடு, தாயகப் பாடல்களைச் செல்லப்பாவின் அதே குரல் வண்ணத்துடன் வழங்கி ரசிகர்களை மகிழ்விக்க வருகின்றார்கள்.

தொடர்புகளுக்கு:

கலைச்செல்வன், புகழ் கல்வி நிலையம், சுதுமலைச் சந்தி, மானிப்பாய். T.P.: 077 9037276.

R.கீதப்பிரியன் (இயக்குநர்), நியூ வீணாகானம், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7729, 077 9123033.

மணிக்குரல் சற்குணம் - யாழ்ப்பாணம் T.P.: 021 222 7535.

(45899)(26-14-17)

## NET வட கிழக்கு தொழில் நுட்பம்
## NORTH EAST TECHNOLOGIES

புத்தம் புதிய கணனிகள், மீளமைக்கப்பட்ட கணனிகள், கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனை சகல வித திருத்த வேலைகள் மற்றும் Un Locking வசதிகளுக்கு, விரையுங்கள்...... NET காட்சியறைக்கு!!

விசேட விற்பனை வாரம் - 29.05.05 இலிருந்து 03.06.05 வரை!

29 – 31 வரை 10% கழிவுகள்!

01 - 03 வரை 5% கழிவுகள்!

Mobile Phone Repair Technology Diploma Course-3வது பிரிவு ஆரம்பம் - 04.06.2005

20 பேர் மட்டுமே. பதிவுகளிற்கு முந்துங்கள்

புத்தம் புதிய PIV-2.26GHz, 2.8GHz (Hyper Threading), 3.0GHz(HT-Technology) கணனிகள், மீளமைக்கப்பட்ட PII, PIII - IBM, Dell, Compaq, Samsung கணனிகள்;

1வருட அபான்ஸ் உத்தரவாதத்துடன் கூடிய புத்தம் புதிய மொபைல் போன்கள்

மற்றும்

சகலவித கணனிகள், மொபைல் போன்களின் சகல வித திருத்த வேலைகளை குறைந்த செலவில் செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

North East Technologies, 34, Saddanathar Rd,Nallur,Jaffna

Tele: 021-2223786, 0777-708498(Hotline).

(சீ-43078)





## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

முகுந்தன் - சோபனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் அபிஷேக்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (29.05.2005) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

செல்வன் அபிஷேக்கை டடி, அம்மியா, பப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், மாமாமார், அன்ரா, பூட்டி, அன்ரி, அத்தை, தங்கா, கிசோளா, சுஜீவன், சுலக்சன், சின்னப்பம்மாமார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் சீருடனும், சிறப்புடனும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என அம்மனின் அருள் வேண்டி வாழ்த்துகின்றனர்.

118, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3427.

கு.ஜெயம் (பப்பா)

(45835) (53-11-15)

# காங்கேசன், பருத்தித்துறை, தலைமன்னார் துறைமுகங்களுக்கு கடல் வழிப் பாதைகள் அமைத்தால் எமது பகுதிக்கும் பயன்



**சேது சமுத்திரத் திட்டம். இப்போது செய்திக்குள் வந்திருக்கும் பல தரப்பட்ட கருத்துக்களை- சாதக, பாதகங்களை - கிளப்பியிருக்கும் விவகாரம்.**

**இது விடயத்தைத் தமக்கே உரிய ஆய்வு நிலை நின்று நோக்குகிறார் யாழ்.பல்கலைக்கழகத்தின் மூத்த புவியியல் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.**

இந்திய - இலங்கை புவியமைப்பை அவதானித்த அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் போக்குவரத்துத் தொடர்பாக இரு எண்ணக் கருக்களை முன்னெடுத்தார்கள். குறிப்பாக, இந்தியாவும் இலங்கையும் ஆங்கிலேயரால் ஆளப்பட்டபோது, சேது சமுத்திரக் கால்வாய் அமைப்பதன் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றியும் இந்தியாவிலிருந்து இராமேஸ்வரம் - தனுஸ்கோடி புகையிரதப் பாதையைத் தலைமன்னாருடன் இணைப்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டங்கள் குறித்து சாதகமான தீமானங்களை அவர்கள் கொண்டிருந்தபோது, நிதி நெருக்கடி மற்றும் தொழில்நுட்பப் பிரச்சினைகளால் காலத்துக்குக் காலம் இத்திட்டங்கள் பிற்போடப்பட்டு வந்தன. இன்றும்கூட சேது சமுத்திரத் திட்டம் ஒரு பக்கமும் ஆதாம் பாலம் வழியாகப் பெருஞ்சாலை அமைக்கும் திட்டம் மறுபக்கமுமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்தை விரும்பி நிற்க, இலங்கை அரசு அதற்கு மாற்றீடாக ஆதாம் பாலம் வழியாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பெருஞ்சாலை அமைப்பதை விரும்பி நிற்கின்றது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆதாம் பால வழிப் பெருஞ்சாலை அமைப்பது பற்றி இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

சேது சமுத்திரத் திட்டம் பல தடைகளைத் தாண்டி, இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் நிலைக்கு இன்று வந்துள்ளது. இத்திட்ட எண்ணக்கரு 145 வருட காலத்தைக் கொண்டது. காலத்துக் காலம் இத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் நாட்டில் மேலோங்கி ஒலித்த போதும், பல காரணங்களால் அது கைகூடவில்லை.

### இந்தியா வளம் பெறுநிலைக்குச் சாதகம்.

பிரித்தானிய கால இந்தியாவிலும், சுதந்திர இந்தியாவின் முதல் ஐம்பது ஆண்டு காலப் பகுதியிலும் நிலவிய அரசியல், பொருளாதார, பாதுகாப்பு விடயங்களின் பின்புலத்தில், இத்திட்டம் முன்னுரிமை பெறக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இந்தியாவின் இன்றைய பொருளாதார, இராணுவ நலன்களைத் தக்கவைப்பதிலும் முன்னெடுப்பதிலும் இத்திட்டம் வளம் பெறு நிலையில் காணப்படுகிறது.

இந்திய அரசின் பல ஆய்வு மதிப்பீடுகளின்படி, இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், பிரதேச அபிவிருத்தி ரீதியாகவும், சுற்றுச்சூழல் பேணல் ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் முன்னெடுக்கக்கூடியது என அரசிற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசின் இன்றைய நிலையில், இப்பெரிய திட்டத்தை முன்னெடுக்கக்கூடிய நிதி நிலை அந்நாட்டுக்கு உள்ளது. இப்பின்னணியிலேயே இந்திய அரசு இத்திட்டத்தை அங்கீகரித்து, மூன்று வருடங்களில் அதனை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது.

### முதலாவது கடற்கால்வாய் சுயெஸ்

இத்திட்டத்தின் பிரதான அமைப்பு 151.2 கிலோமீற்றர் நீளமான கால்வாய் அமைக்கும் பணியாகும். இக்கால்வாய் 300 மீற்றர் அகலத்தையும் 10-14 மீற்றர் ஆழத்தையும் கொண்டதாக விளங்கும். கால்வாயின் நடுப்பகுதியின் ஒரு சிறு பகுதியே இராமேஸ்வரத் தீவை ஊடறுத்து நிலத்தினூடாகச் செல்லும். கால்வாய் அமைப்பின்போது பெருமளவு கல்,மண் அகழ்ந்து எடுப்பதும், அவற்றைத் தெரிவு செய்த இடங்களில் கொடுப்பதும் பெரும் பணியாக அமையும்.

சேது சமுத்திரத் திட்டம்தான் உலகின் இயலாது கடற்கால்வாய்த் திட்டம் எனக் கூற முடியாது 19ஆம் நூற்றாண்டில் தொழில்நுட்பம் மிக முன்னேறாத நிலையில், சேது சமுத்திரக் கால்வாயிலும் பார்க்கப் பெரிய திட்டமான சுயெஸ் கால்வாய் அமைக்கப்பட்டு இன்றும் அது ஒரு முக்கியமான கடற்கால்வாயாக விளங்குகின்றது.

இதே போல், வடதென் அமெரிக்காவைப் பிரிக்கும் பனாமா கால்வாய் மிகவும் சிக்கலான தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டு இன்றும் அது பாவனையில் உள்ளது. போல்டிக் கடலிலிருந்து வடகடலுக்குக் கப்பல்கள் செல்லும் பொருட்டு, ஜேர்மனியில் ஜூத்லாந்துக் குடாநாட்டை ஊடறுத்து, ஷ்லேஸ்விக் - ஹொல்ஸ்ரைன் பகுதி ஊடாக கீல் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் கப்பற்போக்குவரத்துக்காக றைன், டனியூப், றோன், எல்ப், ஓடா போன்ற பல ஆறுகள் ஆழமாக்கப்பட்டும், இவை தரைவழிக் கால்வாய் ஊடாக இணைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

அதாவது கடல்வழி, தரைவழிக் கால்வாய்கள் அமைப்பு தென்னாசியாவில் பெரிதாக விருத்தி பெறாதிருப்பினும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இவை நீண்ட வரலாற்றுப்

## சேதுசமுத்திரத் திட்டத்தால் திருமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கும்

பின்னணிகளைக் கொண்டு விளங்குகின்றன. ஆங்கிலக் கால்வாய்க்குக் கீழ் இங்கிலாந்துக்கும் பிரான்ஸிற்கும் அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை போன்ற பெரிய பொறியல் திட்டங்களை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம்.

### தமிழ்நாட்டு கட்சிகளின் பங்கு

சேது சமுத்திரத்திட்டத்தை இன்று முன்னெடுப்பதற்கு முக்கிய காரணமாக விளங்கு




வது மத்தியில் ஆட்சி புரியும் தேசிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க. தலைமையிலான தமிழ்நாட்டுக் கூட்டணிக் கட்சிகளே. மேலும் இத்திட்டத்தை முன்னெடுபபதற்காக மத்திய அமைச்சில் தரைவழி மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சை தி.மு.க. பெற்று, மூத்த உறுப்பினரான டி.பாலு அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். மேலும் இனறைய நிதி அமைச்சரான ப.சிதம்பரம், தென்தமிழ்நாட்டின் அபிவிருத்தியிலும் தனது தொகுதியான சிவகங்கையின் அபிவிருத்தியிலும் சேது சமுத்திரத்திட்டம் பெரும் பங்கை வகிக்கலாம் எனக்கருதி, இத்திட்டத்தை முன்னெடுக்க உறுதுணையாக விளங்குகின்றார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, குறிப்பாக பாண்டி நாடு, நாஞ்சில் நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சிக்கு இத்திட்டம் வழிவகுக்கும் என்பதால் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் மக்களும் இத்திட்டத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். எனினும், தங்கள் ஆட்சிக் காலத்தில், அல்லது தங்களின் முனைப்பான செயற்பாடுகளினால்தான் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது எனக் காட்டிக்கொள்ள அரசியல்வாதிகள் பலரும் விரும்புகின்றனர். மத்திய அரசியல் இத்திட்டத்திற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர், தி.மு.க.கட்சியினரானபடியால் இத்திட்டத்தை அவர் தலைமையில் முன்னெடுப்பதன் மூலம் தி.மு.க. தமிழ்நாட்டு மக்களின் அபிமானத்தைப் பெற்றுவிடும் என்ற ஆதங்க நிலையில் அ.தி.மு.க. காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

### கட்சிப்போட்டி அரசியலின் ஒரு முகம்

இதனால் தான் இத்திட்டத்திற்கான மாநில அரசின் கடமைகள், உதவிகள் கிடைப்பதில் தாமங்களும் தடைகளும் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. இது தமிழ்நாட்டில் சகல துறைகளிலும் காணப்படும் கட்சிப் போட்டி - அரசியலின் ஒரு முகம் எனக்கொள்ளலாம். எதுவாயினும் பாதிக்கப்படுவது மக்களே.

சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் குறிப்பாக, இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்கும், கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரைக்குமான கடல்வழிப் பயணங்களை இலங்கையைச் சுற்றாமல் மேற்கொள்ள வழி பிறக்கின்றது. இதனால் தூர,நேர, செலவுக் குறைவு ஏற்பட இடமுண்டு. இக்கால்வாய் அமைக்கப்படின் 254-424 கடல் மைல்களையும் 21-36 மணித்தியாலங்களையும் மீதப்படுத்தலாம். மேலும், இந்தியாவின் மேற்கு - கிழக்கு துறைமுகங்களுக்கிடையேயான வர்த்தகம் விருத்தி பெறும்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவும்

தமிழ் நாட்டின் துறைமுகங்களான தூத்துக்குடி, குளைச்சல், நாகபட்டினம் கடலூர் ஆகியன வளர்ச்சி பெற வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டின் தென்மாவட்டங்கள் குறிப்பாக இராமநாதபுரம்,சிவகங்கை, சிவகாசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திண்டுக்கல், புதுக்கோட்டை, மதுரை, நாகபட்டினம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மதுரை - திண்டுக்கல் கைத்தொழில் பிரதேசத்தைப் பின்புலமாகக் கொண்ட பரப்புக்கு அம்மாசத்திரம் பெரியதொரு துறைமுகமாக வளர்வதற்குரிய வாய்ப்புகள் ஏற்படலாம். தமிழ்நாட்டின் பின்தங்கிய தெற்குப் பிரதேசங்களின் பிராந்திய வளர்ச்சிக்கு இத்திட்டம் வழிவகுக்கும் எனப் பொருளியல் நிபுணர்கள், பிரதேச அபிவிருத்தியாளர்கள் ஆருடம் கூறுகின்றனர்.

### இலங்கையைச் சுற்றாமல்

இந்தியா இந்து சமுத்திரத்தில் தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துக்கொண்டு வருவதால், அதனது கடற்படைக் கலங்கள் அராபிக் கடற்பகுதியிலிருந்து வங்காள விரிகுடாப் பகுதிக்கு இலங்கையைச் சுற்றாமல் பயணம் செய்ய வாய்ப்பு ஏற்படும். இதனால், யுத்தகாலத்தில்கூட இந்தியா இலங்கையின் உதவியை நாடத்தேவையில்லை. இந்தியத் தென்கரையில் உள்ள கடற்படைத்தளங்கள் மற்றும் விஜயபட்டியில் அமைந்திக்கும் கடற்படை நீர்மூழ்கிக் கண்காணிப்பு மையத்தை இலகுவாகப் பாதுகாக்க முடியும். இத்திட்டத்தால் கணிப்பியல் திட்டம் சார்ந்த பல நன்மைகளை இந்தியா பெறமுடிகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து விடுமோ என்ற ஐயம் எழுப்பப்படுகிறது. ஆனால், கொழும்புத் துறைமுகம் உச்சப் பயன்பாட்டில் இருப்பதால் துறைமுகத்தின் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வது கொழும்பு நகரின் செயற்பாட்டிற்கு இடர் உண்டுபண்ணுவதாகவே அமையும். இலங்கையின் தென்கரையோர வழியாகச் செல்லும் கப்பல்கள் அவற்றின் சேவைகளைப் பெறுவதற்குச் சிறந்த இட அமைவில் உள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகமே பொருத்தமானது.

### கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறையாது

சுயெஸ் கால்வாய் ஊடாக வரும் கப்பல்களும் இந்து சமுத்திரத்தின் மேற்குப் பகுதியில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்கும் கிழக்கு ஆசியாவுக்கும் செல்லும் கப்பல்களும் இலங்கையின் தென்கரையோர வழியாகவே பயணம் செய்யும். இதனால், மேற்குறிப்பிட்ட வழியில் செல்லும் கப்பல்கள் சேது சமுத்திரக் கால்வாய் அமைக்கப்பட்ட பின்னரும்கூட அதனூடாகப் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்படாது. இந்தியாவின் கிழக்கு - மேற்குக் கரையோரப் பகுதிகளுக்குச் செல்லும் சில கப்பல்களும் வங்காள தேசத்திற்குச் செல்லும் சில கப்பல்களும் சேது சமுத்திரக் கால்வாய் ஊடாகச் செல்லலாம். மேலும், பெரிய கப்பல்களும் எண்ணெய்த் தாங்கிகளும் இக்கால்வாய் ஊடாகச் செல்லக் கூடிய முறையில் கால்வாய் அமையாது. ஆகவே, இக்கப்பல்கள் தொடர்ந்தும் கொழும்புத் துறைமுகத்தையே நாடிநிற்கும். இதனால், கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறையும் என்ற நிலை பொருத்தமற்றது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் விருத்தி செய்யப்படுமாயின் இலங்கையின் தென்கடல் வழியாகச் செல்லும் கப்பல்கள் கொழும்புக்குப பதிலாக அம்பாந்தோட்டையைப் பயன்படுத்துவது வசதியாகவும் மலிவானதாகவும் அமையும். அம்பாந்தோட்டைத் துறைமுக வளர்ச்சி கொழும்புத் துறைமுகத்தின் அழுத்தத்தைக் குறைப்பதுடன் தென்பகுதி அபிவிருத்திக்கு வழிவகுப்பதாக அமையும். இலங்கை அரசு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விருத்தி செய்யப் பல முயற்சிகளை மேற்கொண்டபோதும் இதனைத் துரிதமாக முன்னெடுக்க முடியாமற் போனதற்குக் காரணம் சில தென்கிழக்கு ஆசிய நாடுகள் மறைமுகமாகத் தடைபோடுவதே எனக கூறப்படுகிறது இந்நாடுகளின மறைமுகச் செயற்பாட்டாலும் ஊடுருவலாலும் அம்பாந்தோட்டைத் துறைமுக விருத்தித் திட்டத்தை முன்னெடுக்க முடியாமலுள்ளது.

### திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

இதுவரை காலமும் இலங்கைக்கான கூடுதலான இறக்குமதி மேற்கு நாடுகளிலிருந்து கொழும்புத் துறைமுகம் ஊடாகவே நாட்டிற்குள் வந்தது. இன்று நாட்டின் இறக்குமதி கூடுதலாக ஜப்பான், சீனா, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலிருந்து இடம்பெறுவதாலும் கப்பல்களின் பருமன் அதிகரிப்பதாலும் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இலங்கை அரசு காங்கேசன்துறை, திருகோணமலை, ஒலுவில், அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களின் வளர்ச்சியை முன்னெடுக்குமாயின் சிறந்த செயற்பாடுகள் பல மடங்கு விருத்தியாகி, பொருளாதார வளம் காணலாம்.

### காங்கேசனுக்கு முன்னுரிமை தேவை

சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும்போது இலங்கையின் வடக்கு- கிழக்குத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறும். ஏற்கனவே, சிறிய துறைமுகமான காங்கேசன்துறையை ஆழமாக்கி பெரிய துறைமுகமாக அபிவிருத்தி செய்யின் சேது சமுத்திரக் கால்வாய் மூலம் இலங்கையையும் அடையும். இதனால், இலங்கையின் துறைமுக அபிவிருத்தியில் காங்கேசன்துறைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

### இலங்கையின் ஆள்புல உரிமைக்குப் பங்கம் ஏற்படாது

சேது சமுத்திரக் கால்வாய், இந்தியக் கடற்பரப்புக்குள் அமைவதால் இலங்கையின் இறைமைக்கோ ஆள்புல கடல் உரிமைக்கோ முரணபாடுகள், பாதிப்புகள் ஏற்பட சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது. இந்தியா தனது கடற்பரப்

## ஒரு நோக்கு

பில் தனது செலவில் இத்திட்டத்தை மேற்கொள்கின்றது. இலங்கை இத்திட்ட அமைப்பில் பங்குகொள்ளவுமில்லை; செலவுசெய்யமில்லை. ஆனால், ஒரு சில அபிவிருத்திகளை மேற்கொண்டால் இலங்கையும் இக்கால்வாயைப் பயன்படுத்தி அதிக நன்மை அடையலாம்.

• இக்கால்வாயிலிருந்து காங்கேசன்துறை, பருத்தித்துறை, தலைமன்னார் போன்ற துறைகளுக்கு கடல்வழிப்பாதைகள் அமைத்தால் நாமும் பயனைப் பெறலாம் மேலும், இக்கால்வாய் அமைப்பால் இந்திய அரசிற்கு இலங்கைக் கடற்பரப்பில் தலையிட வேண்டிவாராது. 300 மீற்றர் அகலத்தை இக்கால்வாய் கொண்டிருப்பதால் கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்கள் யாவும் ஓர் ஒழுங்குமுறையிலேயே பயணம் செய்யவேண்டும். பரவலாகச் செல்லமுடியாது. இதனால், பாதுகாப்பு, கண்காணிப்பு போன்றவை இலகுவாக அமைவதால் சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெறுவதற்கு வாய்ப்பிராது. *(வளரும்)*

# யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர்
# உயர்திரு. செ. செல்வராசா அவர்களின்
# மணிவிழாச் சிறப்பு மலர் -29-05-2005

## சேவை உள்ளம் கொண்ட அதிபர்

எங்கள் ஆலயத்திற்கும் பாடசாலைக்குமிடையே நெருங்கிய நல்ல தொடர்புகள் உண்டு. பாடசாலையில் கற்பிக்கும் ஒரு தொண்டர் ஆசிரியருக்குரிய வேதனத்தை ஆலயம் வழங்கி வருகிறது. மேலும் பாடசாலையின் தேவை கருதி ஆலய சார்பில் வாங்கப்பட்ட காணியை பாடசாலையின் விளையாட்டுத்தேவைக்கு வழங்கியுள்ளது. இப்படியாக இணைத்தவர் அதிபர் செல்வராஜா அவர்கள். அவர் ஓய்வுபெறுகிறார் என்ற செய்தி எல்லோருக்கும் ஓர் ஏக்கத்தை தருகிறது. அவரது ஓய்வு வாழ்க்கை மகிழ்ச்சிகரமான தாகவும், சுகநலம் உடையதாகவும் விளங்க எல்லாம் வல்ல வேதவிநாயகர் அருள் புரியவேண்டுமென இறைஞ்சி வேண்டுகிறேன்.

வாழ்க நலமுடன்!

ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம்.
**சிவஸ்ரீ கு. பரமசிவக்குருக்கள்**
பிரதமகுரு

## தேவைகளை நிறைவேற்றியவர்

அன்பும், பண்பும் நிறைந்த அதிபர் உயர் திரு. செ. செல்வராசா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பே[illegible]கிறேன். தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலையில் இ[illegible] சேவைக்காலம் பாடசாலை வளர்ச்சியில் மிக முக்கிய மா[illegible]கட்டமாகும்.

பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்புடன் வகுப்பறைத் தேவைகளின் பெரும் பகுதியினைப் பூர்த்தி செய்ததுடன் விளையாட்டு மைதான விஸ்தரிப்பிலும் வெற்றி கண்டுள்ளார். கல்வி அபிவிருத்தியிலும் பெற்றோர் ஆசிரியரின் ஒத்துழைப்புடன் சிறப்பான அடைவுகளை மாணவர்பெற வழிகாட்டியுள்ளார்.

மணிவிழா நாயகன் ஓய்வுக்காலத்தில் சீரோடும் சிறப்போடும் நோயற்ற வாழ்வு வாழவும் சமய, சமூகப் பணியாற்றவும் இறையருள் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

வலயக்கல்வி அலுவலகம்,
வலிகாமம்,
26.05.2005.
**ப. விக்னேஸ்வரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்.

## பண்பால் உயர்ந்த அதிபர்

தனது அறுபது அகவையைப்பூர்த்தி செய்து ஓய்வுபெறும் அதிபர் திரு. செ.செல்வராசா (இல.அ.சே. தரம் 1) அவர்கள் 8 வருடங்கள் தன்னலமற்ற சேவையால் பாடசாலையின் வளர்ச்சியிலும் கல்வி அபிவிருத்தியிலும் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியமை உணர்ந்து அவ்வூர் கல்விச்சமூகத்தினர் அவரைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக மணிவிழா ஒன்றினை எடுப்பதை யிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தாவடியில் வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கூடமாக இருந்து வளர்ச்சி பெற தரம் 11 பாடசாலையாக வளர்ச்சி பெற்று நல்ல கட்டுக்கோப்புடன் இயங்கிவருகின்றது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அங்கு கடமையாற்றும் அதிபரதும் சக ஆசிரியர்களினதும் கூட்டுச்செயற்பாடுகள் முக்கிய காரணம் என்பதற்கு இப்பாடசாலை நல்லதோர் எடுத்துக்காட்டாகும். அதிபர் செ.செல்வராசா கல்வி சார்ந்த உத்தியோகர்த்தர்களின் வழிகாட்டலை ஏற்று மாணவர் கல்வி தேர்ச்சிமட்டத்தை உயர்வடையச் செய்யவேண்டுமென அவற்றை நிறைவேற்றுவதே தனது கடமைப் பொறுப்புடனும் செயலாற்றியவர் இவர். ஓய்வுக்காலத்தில் தேகாரோக்கியத்துடனும் மனமகிழ்ச்சியுடனும் தனது குடும்பத்தவருடனும் நீண்டகாலம் வாழ வாழ்த்துவதோடு தொடர்ந்து சமூகத்திலும் நற்பணிகள் செய்து வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் - உடுவில். **செ. குபேரநாதன்.**

## ஆளுமை மிக்க அதிபர்

மணிவிழாக் காணுகின்ற அதிபர் திரு.செ.செல்வராசா அவர்களை வாழ்த்தி செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக என்கின்ற பல்வேறு மட்டங்களில் பதவிவகித்து இன்று மணிவிழாக்காணும் திரு. செல்வராசா அவர்கள் ஒரு முதலாம்தர அதிபராவார். அதிபர் சேவையில் அதியுயர் தரத்தைக் கொண்டிருப்பத னால் பாடசாலை நிர்வாகத்தில் தனக்கென முத்திரை பதித்தவர்.

அதிபர் திரு. செல்வராசா எனது ஊரைப்பிறப்பிடமாகக் கொண்டிருந்தமையால் நான் அவர் ஆளுமையைப் பற்றி நன்கறிவேன். அவர் யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு அதிபராகியதிலிருந்து அப்பாடசாலை பெற்றுவந்த அபிவிருத்தியை மெச்சாமலிருக்கமுடியாது. கட்டடம், தளபாடம், விளையாட்டு மைதானம் எனப் பல கோணங்களில் அபிவிருத்தி இடம்பெற்றுவந்திருப்பதனைக் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன்.

இத்தகைய ஆளுமை கொண்ட அதிபர் தொடர்ந்தும் கல்விச் சமூகத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்ற ஆவலை வெளிப்படுத்துவதுடன் அவர் தனது குடும்பத்துடன் பல்லாண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

செயலாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை.
**திருமதி. சரஸ்வதி சொக்கலிங்கம்.**

## தன்னலமற்ற சேவையாளர்

எமது பாடசாலையில் 8 வருட கால அதிபர் சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்றுச் செல்லும் எமது மதிப்பிற்குரிய அதிபர் உயர்திரு. செ.செல்வராசா அவர்கள் தனது சேவைக்காலத்தில் பாடசாலையின் வள விருத்திக்கும் கல்வித்தர மேம்பாட்டிற்கும் தன்னலமற்ற சேவையை ஆற்றியுள்ளார். அவரது சேவையின் காரணமாக பாடசாலை இன்று தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளது.

அவரிடம் உள்ள பொறுமையும் மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் அவர் பழகும் இனிமையும் சிறந்த நிர்வாகத்திறமையும் அவர் சிறப்பான ஆளுமையும் பண்புகள் நிறைந்த அதிபர் என்பதைக் காட்டுகின்றன. அதிபர் அவர்கள் நோய் நொடி இன்றி வளமுடன் வாழ எல்லாம்வல்ல விநாயகரை வேண்டுகிறேன்.

உப அதிபர் **ஐ. மனோகரன்.**



## சேவைநலன் பாராட்டு

அறுபது அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும்
**அதிபர் திரு.செ.செல்வராசா** (அ. தரம் 1)
யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை - 30.05.2005

### ஆரம்பக்கல்வி யா/ இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலை தொடர்ந்து கே/ எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரி

### சேவை விவரம்

01.11.1968- 14.07.1969 - மாணவ ஆசிரியர், கே/ தெரணியகல மகா வித்தியாலயம்
15.07.1969- 31.01.1970 - ஆசிரியர், கே/ புனித மேரி தமிழ் வித்தியாலயம்
01.02.1970 - 31.12.1971 - பயிற்சி ஆசிரியர், யா/ கொழும்புத்துறை ஆ.ப.கலாசாலை
01.01.1972 - 14.02.1973 - ஆசிரியர், க/ மாறஸ்ஸன தமிழ் வித்தியாலயம்
15.02.1973 - 31.12.1974 - ஆசிரியர், க/ இரஜவெல தமிழ் மகாவித்தியாலயம்
01.01.1975 - 30.07.1980 - ஆசிரியர், மு/ ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி த.வி.
31.07.1980 - 31.01.1985 - அதிபர், மு/ முத்தையன்கட்டு மன்னாகண்டல் அ.த.க. பாடசாலை
01.02.1985- 18.09.1987 - அதிபர், மு/ ஒட்டுசுட்டான் காதலியார் சமளங்குளம் அ.த.க. பாடசாலை
19.09.1987 - 25.07.1991 - அதிபர் யா/ உடுவில் ஹோலி றோசறி றோ.க. பாடசாலை
26.07.1991 - 05.10.1997 - அதிபர், யா/ சங்குவேலி அ.த.க. பாடசாலை
05.10.1997 - இன்றுவரை - அதிபர், யா/ தாவடி இந்து த.க. பாடசாலை

**யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**
**அதிபர் உயர்திரு. செ.செல்வராசா அவர்களின்**
**மணிவிழா**

காலம்: 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணி
இடம்: பாடசாலை மண்டபம்
தலைமை: திரு.க.தேவராஜா(தலைவர், மணிவிழாச்சபை)
பிரதம விருந்தினர்: திரு.ப.விக்னேஸ்வரன் (வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்)
சிறப்பு விருந்தினர்: திரு.S.திருவாகரன் (பிரதேச செயலாளர், உடுவில்)
திரு.செ.குபேரநாதன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)
திருமதி ச.சொக்கலிங்கம் (செயலாளர், வலி.தெற்கு பிரதேச சபை)
கௌரவ விருந்தினர்: திரு.சி.சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய உபஅதிபர்)

அதிபர் செல்வராஜாவின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாடிக் கட்டடம்



## உள்ளம் கவர்ந்த அதிபர்

யா/ தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் உயர்திரு. செ. செல்வராசா அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஓர் அதிபரின் வளர்ச்சியும் பாடசாலையின் வளர்ச்சியும் இரண்டறக்கலந்தது என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை எமது அதிபரையே சாரும். உயர்திரு. செல்வராசா அவர்கள் எமது பாடசாலையின் பௌதிக வளத்தை விருத்தி செய்வதில் பெருவெற்றி கண்டவர். அவரது காலத்தில் கட்டடங்கள் அமைக்கப்பட்டது மட்டுமன்றி புதிய விளையாட்டு மைதானத்தை உருவாக்குவதிலும் அதிபரின் முயற்சி பாராட்டுதற்குரியதாகும். எமது பழைய மாணவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த அதிபர் அவர்கள் பாடசாலையின் சிற்பி எனக்கூறினால் அது மிகையாகாது. அவரின் சேவையை பழைய மாணவர்களாகிய நாம் பெருமையுடன் நோக்குவது மட்டுமன்றி மணிவிழாக்காணும் அவர் குடும்பத்துடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழவேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சுகிறோம்.

தலைவர், மணிவிழாச்சபை **க. தேவராஜா,**

## தாவடி இந்துவின் சிற்பிகள் வரிசையில் ...

மேற்படி வித்தியாலயம் அன்று தொட்டு இக்கிராமம் வாழ் சிறார்களுக்குத் தொடக்க இடைநிலைக் கல்வியினை மிகவும் கரிசனையாகவும் காத்திரமாகவும் அளித்து வருகின்றது. இப்பாடசாலையே கொக்குவில் - மானிப்பாய் - சுன்னாகம் - யாழ்ப்பாணம் போன்ற நகர உயர் கல்லூரிகளுக்குப் பாலூட்டும் பாடசாலையாக (Feeding School) இன்றும் இருந்து வருவது கண்கூடு.

அந்த வகையில், பாடசாலை பௌதிக வளத்துக்காக 1990 களில் பாடசாலைக்கென காணி பெற்று, அதில் மூன்று மாடிக்கட்டடம் அமைக்கப் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பெருமுயற்சி எடுத்தது. இதற்காக அரசின் உதவி எதுவுமின்றி, முழுக்கமுழுக்க வெளிநாட்டில் வாழும் தாவடி இந்து பழைய மாணவர்களும் உள்ளூர் நலன்விரும்பிகளும் இணைந்து முன்னெடுக்கப்பெற்ற இம்முயற்சி, நாட்டின் நெருக்கடி காரணமாகவும் அரச மேலதிகாரிகளின் கெடுபிடிகளாலும் அரைகுறை கட்டட வேலைகளுடன் முற்றுப்பெறாது நின்றது.

இந்நிலையில் -

1995 இற்குப் பின்னர் பாடசாலை முதல்வராக கடமையேற்ற அதிபர் செ.செல்வராசாவின் முயற்சியால் அரைகுறையாகவிருந்த கட்டட வேலையில், கீழ்மாடிக்கட்டடம் ஓரளவு நிறைவுபெற்றது. அதிபர் செல்வராசாவின் குறுகிய காலச் சேவைக்காலத்தில் எல்லோரும் பாராட்டும் வண்ணம், பாடசாலையின் பௌதிக வளத்தில் ஒரு சிறிய பகுதியாவது இப்பொழுது நிறைவு பெறுவதைக் காணுகின்றோம்.

4-2/4, சீகல் மாண்ஷன்,
55 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.

**அநு. வை. நாகராஜன்**
தாவடி இந்துவின் முன்னாள் தலைவர் -
கிளிநொச்சி முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்
19.05.2005

## பண்பால் உயர்ந்த அதிபர் வாழி !

அதிபர் செ.செல்வராசா அவர்கள் தமது 25 வருடகால அதிபர் சேவையில் எமது பாடசாலையில் அதிபராக 6- 10 -1997 இல் பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாடசாலை அயற்சமூகம், பழைய மாணவர் சங்கம், அரசசார்பற்ற உதவி நிறுவனங்களின் உதவியுடன் 1990 களில் அத்திபாரம் இடப்பட்ட புதிய இரண்டு மாடிக்கட்டடம் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

நீர்த்தாங்கி, சுற்றுமதில், மலசல கூட வசதிகள், விளையாட்டு மைதானம் போன்ற பௌதிக வளங்கள் இவரது அயராத உழைப்பின் மூலம் பாடசாலைக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாகும்.

மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தவும் நவீன உலகிற்கு மாணவர்கள் முகம் கொடுக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாக நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கணனிக் கல்விக்கான வசதிகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இவரது அர்ப்பணிப்புள்ள சேவையினால் பாடசாலை பல்வேறுபட்ட வளங்களைப்பெற்று புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சா/த பரீட்சை, தமிழ்த்தினப் போட்டி, ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் கோட்ட, வலய மட்டங்களில் தனக்கென ஒருமுத்திரையைப் பதித்துள்ளது. இவையாவற்றிற்கும் மகுடம் பதித்ததுபோல் அமை வது அதிபரின் அரவணைக்கும் முரண்பாடற்ற ஆலோசனை கூறும் சிறந்த முகாமைத்துவமேயாகும்.

யாழ்.தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இவரது 8 வருட அதிபர் சேவைக்காலம் பொற்காலம் என்றே போற்றப்படவேண்டும். இவரது ஓய்வுக்காலத்தில் குடும்பத்தாருடன் நோய்நொடியின்றியும் அமைதியுடனும் மனமகிழ்வுடனும் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்.**

## பாடசாலைக் கல்வி நிலை மேம்பாடு

எமது தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பெருமதிப்பிற்குரிய அதிபர் உயர்திரு செ.செல்வராசா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவரது அதிபர் சேவைக்காலத்தில் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்ததுடன் பாடசாலையின் முகாமைத்துவ தலைவர் என்ற முறையில் பௌதிக வளங்களைப் பெருக்கிக்கொள்வதில் கூடிய அக்கறை கொண்டு பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறக்கூடிய சூழலை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலைப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் அதிபராகவும் இருந்து எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியதுடன் வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்களுடனும் தொடர்புகளை வலுவூட்டி பல உதவிகளைப்பெற்று மாணவர்களது கல்வி மகிழ்ச்சியான சூழலில் இடம்பெறுவதற்கு வழிவகுத்தவர் இவர். அதிபர் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு விநாயகப் பெருமான் அருள் புரிவார் எனப் பிரார்த்தித்து அமைகிறேன்.

செயலாளர்,
பழைய மாணவ சங்கம்.
**திரு. கா. சாந்திநாதன்**

## பாடசாலையில் புதுயுகம் படைத்த அதிபர்

சுமார் 1875 ஆம் ஆண்டளவில் முதலியார் சின்னத்தம்பி, நொத்தாரிஸ் சிவக்கொழுந்து, உலாந்தா தம்பையா ஆகியோரின் முயற்சியால் ஆரம்பித்த பாடசாலை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக $2\frac{1}{2}$ பரப்பு காணியிலேயே இயங்கிவந்தது. பௌதிக வளம் பெருகவில்லை. கிராம மக்களின் பெருமுயற்சியால் வேதவிநாயகர் ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் ஒரு காணி வாங்கப்பட்டு பழைய மாணவர்களின் முயற்சியினால் 3 மாடிக்கட்டடமும் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. சிமெந்து கிடைக்காத காலத்தில் அதைப்பெற்றுத்தர அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் கைகூடவில்லை அக்காலத்தில் அதிபராக இருந்த அநு.வை. நாகராஜன் அவர்களின் பெருமுயற்சி இங்கு நினைவு கூரத்தக்கது.

அதிபர் செல்வராஜா அவர்கள் பொறுப்பேற்றபின் சோர்வுற்றிருந்த பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டி மீண்டும் உற்சாகமாகச் செயற்பட வைத்தமைதான் அதிபர் செல்வராஜாவின் தனித்திறமை.

நூற்றாண்டுக்காலமாக $2\frac{1}{2}$ பரப்புக் காணியில் அடைபட்டுக் கிடந்த பாடசாலையை ஆலயத்தின் அருகில் மிக விசாலமான ஓர் இடத்தில் இயங்கவைத்தவர்கள் அநு.வை. நாகராஜனும் திரு செல்வராஜா அவர்களுமே. இன்று பாடசாலை மிக அழகான முகப்புத்தோற்றத்துடனும் ஆலய தெற்குவாசல் கோபுரம், கல்யாண மண்டபம், அன்னதான மண்டபம், வாசிகசாலை ஆகிய பொது மண்டபங்களின் நடுவே அமைய வழிவகுத்து முழுமூச்சுடன் செயற்பட்டவர் திரு.செ.செல்வராஜா அவர்களே. விளையாட்டு மைதானம், கணனி, தண்ணீர்த்தொட்டி, சுற்றுமதில் போன்ற பல வேலைகளைக் ஓர் குறுகியகாலத்தில் நிறைவேற்றி சாதனை படைத்த ஒரு அதிபர். தாவடி மக்கள் உங்கள் சேவைகளை என்றும் நினைவு கூருவர். வாழ்க வளமுடன்

செயலாளர், மணிவிழாக்குழு.
**S. R. சரவணபவன்**

சண்முகநாதன் ஸ்ரோஸ்
பாடசாலை முன்பாக தாவடி.

ஐங்கரன் பான்சி பலஸ்
தாவடி.

சீக்கோ
தாவடிச் சந்தி.

வினோ நகைப் பூங்கா
யாழ்ப்பாணம்.

துர்க்கா பந்தல் சேவை
தாவடி.

கஜன் மோட்டோஸ்
யாழ்ப்பாணம்.

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.

கஜராம் பந்தல் சேவை
தாவடி வடக்கு.

# வன்னிப் பிரதேச தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்துக்குத் தடையான நிபந்தனைகள்

## தன்னலமற்ற அரிய சேவைக்கு மதிப்பளிக்க அரசு முன்வருமா?

கடந்த காலங்களில் தமிழ் தாயகப் பகுதியில் மிகவும் கூடுதலான அளவில் யுத்தம் நடந்தது வன்னியில்தான்.

யுத்தத்தினால் வன்னி மக்கள் பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்தக் கொடிய போரில் அங்கு பல்வேறு கட்டுமானங்களும் சீரழிந்தன. சின்னாபின்னமாயின. அவ்வாறு சிதைந்த துறைகளில் - கட்டுமானங்களில் ஒன்று கல்வி.

யுத்தத்தினால் வன்னியில் கல்வி சீரழிந்தது என்பதைவிட சீரழிக்கப்பட்டது என்பதே பொருத்தமானதாகும். சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடைக்கும் - திட்டமிட்ட ஒடுக்குமுறைகளுக்கும் புறக்கணிப்புகளுக்கும் உள்ளாகிய வன்னி எதிர்நோக்கிய அவலங்கள் சொல்லி மாளாதவை.

இந்த அவலங்களில் மத்தியில் இதுவரை காலமும் கல்வித்துறையும் அங்கு மிகவும் பின்தங்கியே இருந்தது; இருந்து வருகிறது.

அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை போர்க்காலத்தில் மட்டுமல்ல அதற்கு முன்னரும் இருந்தது. ஏன் இப்போதும்கூடத் தொடர்கிறது. இது தான் உண்மை.

வன்னிப் பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. ஆசிரியர் பற்றாக்குறை 30 வருடங்களுக்கு மேலாக நிலவுகின்றது.

இவற்றைவிட, பாடசாலைகளில் கட்டடங்கள், தளபாடங்கள் பற்றாக்குறை, போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் என ஏராளம் நெருக்கடிகள். அதுமட்டுமா...? பல பாடசாலைகளில் இன்றும்கூட நூலக வசதி, விஞ்ஞான ஆய்வுகூட வசதி என்பன கிடையாது.

இவற்றிலே மிகவும் முதன்மையான - அவசியமான பிரச்சினையாக இருந்தது ஆசிரியர் பற்றாக்குறைதான்.

கணிதம், விஞ்ஞானம் உட்பட பெரும்பாலான பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. ஆங்கிலம் மற்றும் நுண்கலைப் பாடங்கள் சிலவற்றுக்கு ஆசிரியர்கள் இல்லை என்றே கூறலாம்.

ஓரிரு ஆசிரியர்களை மட்டுமே கொண்டு வருடக்கணக்கில் இழுபட்டு வந்த பாடசாலைகளும் இருக்கின்றன.

கட்டடங்கள் இல்லாதபோது மாணவர்களுக்கு மரநிழல்கள் தஞ்சமளித்தன. தளபாடங்கள் இல்லாதபோது அவர்கள் தரையிலேயே இருந்து கல்வியைத் தொடர்ந்தனர். ஆனால், ஆசிரியர்களே இல்லாதபோது மாணவர்கள் என்னதான் செய்யமுடியும்..?

இந்த நிலையில்தான் சமூகத்தின் தேவையுணர்ந்து - தியாக மனப்பான்மையுடன் சேவையாற்றுவதற்குப் படித்த இளைஞர்களும் யுவதிகளும் முன்வந்தனர். தொண்டர் ஆசிரியர் என்ற பெயருடன், ஊதியம் எதுவும் இல்லாமல் வருடக்கணக்கில் அவர்கள் ஆசிரியப் பணி செய்துவந்தார்கள்.

அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக தமக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மனம் தளராது சமூகப் பொறுப்புணர்வுடன் சேவையாற்றி வன்னியின் கல்வி நிலையை ஓரளவுக்காவது சரியவிடாது தாங்கி நின்றவர்கள் இந்தத் தொண்டர் ஆசிரியர்கள்தான் என்று கூறலாம்.

சிறுவயதில் - மாணவர்களாக இருந்தபோது ஆசிரியர் பற்றாக்குறையினால் தாங்கள் எதிர்நோக்கிய பாதிப்புக்களை - மன உளைச்சல்களைக் கருத்திற்கொண்டு அத்தகைய இன்னல்களை தமது அடுத்த சந்ததியும் சந்திக்கக்கூடாது என்ற முற்போக்குச் சிந்தனையுடன் சேவையாற்ற - தொண்டுசெய்ய முன்வந்தவர்கள்தான் தொண்டர் ஆசிரியர்கள்.

வெறுமனே சாதாரணதரம் வரையான கல்வியைக் கற்றுவிட்டு அவர்கள் கற்பித்தலுக்கு வரவில்லை. தமக்கு இருந்த பெரும் சவால்களுக்கு மத்தியில் எதிர்நீச்சல் போட்டு ஜி.சீ.ஈ. உயர்தரம் வரையில் முன்னேறி அதிலும் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்து - பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெறக்கூடிய 180 புள்ளிகளைப் பெற்றுத்தான் அவர்கள் ஆசிரியர்களாகினர். இத்தகைய தகுதிப்பாடுகள் இருந்தவர்கள்தான் தொண்டர் ஆசிரியர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இத்தகைய தன்னலம் கருதாது சேவையாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்குத் தமிழ்க் கல்விச் சமூகம் மட்டுமல்ல, சிறிலங்கா அரசுமே நன்றிக்கடன்பட்டிருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

ஆனால், அந்த நன்றியை அரசும் கல்வி சார்ந்த அதிகாரிகளும் மறந்துவிட்டார்கள் - தூக்கி எறிந்து உதாசீனப்படுத்திவிட்டார்கள் என்பதே யதார்த்தம். பல வருட காலம் சேவையாற்றிய வன்னிப் பிரதேச தொண்டர் ஆசிரியர்கள் ஏராளம் பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அதற்கென அரசினால் புதியபுதிய நிபந்தனைகள், தகைமைகள் கோரப்படுகின்றன.

இந்தப் புதிய நிபந்தனைகளுக்குள் அகப்படாத - ஆனால் நீண்டகாலம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பல தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நியமனத்தை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

தொண்டர் ஆசிரியர்களிடம் அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கென்று இப்போது கேட்கப்படும் தகைமைகள் முன்னர் அவர்கள் தமது சேவையைத் தொடங்கியபோது கேட்கப்படவில்லை.

எனவே, பொருளாதாரத் தடைகளுக்கு முகம் கொடுத்து - போக்குவரத்துத் தடங்கல்களுக்கு மத்தியில் அல்லும் பகலும் அயராது சேவையாற்றிய வன்னிப் பிரதேச தொண்டர் ஆசிரியர்கள் விடயத்தில் மனிதாபிமானம் காட்டப்பட வேண்டும். அவர்களுக்கு நிபந்தனைகள் ஏதுமற்ற நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**மு.சுமுகலிங்கம்**

இந்த விடயத்தில் கல்வி அமைச்சு போன்ற உயர் தரப்புகளுக்கு அழுத்தம் கொடுத்தது. தொண்டர் ஆசிரியர்களுக்காக உரத்துக்குரல் கொடுத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கச் செய்வதற்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் முன்வர வேண்டும். ★

# திருமலை புத்தர்சிலை நெருக்கடியால் பொதுக்கட்டமைப்பும் தாமதமாகும்

## அரச உயர்வட்டாரங்கள் கூறுகின்றன

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கைச்சாத்திடும் அரசின் செயற்பாடுகளுக்கு திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக அரசின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்தன.

இவ்வாறான சூழ்நிலையில் திருகோணமலை விவகாரத்திற்கு தீர்வு காண்பதற்கு அரசு முன்னுரிமையளித்திருப்பதாகவும், உத்தேச பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இறுதி முடிவொன்றைக் காண்பதற்கு முன்னர் திருமலை விடயத்தில் உறுதியான நடவடிக்கையொன்றை அரசு மேற்கொள்ளுமென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு யோசனைகளுக்கு தென்னிலங்கையில் சிங்கள அடிப்படைவாதக் கட்சிகளால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் திருகோணமலையில் எழுந்துள்ள புத்தர்சிலை விவகாரம் ஜனாதிபதிக்கு பெரும் தர்மசங்கடத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் எதிர்ப்புகளை எதிர்நோக்கிய ஜனாதிபதி சந்திரிகாவிற்கு திருமலை விவகாரத்திலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திடுவது நடைமுறைச்சாத்தியமற்றதென ஜனாதிபதிக்கு நெருக்கமான அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.



அரச சேவையில் 41 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய வலி.மேற்குப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் மு.சிவராசாவுக்கு வலி.மேற்குப் பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பிரதேச செயலா சீ.ஏ.மோகன்றாஸ் மாலை அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

*(வலி.மேற்குச் செய்தியாளர்)*



2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் 4 ஆம் பிரிவு கட்டுரை வரைதலும் கவிதையாக்கத்திலும் தேசியமட்டத்தில் 3 ஆம் இடம்பெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி செல்வி வா.தர்மிஷாவிற்கு இந்து கலாசார அமைச்சின் செயலாளர் மகானந்தன் தங்கப் பதக்கம் அணிவித்து பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம். கல்விப் பணிப்பாளர் என். நடராசாவும் படத்தில் உள்ளார்.

# மானிப்பாய் வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கத் திட்டம்

நவாலி,மே29

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை விரைவில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் நிறுவப்படவுள்ளது.

கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தனியார் கட்டடமொன்றில் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

இந்த வைத்தியசாலையைச் சொந்தக் கட்டடத்தில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டது. இதற்காக அப்பகுதியைச் சேர்ந்த மக்களிடம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் பணம் சேகரித்தனர். அப்பணத்தைக் கொண்டு 18 பரப்புக் காணியை ஆனைக்கோட்டையில் கொள்வனவு செய்து சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தற்போது கட்டடத்திற்கான நிதியைப் பெறுவதற்கு யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-100)

# ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா நற்கருணைப் பேரணியில் இன்று இணைவோம்

இன்று மே மாதம் 29ஆம் திகதி ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா தின மாகும். இன்றைய சிறப்பு நிகழ்வாக இன்று மாலை 4 மணிக்கு யாழ்.மறைக்கோட்ட பங்குகள் அனைத்தும் இணைந்த மாபெரும் நற்கருணைப் பேரணி ஒன்று நிகழ்த்தப்படவுள்ளது. இறைமக்கள் அனைவரும் இப்பேரணியில் இணைந்து நற்கருணை நாதரின் அருள்பெற்றுச் செல்லுமாறு விசேடவிமமாக அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாண்டு நற்கருணை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், இவ்வாண்டில் நற்கருணை சிறப்பு வழிபாடுகளையும், ஆசீர்களையும், பேரணிகளையும் நிகழ்த்தும்படி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்திருந்தார். அவ்வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.மறைமாவட்டத்தின் பல பங்குகளுக்குட்பட்டவும், பங்குகளுக்கிடையிலானவும் நற்கருணைப் பவனிகள் நடத்தப்பட்டன. இவை அனைத்திற்கும் சிகரம் வைப்பதுபோல் யாழ்.மறைக்கோட்ட பங்குகள் இணைந்து இன்றைய இந்த மாபெரும் நற்கருணைப் பேரணியை நடத்தவுள்ளன.

## ஞாயிறு நற்பிரசாதம்

இந்தப் பேரணியானது கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயம் - பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் - பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயம் - சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயம் - யாழ்.அடைக்கல அன்னை ஆலயம் - குருநகர் புனித யாகப்பர் ஆலயம் - யாழ்.மரியன்னை பேராலயம் ஆகிய பங்குகளை இணைத்ததாக நடத்தப்படுகின்றது. இது போன்ற நிகழ்வு ஒன்று கிட்டத்தட்ட கடந்த 25 ஆண்டுகளில் நடைபெறவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். போரினாலும், அதன் திடீர் இடம்பெயர்வுகளாலும் பயத்திலும் பதற்றத்திலும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கத்திலும் இருந்தமையால் இது போன்ற நிகழ்வுகளை இதற்கு முன்னதாக திட்டமிடவோ, நிகழ்த்தவோ முடியவில்லை.

நற்கருணைப் பேரணியானது பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகி கொய்யத்தோட்ட வீதி - புங்கன்குள வீதி - கொழும்புத்துறை வீதி - பழைய பூங்கா வீதி - கண்டி வீதி - ஆஸ்பத்திரி வீதி - 3ஆம் குறுக்குத்தெரு - 4ஆம் குறுக்குத்தெரு - பிரதான வீதி - 6ஆம் குறுக்குத் தெரு - கடற்கரை வீதி - பத்திரிசியார் வீதி வழியாக யாழ்.பேராலயத்தை வந்தடையும். இறைமக்கள் அனைவரும் இந்த மாபெரும் பேரணியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

புங்கன்குளம் சந்தியில் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மக்களும், கச்சேரி சந்தியில் ஆசீர்வாதப்பர் ஆலய மக்கள், யாழ்.ஓ.எல்.ஆர் மரியன்னை சுருப சந்தியில் நாவாந்துறை மற்றும் பங்குமக்களும் இணைந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பவனி செல்கின்ற வழியிலுள்ள எல்லா ஆலயங்களிலும் சிறு தியானமும் நற்கருணை ஆசீரும் இடம்பெறும். மரியன்னை பேராலய வளாகத்தில் இறுதி ஆராதனை நிகழ்த்தப்படவுள்ளது.

நற்கருணை ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வாண்டில் ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா தினத்தில் ஆண்டவரை பவனியாக எடுத்து எமது விசுவாசத்தை அறிக்கையிடும் இந்நிகழ்வில் அனைவரும் கலந்து நாட்டிலே அமைதியும், சமாதானமும், பாதுகாப்பும், வாழக்கூடிய சூழலும் கிடைக்க வேண்டும் என இறைவரம் வேண்டுவோம். போர் மூளுமோ, பேச்சு குழம்பிப்போகுமோ என்ற பயஉணர்வுகள் தோன்றியுள்ள வேளையில் இறைவனே எமக்கு துணையாகி பாதுகாத்திட வரம்வேண்டுவோம்.

**- அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

# கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவன்

**அமரர் கந்தமூர்த்தி அகிலராஜ்**

அவர்களின் திடீர் மறைவு குறித்து அதிர்ச்சி அடைந்த நாம் ஆறாத்துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(45918) (42-14)

ஆசிரியர், மாணவர்கள்,
விஞ்ஞானக் கல்லூரி.

# ஏழாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

| வையகம் | வானகம் |
|---|---|
| 25 | 17 |
| 12 | 05 |
| 1927 | 1998 |



## அமரர் நடராஜ ஐயர் கந்தசாமி ஐயர்

**திதி: 29.05.2005**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
வானுறையும் தெய்வமே வணங்குகிறோம்!
விண்ணகத்தில் விருந்தினனாய்
வந்துவிட்ட நும் மகனைக் கண்டீரோ?

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(46008)(38-48-14)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ‘பாண்ட்’ வாத்திய போட்டியில் மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம்,மே29

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மாணவர் அமைப்பு யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்திய பாண்ட் வாத்தியப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இதற்கான போட்டியும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றன.

இந்த நிகழ்வு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.கிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், தமிழீழக் கல்விக்கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் மற்றும யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் க.இராசதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

(8-13)

# வீடுகள் கையளிப்பு

தென்மராட்சி,மே28

நிக்கொட் நிறுவன நிதி உதவியுடன் யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மந்துவில் மேற்கில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பயனாளிகளுக்குக் கையளிக்கப்படவுள்ளன.

மந்துவில் மேற்கு சூரியகுமாரன் சனசமூக நிலையத்தில் காலை 9மணிக்கு நடைபெறும் இதற்கான நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஸ் கலந்து கொள்வார்.

நிக்கொட் நிறுவனத்தினால் இப்பிரதேசத்தில் 125 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 29 |
| 08 | 05 |
| 1938 | 1997 |



## அமரர் துரைச்சாமி சச்சிதானந்தன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

27/1,புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

– குடும்பத்தினர்.

(45868)(46-42-14)

# எமது அன்பு மகளின் 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07-04-1969

மறைவு 29-05-1995

## செல்வி விஜிதா சவுந்தரராசா

இருபத்து ஆறு வருடங்கள் எம்முடன்
இருந்து
எம் எல்லோருக்கும் உம்மீது அன்பு
பாசத்தை வளர்த்து
துன்பங்கள் அனைத்தையும் துரும்பாய்
மதித்து
அடையவேண்டியவற்றையெல்லாம்
அடைந்து எம்மைப்
பெருமைப்படுத்தி விட்டு எம்மை விட்டுப்
பறந்து போய்
ஆண்டுகள் பத்தாகியும் உம்நினைவு
பிரிவு இன்னமும்
மாறாத் துயரில் எம்மை ஆழ்த்தியுள்ளது
அம்மா!
விஜி ! நீ போனபின் கண்ணாடியில் உம்
திருமுகத்தை விட்டுச் சென்றாயே! உன்
நினைவு ஒருபோதும்
எம்மை விட்டு அகலாது! அம்மா!
பண்புமிக்க பிள்ளை நீ அம்மா அம்மா
பாசம் நிறைந்த அக்கா நீ அம்மா
அம்மா - என்றும்
விஜித்தா என்றால் வருவாய் நீ
அம்மா அம்மா
வேதனையில் ஆழ்த்திச் சென்றது
மேனோ அம்மா அம்மா - எம்மை
சாய் நிலைய குருவாய் நின்றாய்
அம்மா அம்மா
சாய் வளர்த்த மல்லிகைப் பூவே
அம்மா அம்மா - நாங்கள்
வாவா என்று வருந்தி அழைத்தோம்
அம்மா அம்மா
பாபா என்று சொல்லிச் சென்றாய்
அம்மா அம்மா - சாயி!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

கா.சவுந்தரராசா
9, அரசடி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(45886)(50-18-16)

தாய், தந்தை, சகோதர
சகோதரிகள், மாமா, மாமி.

---

COMITE INTERNATIONAL GENEVE

## International Committee of the Red Cross (ICRC)

## VACANCY -
## POST OF ECOSEC FIELD OFFICER

The International Committee of the Red Cross (ICRC) would like to fill the above position in the Ecosec unit in Jaffna.

**Job description:**

1. Support to the Ecosec Delegate, Jaffna
- Collection of information pertinent to the project
- Project planning and support with the delegate responsible
- Project monitoring, reporting (statistics and progress), and follow-up
- Regular contact with interlocutors
- Translation of Tamil documents into English and vice versa.
- General office duties for the project

**2.field Work**
- Interpretation and other support to the project management delegate
- Project facilitation
- Vehicle management and driving

**Qualifications:**
- Bachelor of Bio-Science or agriculture
- Working experience
  - In economic security through Income Generating Activities
  - In community development approach (participatory approach)
  - With Community Based Organization
- Familiarity with Red Cross movement an asset
- Fluency in English (spoken and written). Sinhala an asset.
- Familiarity with MS Office
- Excellent driving skills with a valid Sri Lankan driving license.

**Needed qualities:**

We are looking for an enthusiastic person with a strong commitment to humanitarian work. She or he must demonstrate a capability to work independently and show initiative. Strong organisational and planning skills, flexibility, and a good team spirit are considered key assets for the candidate. Preferably the candidate has a good knowledge of Jaffna district. The age limit is 55 years. The above position would be initially for a period of one year.

Candidates fulfilling the above mentioned requirements are invited to forward applications with CV, copies of exam results, references and contact details by 05 June 2005 to

**Head of Sub-Delegation**
**ICRC Jaffna Delegation**
120, Temple Rd.
Jaffna

(45907)

---

**GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRILANKA**
MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICINE
NORTH - EAST PROVINCE
DEPUTY PROVINCIAL DIRECTORATE HEALTH SERVICES
JAFFNA

**REHABILITATION OF WATER SUPPLY SCHEME AT DISTRICT HOSPITAL TELLIPALLAI**

CONTRACT NO: GC/Tellipalai/WSS/2005/01

## BID NOTICE

1.The Chairman, Jaffna district Tender Board, on behalf Deputy Provincial Director of Health Services(DPDHS) will receive sealed tenders for Rehabilitation Of Existing Intake Well, Pump House, 25,000 Gallons Capacity Water Tower, Supply & Laying Of Pumping Main & Distribution Lines and Supply and Installation Of M&E Equipment For Water Supply Scheme At District Hospital Tellipalai 15.00 hours on 20.06.2005. Tender documents may be collected from the DPDHS office of Jaffna between 9.30 hours to 12.30 hours and from 13.30 hours to 15.30 hours on normal working days up to 17.06.2005

2.Tender documents will be issued only to tenderers who are registered with ICTAD in the field of water supply & drainage. in Grade M6 and above and members of the National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL).

Tender documents are obtainable at the office of DPDHS, Jaffna between 09:30 hours to 12:30 hours and from 13:30 hours to 15:30 hours on normal working days up to 17.06.2005. upon payment of a non-refundable fee of Rs. 2,000./=

Bidbond amount Rs 140,000.00 should be submitted along with Tender

3.Tender documents may be inspected free of charge at the office of the DPDHS, Jaffna

4.Tenderers are advised to ensure that they possess required financial and technical capabilities and that documentary evidence are submitted along with the tenders, as stipulated in the tender documents under 'Instructions to Tenderers.'

5.Tenders will be opened immediately after the closing at the office of Kachcheri Jaffna Tenderers or their authorised representatives may be present at the opening of tenders.

6.Sealed tenders may be either dispatched by registered post or hand delivered to the / at the office of Kachcheri Jaffna to receive on or before the closing time.

7.For further details tenderers may contact the DPDHS, Jaffna over the telephone number 021-2223725 or facsimile number 021-2222278.

**K. Ganesh**
**Chairman, District Tender Board**
**Government Agent / District Secretary, Jaffna District.**

(C/45079)

# தேவை

உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு கீழ்க் கண்ட பணியாளர்கள் தேவை. வெளி மாவட் டங்களைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை வழங் கப்படும்.

1. அலுவலக உதவியாளர்கள்
2. பத்திரிகை மடிப்பவர்கள்
3. பத்திரிகை விநியோகிப்பவர்கள்

தெரிவு செய்யப்படுவோருக்கு சம்பளத்துடன் உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும். தகை மைச் சான்றிதழ்கள், கிராம அலுவலரின் நற்சாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்,
**உதயன் மனிதவள சேவைகள்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி-43101)(38-15-18)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | திதி | உதிர்வு |
|---|---|---|
| 04.04.1922 | 27.05.2005 | 08.06.2004 |

**செல்லத்துரை சிவக்கொழுந்து**
[நயினாதீவு]

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லையே எம்மனம்
இன்று உங்கள் நினைவோடு ஓராண்டு நிறைந்தாலும்
மாண்டு நீர் போனதால் மனங்கவலைப்படுகின்றோம்.

சிவன்கோவிலடி,
தோணிக்கல்,
வவுனியா.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி-43102)

## ஆறாவது பிறந்தநாள் வாழ்த்து



லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட
திரு.திருமதி வேணுகோபாலன் மைதிலி
தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**விஷாலி**

தனது ஆறாவது பிறந்தநாளை
29-05-2005
மீசாலையில் இருக்கும் அப்பப்பா,
அப்பம்மாவுடன் கொண்டாடுகின்றார்.
இவரை அம்மா, அப்பா, தங்கைமார் வைஸ்ணவி,
திவ்வியா, அம்மப்பா, அம்மம்மா, கொலண்டில் இருந்து
வந்துநிற்கும் கார்த்திகா, மானசி, மாசிலன்
மற்றும் உற்றார், உறவினர்கள்
அனைவரும் பல்கலையும் கற்றும்
பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

அப்பப்பா
(லயன்.சி.சற்குணநாதன்).

(45934) (24)

## திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C:42899)

## தேவை

எம்.இராஜநாயகம் அன் கோ பட்டயக் கணக் காளர்கள் நிறுவனத்திற்கு கணக்காய்வுப் பயிலு நர்கள் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும் (T.Pஇலக்கத துடன்) அல்லது செவ்வாய் மாலை நேரில் வரவும்.

(45966)(38-15-18) **140, பலாலி வீதி,**
**திருநெல்வேலி. T.P.No:222 2478**

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல வாத்தக நிறுவனத்திற்கு எழுதுவினைஞர் தேவை இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் ஆங் கில அறிவு உடையவர் விரும்பத்தக்கது.

**விள.இல. 2602 மே/பா உதயன்**
**யாழ்ப்பாணம்.** (45878)(38-15-18)

## வீடுவளவு விற்பனைக்கு

கொக்குவில் ஸ்ரேசனுக்கு எதிர்ப்புறம் உள்ள ஒழுங்கையில் நாலு பரப்புடன் கூடிய வீடு வளவு சகல வசதிகளும் கொண்டது விற்ப னைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
(45950)
(38-15-18) இல.356, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 5648

**லஷ்சுமி** இணுவில்

விஜய், நதிஷா, ரவிகிருஸ்ணா, சீதா மற்றும் பலர் நடித்த
**சுக்ரன்** (ரீகல்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவ்தீப், தேசா ஜெயராம்,
ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்** (ரீகல்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா,
வடிவேல், நாசர்
நடித்த
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)
**சந்திரமுகி** (ரீகல்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா,
ரகுமான், சரண்யா மற்றும் பலர் நடித்த
**ராம்**
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30.p.m., 6.30 p.m., 9.30 p.m.

**ராஜா** யாழ்ப்பாணம்.

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி,
சுஜாதா, நிழல்கள்ரவி,
**சூர்யா** (ரீகல்)
ஆக்ஷன் படம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)



**VESTA**
நெல்லி NELLI நெல்லி



இலங்கையின் முதல்தர நெல்லி கோடியல் எனத் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதி விருதுபெற்ற வெஸ்ரா இன்டஸ்ரிஸ் ஸ்தாபனத்தார் **சக்தி FM சக்தி TV** ஆகியோர் நடத்தும் மாபெரும் இசை நிகழ்ச்சியில் அனுசரணையாளராக ஆவதையிட்டு மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இசை ரசிகர்கள் அனைவரையும் இம்மாபெரும் இசை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: துரையப்பா விளையாட்டு அரங்கு
காலம்: இன்று (29.05.2005)
ஞாயிற்றுக்கிழமை
மாலை 6 மணிக்கு

**VESTA INDUSTRIES**
**VESTA** Kulappitty Road,
Anaicoddai, Jaffna.

(45969)(33-38-15-18) T.P.:021-4591372

# மரண அறிவித்தல்கள்

## கந்தன் வைரமுத்து



நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் வைரமுத்து அவர்கள் 27-05-2005 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் நவரத்தினசுந்தரியின் அன்புக் கண வரும் பிரபாகர், ஞானசேகர் (சுவிஸ்), பாஸ்கர் (கனடா), சுதாகர் (சமுர்த்தி உத்தியோகத்தர், வேலணை), சிவலோஜினி, ஜெயகரன், சத்திய வான், நவநீதன் ஆகியோரின் அன்புத் தந்தை யும் காலஞ்சென்றவர்களான கந்தன் - வள்ளியம்மை தம்பதியின ரின் மகனும் காலஞ்சென்றவாகளான நாகமணி - நாகமுத்து தம் பதியினரின் மருமகனும் சூரியபிரகாசநிதி, தர்ஷினி, நவஜோதி, கோகுலவதனி, சுஜீவன் ஆகியோரின் மாமனாரும் பிரதீபா, மயூசிகா, கம்சிகா, தினேஸ்காந், விஜஸ்காந், காலஞ்சென்ற சுஜீபன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், சிவக்கொழுந்து, ஐயாத்துரை, நாகம்மா, நவரத்தினம் மற்றும தங்கம்மா, அன்னலெட் சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமலிங்கம், கனகரெத்தினம், ஸ்ரீதரன், உதயக்குமார், அருணன் ஆகியோரின் மைத்துனரும்ஆவார்.

அனனாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*முதலாம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (45954)(26-38-15-18)
தகவல்:
குடும்பத்தினர்.

## மயிலு வல்லிபுரம்



சிவன் புது வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட மயிலு வல்லிபுரம் அவர் கள் நேற்று (28.05.2005) சனிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் சந்திரன் (மருத்துவபீடம் யாழ. பல்கலைக்கழகம்), சுபத்திராதேவி (பிரானஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினி தேவி, இரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்வினி, சவுந்தினி, சர்வகுமார், காலஞ்சென்ற ரவீந்திரன், செல்வானந்தராஜா (சுவிஸ்), கெளரி (பிரான்ஸ்), லக்கி (பிரான்ஸ்), கெளசலா (பிரான்ஸ்),சுபாஜினி, செந்தூரன், ரவீந்திரா, லோகநாதன் (பிரான்ஸ்), சிறிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.55, சிவன் புது வீதி,
நல்லூர். (45967)(38-15-18)
தகவல்:
வ.சந்திரன்
(மகன்).

## திருமதி சிவசம்பு பாக்கியம்

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கோவளத்தை வதிவிடமாகவும் தற்போது அப்புத்தளையில் வசித்து வந்தவரு மாகிய திருமதி சிவசம்பு பாக்கியம் 27.05.2005 வெள்ளிக்கிழமை அப்புத்தளையில் காலமானார்.

அன்னார் சிவசம்புவின் அருமை மனைவியும் ஞானகுருபரன் (ரவி ஸ்ரோர்ஸ் - அப்புத்தளை), சிவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேந்திரம், கெளரி ஆகியோரின் மாமியாரும் தர்சினி, திருமாறன், நகுலன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அப்புத்தளை இல்லத்தில் இன்று (29.05.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பதுளை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(45968)(38-15-18)
தகவல்:
ஞானகுருபரன் (மகன்).

## மயில்வாகனம் சடாச்சரலிங்கம்

சாவகச்சேரி, கென்ஸ்மன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பெரியகடை மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சடாச்சரலிங்கம் அவர்கள் நேற்று (28.05.2005) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கென்ஸ்மன் ஒழுங்கை,*
*சாவகச்சேரி.* (சி-43103)(38-15-18)
தகவல்:
ந.முத்துலிங்கம் (மைத்துனர் - மின்சாரசபை - சாவகச்சேரி).

## திருமதி சிவக்கொழுந்து சண்முகநாதன்



மானிப்பாய் வடக்கு, வடலித்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து சண்முகநாதன் 27.05.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-தங் கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்ற செல்லையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் செல்லையா சண்முகநாதனின் (முன்னாள் தபால் ஊழியர் - மானிப்பாய்) அன்பு மனைவியும் தனலட்சுமி (ஸ்ரீ லட்சுமி திருமண சேவை, வெள்ளவத்தை), காலஞ்சென்ற தயானந்தன், ஜெயலட்சுமி (கொழும்பு), நித்தியானந்தன் (T.R.R.O), செல்வரதி (மானிப்பாய்), மகாலட்சுமி (மானிப்பாய்), சிவானந்தன் (லக்சுமி பிறின் டேஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிர்மலதேவன் (கொழும்பு), பாலரஜனி (மானிப்பாய்), விமலநாதன் (CO.OP.Mani pay) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற நடராஜா, திருமதி சின்னத்துரை மகேஸ்வரி, குமார், காலஞ்சென்ற திருமதி கந்தையா அன்னலட்சுமி, தனபாலசிங்கம், பரமேஸ்வரி, கமலேஸ் வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிஷா, ஐங்கஜி, ஜசோ, தர்சினி, கஜாந்தினி, திவ்வியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2005) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.*
T.P.:0773223211 (45960)(38-15-18)
தகவல்:
செ.சண்முகநாதன் (கணவர்),
குடும்பத்தினர்.

# சுவிற்ஸர்லாந்து - இந்தியா இடையே அணுசக்தி வளர்ச்சி ஒப்பந்தம் கைச்சாத்து

ஜெனீவா,மே29

சுவிறஸர்லாந்து - இந்தியா இடையே அணு சக்தி வளர்ச்சி ஒப்பந்தம், ஜனாதிபதி அப் துல்கலாம் முன்னிலையில் கையெழுத்தானது.

ஐரோப்பிய நாடுகளில் ஜனாதிபதி அப் துல்கலாம் சுற்றுப்பயணம் செய்துவருகிறார். கடந்த 26ஆம் திகதி அவர் 4நாள் பயண மாக சுவிற்ஸர்லந்து நாட்டுக்குச் சென்றார். தலைநகர் ஜெனீவாவில், அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் ஜெனீவாவில் உள்ள ஐரோப்பிய அணு ஆய்வு மையத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

அணுசக்தியை ஆக்கபூர்வ திட்டங்களுக் குப் பயன்படுத்தவும், இரு நாடுகள் இடையே வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும் வகைசெய்யும் ஒப்பந்தம் அப்துல் கலாம் முன்னிலையில் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய அணுசக்தி ஆணையகத்தின் தலைவர் அனில் கடோட்கர், ஐரோப்பிய அணுசக்தி மைய இயக்குநர் ஜெனரல் ராபர்ட் அய்மார் ஆகியோர் கையெழுத் திட்டனர். இந்த ஒப்பந்தம் மூலம், விஞ்ஞானி களுக்கு கூடுதல் பயிற்சி, தொழில்நுட்ப பரி மாற்றம் ஆகியவை இந்தியாவுக்குச் சாதகமாகக் கிடைக்கின்றது. இருநாட்டு விஞ்ஞானிகளும் கூட்டாக ஆய்வு நடத்தவும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. (8)

## விஞ்ஞான அலகின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே29

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ் ஞான அலகின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அலகின் விரிவுரை மண்டபத்தில் இடம்பெற வுள்ளது என விளையாட்டு விஞ்ஞான மாண வர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

3ஆம் வருட கற்கைநெறியை எதிர்பார்த் திருக்கும் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (3)

## சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே29

இலங்கைச் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட் சைக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் களும் மேற்படி நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப் பிக்கலாம் என சட்டமாணவர் இந்து மகாசபை தெரிவித்துள்ளது. (3)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் கலந்தாலோசனைகளில் ஈடு பட்டிருக்கின்றனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவ சக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், கனகரத் தினம் ஆகியோர் நேற்று கிளிநொச்சியில் அர சியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வ னைச் சந்தித்து இதுதொடர்பாக கலந்தாலோசித் தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை தமிழ்ச்செல்வனைச் சந்திக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் நாளை திங்கட்கிழமையும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையையும் தமிழ்ச் செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாட ஏற் பாடாகியுள்ளது.

ஒருங்கிணைந்த வகையில் எதிர்ப்பு நட வடிக்கைகளை எவ்விதம் முன்னெடுப்பது என்பது பற்றி இந்தச் சந்திப்புகளில் ஆலோசிக் கப்படும். அத்துடன், திருகோணமலையில் - சர்ச்சைக்குரிய - புத்தர்சிலை விவகாரத்தால் எழுந்திருக்கும் நெருக்கடி நிலை பற்றியும் இந்தச் சந்திப்புகளின்போது கூட்டமைப்பு எம். பிக்கள் தமிழ்ச்செல்வனோடு கலந்துரையாடு வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

### மட்டு. நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும் -

கழுத்திலும் மார்பிலும் 3 இடங்களில் குண்டுகள் பாய்ந்திருந்ததாகவும் -

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை களை மேற்கொண்டுவரும் மட்டக்களப்பு பொலீஸார் கூறினர். (3-12)

## பெண்களின் காலணியில் இராமரின் உருவப்படம்

பிரான்ஸ் காலணி தயாரிக்கும் நிறுவனம் பெண்களின் காலணியில் இராமரின் உருவப் படத்தை வரைந்து வெளியிட்டுள்ளதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

பிரான்ஸ் நாட்டில் பிரபல காலணி தயா ரிக்கும் நிறுவனமான மினெல்லி சமீபத்தில் பெண்களுக்கான நவீனரக காலணியைத் தயாரித்து அறிமுகப்படுத்தியது. அந்தக் காலணி யில் இந்துக்களை அவமதிக்கும் வகையில், இந்துக் கடவுளான இராமரின் உருவப்படம் வரையப்பட்டுள்ளது.

இதற்கு பிரான்ஸ் நாட்டில் உள்ள இந்து மனித உரிமைக்குழு கடும் எதிர்ப்புத் தெரி வித்துள்ளது. இந்தக்குழுவினர், தனியாக இணை யத் தளம் ஒன்றை நடத்துகிறார்கள். அந்த இணையத்தளத்தில் இதுபற்றிய தகவல் வெளி யிடப்பட்டுள்ளது. (8)

### 100மீ. கரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழிப்பேரலையின் தாக்கத்தைத் தாக்குப்பிடிக் கக்கூடிய வகையில், கட்டடங்களை அமைக் கலாம். இந்தக் கருத்தை இலங்கை அதிகாரி களுக்குத் தெரிவித்தேன்.

மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் ஜனாதி பதி உறுதியாக இருக்கின்றார். எதிர்க்கட்சிகளை யும் பங்காளிக் கட்சிகளையும் தன்பக்கம் இழுத்துப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கு வதில் அவர் தீவிரமாக இருக்கிறார்.

நோர்வே அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் நடக்கலாம். மக்களின் மனிதாபி மானப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கி மக்க ளின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்போது சமாதான முயற்சிகளுக்கும் சாதகமான விளைவு கிட்டும்.

சகல பகுதிகளுக்கும் நிவாரண உதவிகள் கிட்டுவதை உறுதிசெய்ய வசதியாகப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். சர்வ தேச சமூகமும் அதையே விரும்புகின்றது - என்றார் கிளின்டன்.

நேற்றுக்காலை கல்முனைக்கு விஜயம் செய்த பில் கிளின்டன் அங்கு பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். அவரது வருகையையொட்டி அங்கு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்தது.

அங்கு கருத்துவெளியிட்ட கிளின்டன், அடுத்த தடவை இலங்கைக்கு விஜயம் செய் யும்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப் பகுதிக்கும் விஜயம் செய்யவிருப்பம் தெரி வித்தார் என தனியார் வானொலி ஒன்று தெரி வித்தது. (ஐ-3-12)

## கடல் பகுதிகளை நிலமாக்கும் சீனாவின் திட்டம் பேரழிவைத் தரும்

### கடல்சார் நிர்வாகப் பிரிவு நிபுணர்கள் கருத்து

பெய்ஜிங்,மே29

சீனாவின் கடற்பகுதிகளை நிலமாக்கிவரும் நடவடிக்கைகளால் கடலோரப் பகுதிகளில் மிகப்பெரிய நாசம் ஏற்படும் என கடல்சார் நிர்வாகப் பிரிவு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடலில் பலவிதமான கழிவுப்பொருள்களை கொட்டி நிலமாக்கும் நடவடிக்கைகளால் சுற் றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது என அந்நாட்டு கடல்சார் நிர்வாகத்தின் புள்ளி விவரங்கள் மற்றும் தகவல் சேவைப் பிரிவு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது:-

கடற்பகுதிகளை நிலமாக்கி வருவதால், கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் ஆகிய வற்றின் வாழ்க்கைமுறை பாதிக்கப்படுகிறது. மேலும், நதிமுகத்துவாரம் அடைபட்டுவிடுகிறது. இதனால், கடலோரப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

கடந்த 10ஆண்டுகளில் மீன் இனங்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. கடல்வாழ் உயிரினங்கள் வாழ்க்கையே பெரி தும் பாதிக்கப்பட்டுள்ளது. யாங்ட்சே, பேர்ல், மஞ்சள் ஆற்றுப்பகுதிகளிலும் இந்த நடவடிக்கை நடைபெற்றுவருகிறது.

இம்மாதிரியான சீரழிவைத் தடுத்து, சுற்றுச் சூழலைப் பேண செயற்கைக்கோள்கள்மூலம் கடற்பகுதி கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத் தப்படும் 2009ஆம் ஆண்டில் இது நிறைவடையும்.

ஜியோஜோ விரிகுடா மட்டும் 35 சதவீதம் சுருங்கியுள்ளது. 1928இல் 535 சதுர கிலோ மீற்றர்கள் இருந்த இப்பகுதி தற்போது 367 சதுரகிலோமீற்றராகச் சுருங்கிவிட்டது.

2002இல் மட்டும் கடற்பகுதிகளை நிலமாக் கும் 20 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது குயிங்டோ நிர்வாகம். இதன்மூலம் 16 சதுர கிலோமீற்றர் அளவுக்கு கடல் பகுதி மறைந்து நிலமாக மாறியது.

மேலும், பல்வேறு திட்டங்களும் செயற்படுத் தப்படுகின்றன. (க-8)

### மண்டபம் நிறைந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சி யார் செல்வநாயகம் ஆகியோர் ஏற்றினர்.

இசைக்கலைமணி த.றொபேட் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்.

அரங்க நிகழ்வுகள் யாழ்.மாவட்ட அரசி யல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியின் தலைமையில் நடைபெற்றன. வாழ்த்துரை யினை பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் வழங்கினார்.

கலாநிதி அ.சண்முகதாஸ் சிறப்புரையாற்றி னார். சூழலியலாளரும் ஊடகவியலாளருமான பொ.ஐங்கரநேசன் வெளியீட்டுரை நிகழ்த்தி னார்.

தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெற்றது. தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பா ளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு வைத் தார். நூலின் முதற்பிரதியை புதிய விஞ்ஞான கல்வி நிலைய இயக்குநர் இரா.அருட்செல் வம் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் எழுத் தாளர் ஐ.சாந்தனும் நூலுக்கான மதிப்பீட்டுரை களை நிகழ்த்தினர். பல்கலைக்கழகப் பேராசி ரியர்கள், சமயப் பெரியார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமா னோர் இந்த விழாவில் கலந்து கொண்டிருந் தனர்.

அரங்கு நிறைந்திருந்தோரில் பெருமளவா னோர் கவிதை நூலை முண்டியடித்து வாங் கிச்சென்றதைக் காண முடிந்தது. நிறைவாக கவிஞர் புதுவை இரத்தி னதுரை ஏற்புரை வழங் கினார். (த-7-30-86)


SKY COMPUTERS (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
MS Office - 3 Months
MS-Word - 1 Month
MS-Excel - 1 Month
MS-Access - 1 Month
MS-Power Point - 1 Month
Full Payment 2000/=
Discount 10%
Desk Top Publishing - 3 Months
Adobe Photoshop - 1 Month
Adobe PageMaker - 1 Month
CorelDraw - 1 Month
அனைத்து பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளது. குறுகியகாலத்திற்குள் நீங்கள் விரும்பிய பாடநெறியை கற்றுத் தேற உடன் விரையுங்கள்
E-mail : skycom@wow.lk
(கச்சேரிக்கு அருகில்)
Today you learn Tomorrow you lead





அதிரடி விலைக் கழிவில்
10,500/= 13,500/=
மொபிரெல், டயலொக் மேசைத்தொலைபேசிகள் இணைப் புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.
- உத்தரவாதம் உண்டு.
- உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகளுக்கு : பவர் செலூலர் டிரேடிங்கம்பனி.
office : 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி.
Shop : 205/01, கஸ்தூரியார் வீதி, யாழ்.
Tel/Fax : 021 - 222 7070
Mobile : 0712 - 399220, 0714 - 182500, 0714 - 182501
[★ இச்சலுகை கையிருப்பு முடியும் வரை மட்டுமே]




OPPORTUNITIES AT STP
Computer Lecturer/Center Manager
Qualification
You Should be a University Graduate or Diploma holder.
Experience
A minimum one year experience in a related field.
Rewards
An attractive remuneration package inclusive of fringe benefits is an offer for the chosen candidates.(min 10,000/-+ travelling)
Application should be forwarded by e-mail (info@stpjaf.com) within 7 days of this advertisement
director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, web:www.stpjaf.com



Admissions On ---
Diploma in English (Week End Classes)
Certificate in English (Week End Classes)
CLASSES FOR NEW BATCH
COMMENCEMENT 04/06/2005
DURATION 3 Months
LEARNING SKILLS: Speaking, Reading, Writing, Listening
LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna. T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Mitcham Road, Tooting, London, SW 17910 UK



EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஓட்டோ உரிமையாளருக்கு சேமிப்புக் கணக்கு மக்கள் வங்கி அறிமுகம் செய்து வைகின்றது

முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு மக்கள்வங்கி 'முச்சக்கர வண்டித் தொழில் சார்புற்றோரின் கணக்கு' என்ற பெயரில் புதிய சேமிப்புக் கணக்கொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

500 ரூபா ஆரம்பத் தொகையுடன் கணக்குகளை ஆரம்பிக்கலாம்; கவர்ச்சிகரமான வட்டியும் வழங்கப்படும். கணக்குதாரர் இலகுவாகப் பணத்தை மீளப்பெறுவதற்காக அவர்களுக்கு இலவசமாக ATM கார்ட் ஒன்றும் வழங்கப் படும். முச்சக்கர வண்டி தொழில் சார்புற்றோரின் தொழில் முயற்சிகளுக்குக் கடன் வசதிகளும் செய்துகொள்ளப்படும்.

1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கி இந்நாட்டு மக்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்காக ஆரம்பம் முதலே பெரும் தொண்டாற்றியுள்ளது.

இளைஞர்களின் திறமைகளை அறிந்து அவற்றை முன்னேற்றவும், சவால்களைச் சமாளிக்கக் கூடிய திறன் மற்றும் பொருளாதார சுதந்திரத்தோடு தமது தொழில்முயற்சிகளில் ஈடுபடவும் ஒவ்வொரு துறைக்கும் ஏற்றாற்போன்று கடன் திட்டங்களும், சேமிப்புத் திட்டங்களும் மக்கள் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

முச்சக்கரவண்டி தொழில் சார்புற்றோருக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இப்புதிய கணக்கும் அதன் செயற்பாடுகளும் சிறிய மற்றும் மத்தியதரத் தொழில் முயற்சிகள் பற்றி அரசு மேற்கொண்ட மத்திய காலப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு உடன்பட்டதாகும்.

தமக்குச் சமீபமாக அமைந்துள்ள எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் - முச்சக்கர வண்டி தொழில்சார்புற்றோர் இக் கணக்குகளை ஆரம்பிக்கலாம்.

# டைனோசர் முட்டை.....


(முன் பக்கத் தொடர்ச்சி)

வாழ் பட்சியினங்கள் டைனோசரைத் தமது உணவாகப் பயன்படுத்தியுள்ளன என நம்புகின்றனர். 'ரெபெகோமிஸ் ரொபஸ்ட்ஸ்' என்ற இக்கடல்வாழ் பட்சியினத்தின் வயிற்றுள் சின்னஞ்சிறிய டைனோசர்களின் எலும்புக்கூடுகள் காணப்பட்டதையடுத்து, டைனோசரை உணவாகக் கொள்ளத்தக்க கடல்வாழ் பட்சியினம் இருந்திருப்பதை உறுதிசெய்துகொள்ள முடிகிறது. டைனோசர்கள் பலவற்றின் எலும்புக்கூடுகள் காணப்பட்ட சீனாவின் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இக்கடல்வாழ் பட்சிகளின் எலும்புக்கூடுகளும் காணப்பட்டதிலிருந்து டைனோசர்களை வேட்டையாடி உண்ணும் பறவையினமும் இருந்திருப்பதாக நம்ப முடிகிறது.

1861ஆம் ஆண்டளவில் முதன்முதலில் டைனோசர் பறவையொன்றின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து. டைனோசர்களால் பறக்க முடியுமா என்ற விடயம் பிரச்சனையாக உருவெடுத்தது தற்போது அதற்குச் சாதகமான வகையில் விடை காணப்பட்டுள்ளது. டைனோசர்கள் வாழ்ந்த காலத்துப் பறவைகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்த டைனோசருக்குப் பறக்கக்கூடிய வகையில் அவசியமான சகல தன்மைகளும் நிறைந்திருந்துள்ளன எனத் தெரிவித்துள்ளனர்.

டைனோசர்கள் குறித்து இவ்வித அபிப்பிராயங்கள் உலவும் இவ்வேளையில் ஒரு காலத்தில் பூமியில் பலம்வாய்ந்த பிராணி இனமாய் வாழ்ந்த டைனோசர்கள் பறவை இனத்துக்கு தமது இனத்தைக் கையளித்து முழு இனமுமே அற்றுப்போய்விட்டதற்கான காரணத்தை இதுவரை எவராலும் கண்டறிய முடியாது போயுள்ளது. ஆயினும் மிக விரைவில் அதற்கான காரணத்தை தம்மால் கண்டறிய முடியுமென விஞ்ஞானகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

– வீயெஸ்ரி –





சித்தாலேப®

திறிபாலா

ஜீரணமாக்கும் உணவு சேர்க்கை



வயிற்றுப் பொருமல், பசியின்மை, இரைப்பை சம்பந்தமான நோய்கள், மலச்சிக்கல் ஆகிய நோய்களுக்கு சிறந்த பலன் பெற தொடர்ந்து 6 மாத காலத்திற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கோ; காலை, மதியம், இரவு ஆகாரத்தின் பின் இரண்டு (2) வில்லைகள் வீதம் எடுக்கவும்.

இதில் அடங்கிய பொருட்கள்
அரலு, நெல்லி, ......

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்டட்.
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, ரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: 2735465
E.mail : siddalep@slt.lk Web : siddhalepa.com

வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.

நாளைய நாகரிகத்தை நாம்
இன்றே அறிமுகப்படுத்துகின்றோம்
ஒரு முறை விஜயம் செய்துபாருங்கள்
உண்மை புரியும்.

யாழ். நகரில்
குறைந்த விலையில்
நிறைந்த ரகங்கள்!
நிகரில்லாத் தரங்கள்!
அழகிய புடவைத்
திணுசுகளின்
குளிரூட்டப்பட்ட
சாம்ராஜ்யம்



கிறீன் பலஸ்
எம்போறியம்
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


# டைனோசர் முட்டை இரகசியம் துலங்குகிறது

அண்மைக்காலத்தில் டைனோசர்கள் குறித்து பல தரப்பட்ட சுவையான தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. பண்டைய காலத்தில் உலகின் குறிப்பிடப்பட்ட சில நாடுகளில் டைனோசர் என்ற இந்தப் பிரமாண்டமான பிராணி இனம் உயிர்வாழ்ந்ததாகவும், அந்த இனம் தற்போது உலகத்தில் முற்றுமுழுதாக அழிந்துபோய் விட்டதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆயினும் காலத்துக்குக் காலம் அம்மிருகங்களின் இறந்த உடல் எச்சங்கள், எலும்புக் கூடுகள் உலகின் சில பகுதிகளில் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்படும் வேளைகளில், அவை குறித்து அந்த ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்துக்கள் பொது மக்களால் சுவாரஸ்யமாகப் பேசப்படும் சந்தர்ப்பங்கள் இடம் பெற்றுள்ளன. அதுவுமின்றி ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளின் அடிப்படையில் வெளியிடும் தகவல்கள் இதுவரையில் நாம் கேள்விப்பட்டிராத சுவாரஸ்யமான தகவல்களாகவும் அமைந்து காணப்படுகின்றன. இந்த ஆய்வாளர்கள் மிகுந்த அக்கறையாக மேற்கொள்ளும் ஆய்வுகள் காரணமாக டைனோசர் என்ற பிராணி இனம் உலகில் வாழ்ந்த காலத்தில் இருட்டடிப்புச் செய்யப்பட பல தகவல்கள் குறித்து அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

அண்மையில் டைனோசர் குறித்து வெளிவந்த செய்தி அதனது முட்டைகள் தொடர்பானதாகும். டைனோசரின் முட்டைகள் முன்னர் பல தடவைகள் கண்டு பிடிக்கப் பட்டிருப்பினும், தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் முட்டைகள் டைனோசரின் வயிற்றுள் காணப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இதனது அர்த்தம் உயிருடனுள்ள டைனோசரொன்றின் வயிற்றினுள் முட்டைகள் காணப்பட்டன என்பதல்ல; நீண்ட காலத்தின் முன்னர் இறந்துபோன – எலும்புக் கூட்டு நிலையில் காணப்பட்ட டைனோசரொன்றின் வயிற்றுப் பகுதியில் அம்முட்டைகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. ஆய்வாளர்களால் அண்மையில் சீன நாட்டில் இம்முட்டைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு ஆய்வாளராலும் இதற்கு முன்னர் இந்த நிலையில் டைனோசர் முட்டையொன்று கண்டுபிடிக்கப்படவில்லை.

''நாம் முன்னர் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகளின்போது இவ்வித நிலையில் டைனோசரின் முட்டையொன்றினைக் கண்டுபிடிக்க இயலுமெனக் கருதினோம்; ஆனால் அதற்கான சந்தர்ப்பம் இப்பொழுதுதான் கிட்டியுள்ளது. இதன்மூலம் எமது ஆய்வு முயற்சிகளில் முன்னேற்றங்கள் ஏற்படக்கூடும்; எமது செயற்பாடுகள் இலகுவாக்கப்பட்டுள்ளன'' – இப்படி இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட கனடா நாட்டைச் சேர்ந்த இயற்கை தொல்பொருள் காட்சியகத்தைச் சேர்ந்த உடற்கூற்று விஞ்ஞானியான 'டமாகி சாட்டோ' என்பவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய இந்தக் கண்டுபிடிப்பையடுத்து டைனோசர் இனத்தில் பறக்கக்கூடிய இனமொன்று வாழ்ந்துள்ளதா? அல்லது ஆகக்குறைந்தது பறவைகளுக்கும் டைனோசருக்கும் ஏதோ ஒரு வகை ஒற்றுமை இருந்துள்ளதா? எனக் கண்டறிவதற்கு விஞ்ஞானிகள் முயற்சிகளை மேற்கொண்டனர். இதனடிப்படையில் டைனோசர் முட்டையின் பிரணுவை ஆய்வுக்கு உட்படுத்தி அந்த இனத்தின் பரிணாம வளர்ச்சி தொடர்பான முடிவொன்றை எட்ட முடியுமென அவர்கள் கருதுவதாகத் தோன்றுகிறது.



இதற்கு முன்னரும் இத்தகைய ஆய்வு முயற்சியின் முடிவில் டைனோசரின் எலும்புக் கூடு ஒன்றினுள் முட்டையை ஒத்த பொருளொன்று கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது டைனோசரின் முட்டைதானா என்பதை அவர்களால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

இத்தடவை கண்டு பிடிக்கப்பட்ட முட்டைகள் அன்னாசிப் பழமொன்றின் பருமன் கொண்டவையாகவும், உருளைக் கிழங்கின் புற உருவ அமைப்புக் கொண்டவையாகவும் காணப்பட்டன. அம்முட்டை ஒன்றின் சுற்றளவு 20 சென்ரி மீற்றர் வரையாக அமைந்திருந்தது. அம்முட்டையும் அது காணப்பட்ட நிலையும் அந்த டைனோசர் 'தெரோபோட்ஸ்' என்ற விசேட வர்க்கத்தைச் சேர்ந்த 'ஒவிரப் டொரோ சோரியன்' என்ற விசேட பிரிவினுடையதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

இரு கால்களைப் பயன் படுத்தி உலாவும் இந்த டைனோசர் வர்க்கம் ஆறரை அடி முதல் பத்து அடி வரையான பருமன் கொண்டிருந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அத்துடன் பெரும்பாலும் இந்த இனத்தைச் சேர்ந்த டைனோசருக்குப் பற்கள் இருந்திருக்க இயலாதெனவும் அவர்கள் நம்புகின்றனர்.


இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 'ஒவிரப் டொரோ சோரியன்' இனத்தைச் சேர்ந்த டைனோசரின் வசிப்பிடத்தில் 15க்கு மேற்பட்ட முட்டைகளைக் கண்டெடுக்க முடிந்திருக்கின்றது. இதனால் டைனோசர்கள் முட்டைகளை எவ்விதத்தில் இட்டன என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டது. டைனோசர்கள் பறவைகளைப்போன்று இடைவிட்டு ஒவ்வொரு முட்டைகளாக இட்டு வந்தனவா? அல்லது முதலையைப் போன்று ஒரே தடவையில் பல முட்டைகளை இட்டு வந்தனவா? என்பது குறித்து ஆய்வு செய்வதற்கும் தற்போது கண்டெடுக்கப்பட்ட இந்த முட்டைகளைப் பயன்படுத்த விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். அவ்வித ஆய்வின் மூலம் டைனோசர்கள் குறித்து மேலும் பல புதிய தகவல்களைத் தெளிவு படுத்திக் கொள்ள இயலுமென விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.



கண்டெடுக்கப்பட்ட இந்த முட்டைகளையும் அவை இடப்பட்ட விதத்தையும் ஆய்வு செய்வதன் மூலம் டைனோசர் வகைப் பறவைகள் மற்றும் முதலைகள் போன்றே முட்டையிடும் இனம் என உறுதிப்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எவ்வாறான போதிலும் டைனோசர் இனத்துக்கும் பறவையினத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாக இதன்மூலம் உறுதியாகிறது. அதன்படி பெரும்பாலும் டைனோசர் பறவை இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்ற கருத்தும் வலுவடைகிறது.

இதனிடையே அண்மையில் சீன நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட – 130 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த – கடல்வாழ் பட்சியின் எலும்புக்கூட்டை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் அக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிட்ட கடல்

(மறுபக்கம் பார்க்க)

செலிங்கோ ஜீவ சமுத்திரம்
மீனவர் ஜீவனத்திற்கு என்றும் துணை

மீனவர் ஜீவனத்திற்கு என்றும் துணை

ஒவ்வொரு நாளும், பல்வேறு எதிர்ப்பார்புகள், கனவுகளைத் தாங்கி வெய்யில் மழை பாராமல் கடலுக்குள் தொழிலுக்குச் செல்லும் நீங்கள் - உங்கள் வாழ்க்கை மீது எவ்வளவு கரிசணை கொண்டுள்ளீர்கள்?

அவ்வெதிர்ப்பார்ப்புகள் ஒரு நொடியில் சிதைக்கப் படுமாயின், உங்கள் ஆதரவில், அரவணைப்பில் தங்கியிருப்போருக்கு யார் துணை? அவர்களின் எதிர்காலம்?

உங்கள் வாழ்க்கையைப் போல உங்கள் ஆதரவில் வாழ்வோரின் வாழ்க்கை மீதும் நாம் கரிசணை கொண்டுள்ளோம்.

இதனால்தான், ஆபத்தான தொழிலில் ஈடுபடும் மீனவ சகோதரர்களாகிய உங்களுக்காக "செலிங்கோ ஜீவ சமுத்திரம்" ஆயுள் காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு முறை மாத்திரம் கட்டுப்பணத்தை செலுத்துவதன் மூலம், 5 வருடங்கள் வரை ரூபா.100,000 பெறுமதியான ஆயுள் காப்புறுதியை செலிங்கோ ஜீவ சமுத்திரம் வழங்குகிறது.

மேலதிக விபரங்களுக்காக (0112) 461 461 க்கு அழைக்கவும்.



செலிங்கோ லைஃப்

இணையத்தளம் : www.ceylincolife.com

உங்கள் பிரதேச மீனவ சங்கங்களுக்கு
செலிங்கோ ஜீவ சமுத்திரம் பற்றிய அறிவூட்டல் நிகழ்வுகளை நடத்த வேண்டுமெனில், எமது அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் - | நன்திகுமார் | 077 7286249 |
| சுண்ணாகம் - | பிரசன்னா | 077 3107764 |
| நெல்லியடி - | நிரோஜன் | 077 3126728 |

Minds FCB

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
29.05.2005

# அரசியலைத் துறந்த பௌத்தரின் பெயரால் போரைத் தூண்டுவதற்கான கேவலமான அரசியல்

சித்தார்த்த மன்னன் அரச போகங்களைத் துறந்து. அரசியல் வாழ்வைப் புறந்தள்ளி, பிணி- மூப்பு - சாக்காடு எனும் வாழ்க்கை நிஜங்களை- நிலையாமையை- கண்டுணர்ந்து தெளிந்தவர். அன்பை, கருணையை, அகிம்சையை தனது போதனைகளில் முதன்மைப்படுத்திக் கௌதம புத்தரானவர்.

புத்த பகவானின் பிறப்பு, பரிநிர்வாணம் நிகழ்ந்த சிறப்பு மிகு நாளாக விசாக பௌர்ணமி கொண்டாடப்படுகிறது. அந்த நாள் புனிதமானது. புத்த பகவானது போதனைகளைச் சிரமேற் கொள்ளும் எவரிடமும் வன்முறை மனோபாவம் தோன்ற மாட்டாது. 'ஜே.ஆர் ஜயவர்த்தன ஒரு உண்மையான பௌத்தராக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்த நேர்ந்திருக்காது' எனத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் ஒருமுறை கூறியிருந்தார்.

உண்மையில் அரசியலைத் துறந்த புத்த பெருமானே இலங்கையில் அரசியலாகியிருக்கும் நிலைமை கவலைக்குரியது. புத்த பகவானை அரசியற் சாக்கடைக்குள் தள்ளுவதென்பது, அவரைக் கொல்வதற்கும், அவரது போதனைகளைக் குழி தோண்டிப் புதைப்பதற்கும் சமனாகும். இந்த விசாக பௌர்ணமியில் நடைபெறும் சங்கதிகளை முன்னிறுத்திய கருத்துக்களை சிறிய பரப்பில் விரிப்பது பொருத்தம்.

**காலங்காலமாக நடந்ததன் தொடர்...**

திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரம் சூடு பிடித்துள்ளது. புத்தர் சிலைகளை முதலில் நிறுவுவதும், சமய அனுஷ்டானங்கள் 'பிரித்' ஓதும் வைபவங்களில் பின்னர் ஈடுபடுவதும், அதனைத் தொடர்ந்து பிக்குமாரும் பிற பெரும்பான்மை இன மக்களும் குடியேறுவதுமாகவே காலங்காலமாக சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் பிரதேசங்களில் நடைபெற்று வந்துள்ளன. அதிலும் யுத்தமற்ற சூழலின் சாதகத் தன்மையைப் பயன்படுத்திக் குடியேற்றங்கள் செய்த நிகழ்வுகள் ஏலவே இடம்பெற்றதுதான். எனவேதான் தமிழர் தரப்பு இம்முறை விழிப்புடன் செயற்பட வேண்டிய அவசியம் தோன்றி உள்ளது.


நீண்ட பல வருடங்களின் பின் திருகோணமலை கோணேஸ்வரம் செல்லும் எவருக்கும் அங்கு நிறுவப்பட்டுள்ள விகாரையே ஆச்சரியத்தோடு முன்னெதிர்ப்படும். கதிர்காமம் செல்ல நேர்பவருக்கும் இதே ஆச்சரியந்தான். உண்மையில் தமது ஆலயங்கள், தமது பிரதேசங்கள் சமயத்தின் பேரால் கபளீகரம் செய்யப்பட்டிருப்பதைக் கண்ணுறும் எவருக்கும் கோபாவேசம் எழுதல் இயல்பே. அது நியாயமானதும் ஆகும்.


இம்முறை வெசாக் கொண்டாட்டங்கள் யாழ்.நாகவிகாரையிலும், கந்தரோடை விகாரையிலும் இடம்பெறும் என யாழ் படைத்தளபதியின் அறிவிப்பு பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

**கந்தரோடையின் கயற்கண்ணி**

கந்தரோடை என்பது வரலாற்று முக்கியத்துவம் மிக்க சின்னங்கள், புதை பொருள்கள் கண்டெடுக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். அங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள், மணிகள், மண் ஓடுகள் முதலான சான்றாதாரங்கள் அது. அவை பௌத்த மத சின்னங்கள் என்பதை நிலைநிறுத்தவில்லை. உக்கிரசிங்க மன்னனால் ஆளப்பட்ட கதிரமலை இராச்சியம் நின்று நிலவிய பகுதி என்றும், வீர சைவர்கள் புதைக்கப்பட்ட இடமென்றும், பௌத்த தாதுகோபம் இருந்த இடமென்றும் ஒவ்வொரு தரப்பினரும் உரிமை பாராட்டும் கந்தரோடை 'கயற்கண்ணி' பிரதேசம் அண்மைக்காலம் வரை தனிநபர்களுக்குச் சொந்தமான காணியாகவே இருந்துள்ளது.

1972 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் அதனைக் கையேற்றுக் கொண்டது. அப்போது நில மட்டத்தில் சிறிய சிறிய வட்டமான கட்டுக்களும், அவற்றை உள்ளடக்கிய பெரிய வட்டக் கட்டுமே காணப்பட்டன. பார்ப்பதற்கு அவை மூடுண்ட கிணறுகள் போலவே இருந்தன. தொல்பொருள்


திருமலை புத்தர் சிலை....


கந்தரோடை 'கயற்கண்ணி'

## அந்த மகானை அரசியலாக்குவது அபத்தம்!

திணைக்களமே தாதுகோப அமைப்பை அவ்வட்டங்களின் மீது ஏற்படுத்தியது. அது கூட பௌத்த சிங்கள மேலாண்மை எண்ணத்தின் வெளிப்பாடாகவே அமைந்தது.

வெள்ளரசு மரக்கிளையை ஏந்தியபடி வந்த பிக்குணி சங்கமித்தை 'கதுரு கொட' என்ற கந்தரோடையில் இரவைக் கழித்த பின்னரே மேற்கொண்டு பயணமானார் என்றும் -

அந்த இடத்தில் தேவநம்பியதிஸ்ஸ மன்னனால் புராண ரஜமகா விகாரை உருவாக்கப்பட்டது என்றும் மகாவம்சத்தை ஆதாரப்படுத்தி அங்கு ஒரு விகாரையை நிறுவுவதே. 'அவர்களது' குறியாக உள்ளது.

**புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்.....**

அதற்கென்றே புரிந்தணர்வு உடன்படிக்கையின் பின்னர் அந்த இடத்தில் இராணுவ முகாமொன்று அமைக்கப்பட்டு 'கத்தறுகொட புராண விகாரை' என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் சுன்னாகம் நகரத்தில் 'வழிகாட்டிப் பலகை' நடப்பட்டிருந்தது. மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து அது 'ஆராய்ச்சி மையம்' எனப் பெயர் மாற்றப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்ட 'கயற்கண்ணி' பிரதேசத்தில் அது விகாரை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தவிரவும் நாக விகாரையின் விகாராதிபதியே கதுருகொடை விகாரையின் விகாராதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளமை அண்மையில் பத்திரிகையொன்றில் வெளியான விளம்பர அனுபந்தமொன்றில் அறியக் கிடைத்தது.

இவையெல்லாம் மிக மலினமான பௌத்த சிங்கள மேலாண்மைச் செயற்பாடாகும். அண்மையில் இங்குள்ள ஒரு பொலீஸ் நிலையத்தில் சிறிய தாதுகோபம் ஒன்றை உருவாக்கியிருந்தனர். பின்னர் காணி உரிமையாளரின் தலையீட்டினால் அது நிறுத்தப்பட்டது.

இன்றும் இராணுவ முகாம்கள் இருக்கும் மக்களின் விடுகளில் பௌத்த வழிபாட்டிடங்கள் சிமெந்தினால் அமைக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

**மதசுதந்திரம் எவருக்கும் உண்டு ஆனால்......**

எவருக்கும் தாம் விரும்பிய மதத்தினைப் பின்பற்றும் சுதந்திரம் உண்டு. தமிழர்கள் பலரும் கூட பௌத்தர்களாக இருந்துள்ளனர். பேராசிரியர் பீற்றர்சால்க் போன்றோர் இங்கு தமிழ் பௌத்தம் நிலவியதை ஆய்வுகள் மூலம் எடுத்துக் கூறியுள்ளனர்.

ஆனால் பௌத்தம் என்பது சிங்கள மேலாண்மையின் குறியீடாகவே சிங்களப் பேரினாவதிகளால் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற எண்ணத்தின் வெளிப்பாடே தமிழர் மீதான புறக்கணிப்பும், வன்முறையுமாக விசுவரூபம் எடுத்தது. தமிழர்களை ஆயுதம் தூக்கவும், அதனால் அழகிய சுவர்க்கமான இலங்காபுரியில் இரத்த ஆறு ஓடவும் காரணமாகியது.

அரசியல் துறந்தவனின் பேரால் நடக்கும் அரசியலே சகிக்க முடியாத பெரும் போரையும், அழிவுகளையும் தந்து கொண்டிருக்கிறது. மேலும் தருவதற்குத் தூண்டிக் கொண்டேயுள்ளது.

ஆனால், பௌத்த தத்தவங்களின் பால் சிங்களவர்களின் கவனம் ஆழமாகத் திரும்புமானால், இலங்கையில் அமைதியும், சமாதானமும், சகோதர நல்லிணக்கமும் உருவாகும் என நம்பலாம்.

அதுவரை புத்தரின் பேரால் - பௌத்த தத்துவங்களின் பேரால் தேரர்களும் பேரினவாதிகளும் நிகழ்த்தும் வன்முறைகளும், அதன் காரணமான பெரும் போரும் நீளுமென நம்பலாம். எதிர்பார்க்கலாம்.

*எழுதுவது-* **விதிச்சான் குஞ்சு**




வேதனையும், எதிர்பார்ப்பும், சோர்வும்
நிறைந்த இந்தப் பொழுதும்
எனக்கு
பிடித்தே இருக்கிறது......
எனது நியாயங்களை
உன் முன் ஒப்புவித்து
கண்ணீருடன் தவமிருக்கிறேனென
புளகாங்கிதம் கொள்ளாதே.......!
நிமிர்வுடன் நான் இருக்கிறேன்......
உயிரின் வீழ்ச்சியும், எழுச்சியும்
தேடலில் தான் வெற்றி கொள்கிறது......

'வீசப்படாத வாள்
உறையில் இருந்தென்ன
இல்லாமலென்ன.......?'

இந்தக் கணங்களை உனக்கு
சாதகமாக்கிக் கொள், அல்லது
எனது தோல்விக்காக போராடு
இரண்டுமே எனக்கு
வெற்றியை மீட்டுத்தரும்....
பொறுமையாயிருத்தல் ஏதோ ஒரு
பிரியத்தின் வெளிப்பாடு
சாதித்தலுக்கான கேடயமாகிவிட முடியாது......!

பிடிவாதத்தின் செயல் முகங்களை
நீ
மெச்சிக் கொண்டிருக்கலாம்.
கீழ் தெளியும்
கூர் நகங்களைக் காண நேரும் ஓர் நாள்
எல்லாவற்றிலிருந்தும்
பிரிந்து போவாய்....!

வலிதரும் ஆன்மாவை
அதிகக் காயப்படுத்திவிடும்
சிறு நினைவு.......

எதையும் உன்னிடம்
எடுத்துக்கொள்ளவில்லை
தந்தவிடவும் முடியாது...........
நீ
உனக்கேயான கோபக்காரனாயிரு!
பொய்மைகளை
தக்க வைத்துக் கொள்
சாணக்கியங்கள்
பேசு.........!
இவற்றிலெல்லாம் அழுந்துபோக
முடியாது
என் பகிர்வு......................!

**எ. மருதங் கேதீஸ்**

# மொழிப் பற்றையும் சமூகப்பற்றையும் சமமாக முழக்கஞ்செய்த பாரதிதாசன்



"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ்,
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று தமிழ் முழக்கம் செய்தவர் பாரதிதாசன். தேய்பிறையாகும் தமிழை பூரண முழு சந்திரனாக்கும் தீவிர தமிழ்ப் பற்றாளனாகத் தமிழ்ப் புரட்சி செய்தவர் அவர்.

ஆரம்பத்தில் பிரெஞ்சுமொழிப் பாடசாலையில் கல்விகற்ற பாரதிதாசன், பின்பு தமிழ் மொழிப் பாடசாலையிலே கற்று, தமிழ்மேல் தீவிரக் காதல்கொண்டு, தமிழின் விடுதலைக்காக - தமிழ்ச் சமூகத்தின் விடிவுக்காக - தீவிர தொண்டாற்றினார்.

கவிதை உலகிலே சஞ்சரித்து நாட்டுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் முதலாவது பாடலாக பாரதிதாசன், தன் குருநாதர் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வேண்டுதலுக்கிணங்க "எங்கெங்குக் காணினும் சக்தியடா...." என்ற பாடலைப் பாடுகின்றார்.

சுப்புரத்தினம் என்ற இயற்பெயரோடு வாழ்ந்தவர் அன்றிலிருந்து 'பாரதிதாசன்' என்று சமூகத்தினரால் அழைக்கப்படலானார். பாரதியாரையே தன் ஆத்மீகக் குருவாக - தனது தமிழ்க் கவியுலகுக் குருவாக - கொண்டு, குருவாகிய பாரதியாரின் ஆசியோடு பாடல்களையும்பாடி, பாரதியாருக்குத் தன்னை அடிமையாக்கியதால் 'பாரதிதாசன்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றார். பாரதிக்கு அடிமையானதால் பாரதிதாசன் ஆயினார்.

## இலக்கியப் பரல்

பாரதிதாசன் தமிழை மட்டும் போற்றிப் பாடவில்லை. தமிழ்ச் சமுதாயத்திலே காணப்பட்ட மூட நம்பிக்கைகள், பெண் அடிமை, பால்ய திருமணம், உடன்கட்டை ஏறுதல், மதச் சடங்குகள் யாவற்றையும் நீக்கி, தமிழ்ச் சமுதாயம் ஒரு பயனுள்ள சமுதாயமாக உருவாகவேண்டும்; தமிழ் விடிவுபெறவேண்டும்; தமிழ் பொதுமொழியாக்கப்பட வேண்டும்; தமிழ் அரசகரும மொழியாக்கப்பட வேண்டும். என்று தனது பாடல்களினூடு சமூக விழிப்புணர்வு முழக்கம் செய்தார்.

பல மொழிகளிலே பாண்டித்தியம் பெற்ற பாரதிதாசன், ஏனைய மொழிகளிலும் பார்க்கத் தமிழ் சிறப்பானது என்பதற்கு "ஆற்றங்கரையினிலே வேற்று மொழிப் பாட்டுக்கள் எல்லாம் கேட்டன. உள்ளம் மகிழவில்லை. கடைசியில் எங்கிருந்தோ தமிழில் - ஓர் இன்ப நறுங்கவி கேட்டது காதினில்...... அந்த வண்ணத் தமிழ்ப் பதம் என் நெஞ்சையும் வானத்தையும் குளிர் நீரையும் நிலவையும் தமிழர் குலத்தையும் ஒன்றெனச் செய்ததுவாம்" என்று குறிப்பிட்டதிலிருந்து அவருக்குத் தமிழில் இருந்த பற்று வெளிப்படுகின்றது.

தமிழைத் தாய்மொழியாகப் பெற்றதால் அவருக்கு உண்டான பெருமிதத்தைத்தான் பாருங்களேன்!. 'வெண்குருதிதனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம்!' என்றார் பெருமை பொங்க. முன்பு ஒரு பாட்டினிலே, 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று குறிப்பிட்ட புரட்சிக் கவிஞர், 'உயிரும் மூச்சும் தமிழே!' என்று கூறிப் பேருவகையடைகின்றார். தமிழுக்கு இழிவு ஒன்று ஏற்படுமாயின் பொறுக்காது இவரது நெஞ்சம். 'அமுது' என்று சொல்லுமிந்தத் தமிழ் என் ஆவி அழிவதற்குக் காரணமாய் இருந்ததென்று சமுதாயம் நினைத்திடுமோ? ஐயகோ! என் தாய் மொழிக்குப் பழிவந்தால் சகித்திடுமா என் நெஞ்சம்? என்று உள்ளங் குமுறுகிறார். அங்கே -

"காதல் ததும்பும் கண்ணாளன்தன்னைக்
கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்
புகழ்ந்தாள் என்று பொறாமல் சோர்ந்து வீழ்ந்தான்......"

என்று நம் புரட்சிக் கவி குறிப்பிட்டது போன்று வேறு எந்தக் கவிஞர்களும் குறிப்பிடவில்லை. தமிழ்மேல் காதல் கொண்டதால் நாயகியின் காதலனுக்குக் கொச்சைத் தமிழில் அவள் புகழ்ந்தது பிடிக்காமல் மயங்கி வீழ்ந்தான் என்கின்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். வேறு காதலர்கள் காதலி அரைகுறையாக என்னத்தை, எப்படிப் பேசினாலும் 'நின்நாவினின்று வரும் வார்த்தை எதுவோ அது அமுதம்' என்று நோக்கி, ஏங்கி, வியந்து நிற்கும் இந்தக் காலத்தில், தன் உயிரான காதலி கொச்சைத் தமிழில் பேசியதால் மயங்கினான். அவள் மேல் அவனுக்குப் பற்றில்லை - காதலில்லை - அன்பில்லை - என்று கூற இயலாது. அத்தனைக்கும் மேலாக அவனுக்குத் தன் தாய் மொழியாகிய தமிழின் மேல் அதிதீவிரக் காதல் என்பதே கவிதையின் அர்த்தமாகும்.

தமிழை நாங்கள் 'வாழ்க தமிழ்' என்று வாழ்த்துவதில் பயனில்லை. தமிழை முறையாகக் கற்கவேண்டும். உலகிலுள்ள புதுமைகள் யாவற்றையும் தமிழில் உருவாக்கி, அவற்றின் பெயர்களும் தூய தமிழிலே அமையவேண்டும். காலத்திற்கேற்ற அறிவியல் வளர்ச்சியைத் தமிழ் எய்தவேண்டும். தமிழ் உயர்வான மொழி என்று மார்தட்டி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. புதிய ஒளிமயமிக்க தமிழைக் காணவேண்டும் என்பதே பாரதிதாசனின் நிலைப்பாடு.

தமிழைத் தனது தாயாகவும் வாழ்வுக்கு உறுதுணையாகவும் வெற்றிக்கு உறுதுணையாகவும் கொண்டமைக்குச் சான்றாக -

"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே" என்று பாடி, தனக்கு ஆதாரம் யாவும் தமிழே என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ் மொழியைக் ஹிந்தி மழுங்கடிக்கப்போவது கண்டு கொதித்தெழுந்த பாரதிதாசன்,

"செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் - இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?
பங்கம் விளைந்திடில் தாய்மொழிக்கே - உடல்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்
ஏற்கவிடோம் தமிழ்த் தாய் தனையே - உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை!" என்று குமுறுகிறார். ஹிந்தியை எதிர்த்து இவர் எழுதிய பாடல்கள் உணர்ச்சி பொங்கியவை; புரட்சிகரமானவை; உள்ளத்தை அரிப்பவை; சிந்தனையைத் தூண்டுபவை. சமூக விடுதலைக்கு இந்தியாவிலே இருந்த மூட நம்பிக்கைகள் யாவும் களையப்படவேண்டும் என்று குறிப்பிட்ட பாரதிதாசன், அவற்றைச் சாடும் கவிதைகளைப் பாடி மக்கள் மத்தியிலே புரட்சியை ஏற்படுத்தி 'புரட்சிக்கவி' என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

— சிவஹரி

# கணவர் ஓடீற்ற(ா)ர்

**தமிழ்** நாடு இறையியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எம். ஞானவரம் அவர்கள் யாழ்ப்பாணத்திலே வெளியிட்ட சில கருத்துக்கள் சிந்தனைக்குரியன. அவற்றிலே ஒன்று.

ஒரு சகோதரி இங்கிருந்து இந்தியாவுக்குப் படிக்க வந்திருந்தார். அவரை நான் 'இன்ரவியூ' பண்ணவேண்டிய நிலை. அவர் திருமணமானவர்.


"உங்களின் கணவர் என்ன வேலை? என்றேன். அதற்கு அவர் 'ஓடீற்றர்' என்றார். நான் அப்படியே அசந்துபோனேன். 'ஏன் ஓடினார் எதற்கு ஓடினார்?' என்று கேட்டேன். உடனே அந்தம்மா நீங்க தப்பா புரிஞ்சுவிட்டீங்க, எனது கணவர் 'ஓடீற்றர்' வேலை செய்கிறார். நாங்க அங்கே 'ஆடிட்டர்' என்பது போல நீங்க இங்கே 'ஓடீற்றர்' என்று சொல்கிறீங்கள்.

AUDITOR (கணக்காய்வாளர்) என்ற ஆங்கில வார்த்தையை எப்படி உச்சரிக்கவேண்டும். யாரின் உச்சரிப்புச் சரியானது என்பதற்குப் பேராசிரியர் விளக்கமளிக்கவில்லை. உச்சரிப்பால் மட்டுமல்ல சில சமயங்களில் வார்த்தைகளாலும் கூட விபரீதங்கள் ஏற்படலாம். 'நீங்கள் இப்பொழுதும் கந்தரோடையா?' என்று ஆண்களைக் கேட்கலாம். பெண்களை அதுவும் மணமானவர்களைக் கேட்டால் எப்படியிருக்கும்?

இந்தியர்களுக்கு 'ஓ' என்பது ஒவ்வாமை போன்றது. அந்த உச்சரிப்பு அவர்களுக்கு வரவே வராது. ஆங்கிலத்திலே 'ஓ' வென்று தொடங்குவதெல்லாவற்றுக்கும். அவர்கள் 'ஆ' தான். ஆடிட்டர். ஆபிஸ், ஆட்டோகிராவ், ஆட்டோ.... போதாக்குறைக்கு நம்மவர்களையுமல்லவா அவர்கள் ஆட்டோக்காரர்களாக்கி விட்டார்கள். அதற்கு வித்துவான் க.ந.வேலன் அவர்கள் ஒரு விளக்கம் சொல்வதுண்டு. அவர்கள் பிறமொழிச் சொற்களை இந்திய மரபுக்கேற்றவாறு ஏற்றுக்கொள்வதால்தான் அப்படி என்று! ஆங்கிலம் தெரிந்தவர்களால் கூட ஒரு நாட்டினர் பேசுகின்ற ஆங்கிலத்தை இன்னொரு நாட்டவர்களால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதும் உண்மைதான்... ஆனால், இந்தியர்களின் 'ஆங்கில'த்தையும் அந்த வகையில் சேர்த்துக் கொள்ளலாமா?

சிலர் வடமொழி எழுத்துக்களைத் தேவையற்ற இடங்களிலே கூட வலிந்து சேர்த்துக்கொள்வார்கள். ஆஸ்டுக் குஸ்டி, வேஷ்டி என்பதுபோல.... இன்னும் சிலருக்கோ அத்ததைய வார்த்தைகள் நாவிலே வரவே வராது. அதற்கொரு எடுத்துக்காட்டு.

ஒரு வாத்தியாருக்கு 'புஷ்பம்' என்று உச்சரிக்க வராது. அதற்குப் பதிலாக 'புப்பம்' என்றே சொல்லி வந்தார். வேறு வழியில் 'பூ' என்றும் சொல்லுவார். அவரிடம் படித்துக்கொண்டிருந்த மாணவன் ஒருவன் 'புஷ்பம்' என்று தெளிவாகச் சொல்லுவான்.




இதைக் கவனித்து வைத்திருந்த கிராமத்துப் பெரியவர் ஒருவர் அவரின் வாயைக் கிளறும் நோக்கிலே, "என்ன வாத்தியார்? நீங்கள் புப்பம், பூ என்கிறீர்கள். அந்த மாணவனோ 'புஷ்பம்' என்கிறான். இதிலே எது சரி?" என்று கேட்டார்.

அதற்கு விடுவாரா வாத்தியார்? புத்திசாலித்தனமாகப் பதில் சொல்லிச் சமாளித்தார். 'பூ' என்றும் சொல்லலாம், புப்பம் என்றும் சொல்லலாம். அந்தத் தம்பி சொன்னது போலவும் சொல்லலாம்.

சரியான இடத்திலே குறியீடுகள் இடத்தவறுவதாலும் சரியானபடி சந்தி பிரிக்கத் தவறுவதாலும் கூடப் பொருள் மாறுபட்டு விபரீதமான விளைவுகள் ஏற்படலாம்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே, யாழ்ப்பாணத்திலே நடந்த ஒரு வழக்கிலே குற்றவாளிக்கு எத்தகைய தண்டனை வழங்கலாமென்று கேட்டு கொழும்பு தேசாதிபதிக்கு எழுதினார்களாம். அதற்குத் தேசாதிபதியிடமிருந்து வந்த பதில் அவனைக் கொல்லாதீர்கள் விட்டு விடுங்கள் என்பதாகும். (Kill him not, leave him) ஆனால் இங்கு அதற்கு இவர்கள் கொண்ட பொருளோ 'அவனைக் கொல்லுங்கள், விட்டு விடாதீர்கள்' என்பதாம்.

ஒரேயொரு காற்புள்ளி (Comma) இடம்மாறியதால் ஏற்பட்ட விளைவைப் பார்த்தீர்களா?

ஆரம்ப காலத்திலே தமிழ்வாணன் அவர்கள் தாம் கேள்விப்பட்டதும் நாட்டிலே வழக்கிலுள்ளதுமான நூறு சிரிப்புக் கதைகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தார். இந்த வகைத் தொகுப்புக்களிலே அந்நூல் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு முயன்றும் அதனை இப்போது பெறமுடியாமற் போய்விட்டது. நினைவுக்கெட்டிய வகையிலே அதிலேயிருந்த ஒரு கதையைச் சொல்லுகிறேன்.

இரண்டு நண்பர்கள் மிகுந்த பசிக்களையுடன் அந்த ஊருக்குள் (சிவகாசியாக இருக்கலாம்) வந்து சேருகிறார்கள். எங்காவது ஒரு சாப்பாட்டுக் கடை இருக்குமா என்று தேடிக் கொண்டிருக்கிறார்கள்... ஊஹூம்... கிடைக்கவில்லை.

கடைசியாக ஒரு கடை முன் வந்து நிற்கிறார்கள். அது சாப்பாட்டுக் கடைதான். ஆனால் விளம்பரப் பலகையிலே 'இங்கே சாப்பாடு போடப்படும். என்பதைப் பின்வருமாறு தவறாகச் சந்தி பிரித்து எழுதியிருந்தார்கள்.

'இங்கே சாப்பா டுப்போ டப்ப டும்..'

இதனை ஒருவன் சிரமப்பட்டு வாய்விட்டுப் படிக்க... மற்றவன் சொன்னான். 'இது வெடிக்கடையடா... வாடா... மேற்கொண்டு போய்ப் பார்ப்போம்' என்று.....!.

– சண் அங்கிள்

# கோபி பாலைவனத்தின் மேல் சீறிப் பாய்ந்த தீப் பிளம்பு....



## உலகை உலுக்கிவரும் இயற்கை அனர்த்தங்கள் 15

தருவது:- மு.சிவநேசன்

## கனவுப் படகுகள் கடலோடு போயின....

போலா இயன்றவரை பதற்றத்தைத் தவிர்த்துக் கொண்டாள். சாவு நிச்சயம் என்கின்ற நிலைப்பாட்டிற்கு அவர்கள் வந்துவிட்டாலும் இருவரும் ஒரு படகில் இருந்தாலும் இக்கட்டான நிலையில் அவன் வலியுடன் தவித்தாலும் அவளால் அவனை நெருங்க முடியவில்லை. தமது தொலைத்தொடர்புக் கருவிகளை இயக்குவதில் அவள் தீவிரமாக இருந்தாள்.

இத்தனைக்கும் கடலினதும் காற்றினதும் தீவிரம் குறைகின்ற அறிகுறிகள் தென்படவில்லை. டானாவுக்கான முதலுதவிச் சிகிச்சையை செய்ய அவளிற்கு அவகாசம் கிடைக்கவில்லை. கைவிட்டால் படகு கைநழுவிப் போய்விடும் இக்கட்டில் அவள் தவிக்கிறாள்.

அவளது தொலைத்தொடர்புக் கருவி கறகறக்கும்போது அதனூடு ஒரு தகவலை வானலையில் தவழவிட அவள் முயற்சிப்பாள். இப்போதும் அவர்களது 'அன்ரெனா' செயற்படும் என நினைப்பது வீண் முயற்சிதான். ஆனாலும் அதிசயமாக கறகறப்பின் ஊடே மனிதக் குரல்களை அவளால் கேட்க முடிந்தது.

சில மணித்தியாலங்கள் இப்படியே கழிய விமானம் ஒன்று தாழ்ப்பறந்து நோட்டமிட்டது. எனினும் விமானிகளால் தவிக்கும் படகினை மீட்க இயலாது. விமானிகள் இவர்களுக்கு சுமார் 50 மைல் தொலைவில் ஒரு சரக்குக் கப்பலை அடையாளம் கண்டு கொண்டனர்.

ஆயிரம் தொன் சரக்குகளை மட்டும் அது தன்னகத்தே கொண்டிருந்ததால் கடலலைகள் அந்த எண்ணாயிரம் தொன் எடை கொண்ட கப்பலையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன. 425 அடி நீளமான தமது கப்பலையே போதிய எடையில்லாத காரணத்தால் சமாளிக்க முடியாமல் திணறும் மாலுமிகளிடம் ஐம்பது மைல் தொலைவில் 45 அடி நீளமான படகில் தவிக்கும் இருவரை மீட்கும் பணி விமானிகளால் ஒப்படைக்கப்பட்டது. இது சாத்தியமாகுமா?

இந்தக் குமுறும் கடலில் 50 மைல் நீளத்தைக் கடந்து இரண்டும் சந்திப்பது சாத்தியமாகுமா? இரண்டும் சந்திக்கும்போது ஒன்றோடொன்று உரசினால் கூட படகில் இருப்பவர்களின் எலும்புகூட மிஞ்சாது.

விமானிகள் ஒரு மிதக்கும் சைகை எழுப்பும் சாதனத்தை படகின் அருகிலே கடலில் போட்டு விட்டனர். அடிக்கடி தாழப் பறந்து படகையும் நோட்டமிட்டனர். அந்தப் பிராந்தியத்தில் இவ்வாறான பல படகுகள் இருந்திருக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் என்ன நடந்தது?

◆ ◆ ◆

டிவினியா மறுத்தால் அந்தப் பயணத்தில் ஏதாவது தடங்கல்கள் சந்திப்பதுதான் வழமை. இந்தப் பயணத்திலும் அவளிற்கு மனமில்லை. எடுத்ததற்கெல்லாம் முரண்டு பிடிக்கக் கூடாது என்றுதான் அவள் இதில் உடன்பட்டாள். அவளது உள்ளம் விரும்பாத அந்தப் பயணத்தில் முதலில் சந்தித்து ஓய்ந்தது ஒரு சுழல் காற்று.

அது சற்று ஓயவும் டிவினியாவின் மறுப்புக்கான அறிகுறி வந்து கடந்தாயிற்று. இனியாகுல் நிம்மதியாகப் பயணிக்கலாம் என மனப்பால் குடித்து பயணத்தை தொடர்ந்தது அந்தக் கூட்டுக் குடும்பம்.

காலநிலை மோசமடையும்போது அவர்கள் நியூஸிலாந்திலிருந்து 400 மைல்களைக் கடந்து நடுக்கடலில் அகப்பட்டு இருந்தனர். ஏனைய பல படகுகளோடு அவர்கள் தொடர்பிலும் இருந்தனர். ஏனையவர்களும் காலநிலை மாற்றம் பற்றிய தமது அச்சத்தை வெளியிட்டு இருந்தனர்.

மீண்டும் டிவினியாவின் மறுப்பு விசுவரூபம் எடுப்பதை அவள்கூட விரும்பவில்லை. ஆனால், நிலைமை மோசமடையலானது. காற்று 70 மைல் வேகத்தை எட்டிப் பிடித்தது. பாரிய அலைகள் கிளம்பிக் கொண்டன. தமது வானொலிக் கருவி மூலமாக அவர்கள் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். என்றாலும் யாரை எவர் காப்பாற்றுவார்?

டிவினியா தனது கணவன் டெறில்லின் பதற்றத்தைத தணிக்க பிரயத்தனம் எடுத்துக் கொண்டாள். தன்னியக்க இயந்திர செயற்பாடுகளை இடைநிறுத்தி படகின் இயக்கத்தை மனிதக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய கட்டம் பிறந்துவிட்டது. அசாதாரண நிலைமையல் தன்னியக்கச் செயற்பாடுகள் கைவிட்டுவிடும்.

டெறில் தனது உடலின் தன்னியக்கச் செயற்பாடுகள் கூட கைநழுவிப் போவதாக உணர்ந்தான். அவனை டிவினியாதான் இயக்க வேண்டி இருந்தது. பார்வைப் புலம் மங்கலாக இருந்தது. வெளியே எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. படகு தொலைதூர இலக்கை நோக்கி மணிக்கு ஐந்துமைல் வேகத்திலும் அசைய மறுத்தது. பயணிகளை அது இடைக்கிடை மரச் சட்டங்களோடு மோத வைததகில் அவர்களது வலி உச்சம் கண்டிருந்தது. எப்போது, எப்படி, ஏது நிகழும் என்று எதிர்வுகூற எவராலும் இயலவில்லை.

அவர்களது உயிர்காப்பு படகு 'டிங்கி கட்டுக்கள்' தளர்ந்து படகோடு மோத ஆரம்பித்தது. அதன் கட்டுக்களை இறுக்காதபோது அதுவே படகை உடைத்துவிடும் ஆபத்து வந்துவிட்டது. இருளிலும் டிங்கியின் கட்டுக்களை இறுக்கி வெளியே களம் இறங்கினான் டிவினியாவின் மகன் ஷேன். அலையோடும் கடலோடும் போராடி டிங்கியை இறுகப் பிணைத்துவிட்டு அவன் உள்ளே நுழையும்வரை டிவினியா தவித்த தவிப்பு இருக்கிறதே அதனை விபரிக்க வார்த்தைகள் இல்லை.

சிலமணி நேரம் கழிந்து டிங்கி மீண்டும் தளம்பத் தொடங்கியதும் மீண்டும் வெளியே வரவேண்டிய நிர்ப்பந்தம் ஷேனுக்கு ஏற்பட்டது. பிச்சை வேண்டாம் நாயைப்பிடியென்று டிங்கியைக் கழற்றிக் கடலில் தள்ளிவிட்டான் அவன். இருளினூடே அது சுரீரெனச் சுழித்துப்போய் அலைகளில் மறைந்து கொண்டது.

இதுவரை நிதானமாக இயங்கிக் கொண்டிருந்த படகின் இயந்திரங்கள் மக்கர் பண்ண ஆரம்பித்தன. விக்கி விக்கி இயங்கி மனிதர்களின் இதயத் துடிப்பை எகிற வைத்துக் கொண்டிருந்தன. இயந்திரங்கள் விக்கும்போது விழிபிதுங்க அவர்கள் ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தனர். கடைசியில் ஓர் உலுக்கலுடன் அவை ஓய்ந்து கொண்டன. படகு அலைகளின் ஆட்டத்திற்கு முற்றாகத் தாளம் போடத் தொடங்கியது.

இவ்வாறு இரண்டு நாட்கள் அவலமாகக் கழிந்த நிலையில் படகில் பலவழிகளிலும் சிதைவுகள் ஊடாகத் தண்ணீர் கசிந்து கொண்டிருந்தது. இயந்திரங்களில் உயிர் இருக்கவில்லை. ஆக மனிதர்களிடமும் அதே நிலைமைதான்.

மிகுந்த போராட்டத்தின் பின்னர் இவர்களுக்கு ஒரு பாரிய மீன்பிடி றோலரின் தொடர்பு கிடைத்திருந்தது. 180 அடி நீளமானதும் 400 தொன் எடை கொண்டதுமான அந்த றோலர் இவர்களது படகை மீட்க அதன் திசை நோக்கி நகரலானது. இராட்சத அலைகளுக்கு 45 பாகை கோணத்தில் அவற்றை எதிர்கொண்டு தந்திரமாகவும் நிதானமாகவும் பயணிக்க பலமணி நேரம் தேவைப்பட்டது.

இறுதியில் டிவினியாவின் படகில் இருந்த நான்கு பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். போலாவையும் டானாவையும் கூட அந்தச் சரக்குக் கப்பல் பாதுகாப்பாக மீட்டுவிட்டது. ஆனால் டானா மிகுந்த வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான்.

இந்தக் கடற் கொந்தளிப்பில் பலரதும் கனவுப் படகுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. பெரும்பாலானவர்கள் மீட்கப்பட்டாலும் அவர்களது படகுகள் கடலோடு போய்விட்டன. காவுகொள்ளப்பட்ட உயிர்கள் பற்றிய விவரங்கள் பெரும்பாலும் கிடைப்பதில்லை.

கடலுக்குச் சென்ற மீனவர்கள் திரும்பவில்லை என்கின்ற செய்திகள் வழமையானவை. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெற்றியடைவதில்லை. இத்தகைய இழப்புக்கள் ஆவணப் படுத்தப்படுதலும் இல்லை. அள்ளு கொள்ளையாக நிவாரணங்கள் கிடைக்கப்போவதும் இல்லை.

◆ ◆ ◆

இற்றைக்கு சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1908 ஜூன் மாதம் 30ஆம் திகதி இந்தப் பூமி பெற்ற அனுபவம் மிகப் புதுமையானது எனக் கருதப்படுகின்றது.

விண்கற்களின் வீழ்ச்சி எனப்படுவது அடிக்கடி நிகழ்கின்ற ஒன்று என்றாலும் பெரும்பாலும் இவை காற்று மண்டலத்துக்குள் புகும்போது உராய்வினால் தீப்பற்றிக் கொள்கின்றன. பூமியை வந்தடைய முன்னர் அனேகமாக அவை முற்றாக எரிந்துவிடும்.

பாரிய விண்கற்கள் மோதி பூமியில் டைனோசர் இனங்கள் அழிந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இன்றும் இவ்வாறான பல பாரிய கிரகங்களின் அளவுடைய விண்கற்கள் எரி நட்சத்திரங்கள் என்பன அண்ட வெளியில் உலா வருகின்றன. இவற்றினால் பூமிக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என விஞ்ஞானிகள் விழிப்பாகத்தான் இருக்கிறார்கள்.

சீனாவின் மேற்குப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் கோபி (Gobi) பாலைவனம் ஊடாக ஒட்டக வரிசையில் பயணித்துக் கொண்டிருந்த பலரும் ஒரு பாரிய தீப்பிழம்பு வானில் சீறிக் கொண்டு மொங்கோலியாப் பக்கமாகச் சென்று மறைதலைக் கண்டார்கள். அதனுடைய வெப்பநிலை 5000 பாகை பரனைட் ஆக இருந்ததை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மொங்கோலியாவிற்கு வடக்குப் பக்கமாக அமைந்திருக்கும் மத்திய ரஷ்ய பிராந்தியத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவியிருக்கும் குடிமனைப் பிராந்தியமொன்றில் 1908 ஜூன் மாதம் 30ஆம் திகதி காலை 7.17ற்கு அந்த எரிகல் தரையைத் தொட்டு இருக்கிறது.

அந்த இடத்தில் இருந்து 2200 மைல் தொலைவில் உள்ள ரஷ்ய நகரமான சென்.பீற்றர்ஸ்பேர்க் (St. Petersberg) இலும், 3240 மைல் தொலைவில் உள்ள ஜேர்மனியிலும் ஏன் வெகு தொலைவிலுள்ள வோஷிங்ரனிலும் அந்தக் காலத்து பூகம்பத்தை அளக்கும் கருவிகள் ஒருமுறை எகிறிக் காட்டின. அவர்கள் அதனை ஒரு பூகம்பம் என்றே கருதிக் கொண்டார்கள்.

வெடிப்பொலி 550 மைல்களுக்கு அப்பாலும் கேட்கக் கூடியதாக இருந்தது. தீநாக்குகளை பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்தும் காணக்கூடியதாக இருந்திருக்கிறது. காடுகள் தீப்பற்றிக் கொண்டன. ஆங்காங்கே இருந்த குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் போயின.

மனிதர்களும் விலங்குகளும் பொடியாய்ப் பொசுங்கிப் போயினர். 12 மைல் உயரத்திற்கு கரும்புகை கிளம்பிக் கொண்டது. அனல் காற்று அலை அலையாக வீசியது.

சன நெருக்கடி மிக்க நகரப் பகுதியொன்றில் இந்த வீழ்ச்சி கண்டிருந்தால் நிலைமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. பூகம்பத்தில் குற்றுயிரும் குலையுயிருமாக தப்புகின்ற ஒன்றுபாதி கூட இங்கு தப்புகின்ற வாய்ப்பு இருக்காது.

உலகின் அதிநீளமானதும் பிரபல்யமானதுமான Trans Siberian Railway யில் அனர்த்த மத்தியிலிருந்து 375 மைல் தொலைவில் பயணம் செய்து கொண்டிருந்தவர்கள் தமது ஆசனங்களிலிருந்து தூக்கி வீசப்பட்டார்கள். தண்டவாளங்கள் அதிர்ந்து கொண்டன. சாரதிகள் புகையிரதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டனர்.

20 நிமிடங்கள் கழிந்து வளிமண்டல மாற்றங்கள் பல ஆயிரம் மைல் தொலைவில் இங்கிலாந்தில் உணரப்பட்டன. பல நாட்கள் கரிய மழை சைபீரியன் பிரதேசமெங்கும் பொழியலானது. முகில்கள் கனமானவையாகவும் இரவில் ஒளிருவனவாகவும் காணப்பட்டன. சூரியன் உதிக்கும்போதும் மறையும்போதும் வானில் புதுக் கோலங்கள் தென்படலாயின.

நிலைமை ஆறிய பின்பு ஒருசில துணிந்த உள்ளூர் வாசிகளை தவிர பிற ஆராய்ச்சியாளர்கள் எவரும் அப் பிராந்தியத்துக்கு வந்திருக்கவில்லை. ஆகா ஓஹோ என்று உள்ளூர் பத்திரிகைகள் தகவல்களை வெளியிட்டு வந்தன. அடுத்த கல்லு விழுகிறது என்று மக்கள் ஓடலானார்கள். ஆனால் ஆண்டுகள் 100 நிதானமாகக் கடக்கிறது. அப்படி எதுவும் நடக்கவில்லை.

(பொறுத்திருங்கள்)

# ஹிட்லரின் உருவத்தில் பலர் நேசப் படைகளுக்குக் குழப்பம்

**3 இரண்டாம் உலகப்போரின் போது நேச நாட்டுப் படைகள் ஹிட்லரின் நாஜிப் படைகளைத் தோற்கடித்து ஜேர்மனியைக் கைப்பற்றிக் கொண்டன. இந்த வெற்றியின் 60 ஆம் ஆண்டுப் பூர்த்தி கடந்த மாதம் 30 ஆம் திகதி மேற்குலக நாடுகளில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரைப் போன்ற உருவத்தோற்றத்துடன் வேறு பல போலி ஹிட்லர்களையும் நாஜி இராணுவம் பயன்படுத்தி யுத்தத்தை முன்னெடுத்ததாகப் பல கதைகள் உலாவுகின்றன. அது போன்றே ஈற்றில் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் ஹிட்லரின் முடிவு குறித்தும் தெளிவான விவரம் எதுவும் கிட்டவில்லை. இவை குறித்து விவரிக்கும் தொடரின் மூன்றாம் பாகம் இது.**

மார்டின் போமனது உதவியாளர் வில்ஹேர்ம் ஷான்டரின் பிரயாணப் பையில் பிரித்தானிய உளவுப் பிரிவு அதிகாரி ரோபர் கைப்பற்றிய ஆவணங்கள் ஹிட்லர் தொடர்பான பல தகவல்களைத் தெரிந்து கொள்ள உதவின. மார்டின் போமன் ஹிட்லரின் நாஜிக் கட்சியின் செயலாளராகவும், அவரது பிரத்தியேகச் செயலாளராகவும் செயற்பட்டவராவர். இதனால் மார்டின் போமன் போன்றே வில்ஹேர்ம் – ஷான்டரும் ஹிட்லருடன் நெருக்கமாகச் செயற்படும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

அந்தப் பிரயாணப் பையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் ஹிட்லரின் கடைசி விருப்பம்



தொடர்பான ஆவணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. அந்த ஆவணத்தின் கீழ் கோபல்ஸ்ஸின் அடிக்குறிப்பும் இடம்பெற்றிருந்தமையால் அது உண்மையான ஆவணமே என நிச்சயப்படுத்திக் கொள்ளமுடிந்தது.

அத்தோடு அந்த ஆவணங்களில் மற்றொரு பெறுமதியான ஆவணமொன்றும் காணப்பட்டது. ஹிட்லர் மற்றும் அவரது காதலி ஈவா பிறவுன் ஆகியோரது விவாக ஒப்பந்தப் பத்திரமே அதுவாகும். யுத்தத்தின் இறுதி நாள்களில் தாம் தங்கியிருந்த மறைவிடத்தில் வைத்து தமது நீண்டநாள் காதலியான ஈவாவைக் ஹிட்லர் திருமணம் செய்து கொண்டதாக ரோபர் முன்னர் கேள்விப்பட்டிருந்தார். தாம் விசாரித்த பலர் அது பற்றித் தெரிவித்திருந்தபோதிலும் தற்போது கைப்பற்றப்பட்ட ஆவணம் அதனைச் சந்தேகமின்றி நிரூபிப்பதாக ரோபர் கருதினார்.

ஹிட்லரை ஈவா உயிருக்குயிராய் காதலித்து வந்ததை பொதுமக்கள் நன்கு அறிந்திருந்தனர். தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு ஈவா ஹிட்லரை அடிக்கடி வற்புறுத்தி வேண்டிக் கொண்ட போதிலும், ஹிட்லர் அதற்கு உடன்படவில்லை. தமது வாழ்க்கையை ஜேர்மனிய நாட்டுக்காக அர்ப்பணித்துள்ளதால் தாம் குடும்ப வாழ்க்கையில் இணையத் தயாரில்லை எனக் ஹிட்லர் தெரிவித்து வந்த போதிலும் ஈவாவை ஹிட்லர் மிக ஆழமாக நேசித்து வந்தார்.

ஆயினும் ஹிட்லர் மீது தான் கொண்டிருந்த தீவிர காதலால் ஈவா எதனையும் பொருட்படுத்ாது, ஹிட்லரின் வெற்றியிலும் தோல்வியிலும் ஹிட்லருடன் கூடவே இருந்து வந்தாள். ஹிட்லரின் படைகள் தோல்வியுற்றுப் பின்வாங்கிய சமயம், நேச நாட்டு விமானங்கள் ஜேர்மனி மீது வகை தொகையின்றிக் குண்டு வீச ஆரம்பித்ததும் ஹிட்லர் பாதுகாப்புக்காக நிலஅறைக்குள் மறைந்து கொள்ள நேர்ந்தது. ஹிட்லர் எவ்வளவோ தடுத்தும் கேளாது ஈவாவும் ஹிட்லருடன் அந்த மறைவிடத்திலேயே தங்கினாள். சிரமமான கடைசிக் காலத்திலும் பிடிவாதமாக ஹிட்லருடன் தங்கிய ஈவா எவ்வாறாயினும் ஹிட்லரைத் தான் திருமணம் செய்தேயாவது என்ற உறுதியுடன் இருந்து வந்தாள். ரோபர் மேற்கொண்ட விசாரணைகளின் முடிவில் ஈவாவின் திருமண ஆசை கடைசியில் நிறைவேறியதென்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

இருந்த போதிலும், கைப்பற்றப்பட்ட திருமண ஒப்பந்தப் பத்திரத்தை மட்டும் கொண்டு பூரண முடிவொன்றுக்கு வரவிரும்பாத ரோபர், அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அதனை அமெரிக்க இராணுவப் பிரிவினூடாக வாஷிங்டனுக்கு அனுப்பி வைத்தார். அமெரிக்க எம்.பி.ஐ.உளவுச் சேவையின் பரிசீலனைகளில் அப்பத்திரம் எழுதப் பயன்படுத்தப்பட்ட கடதாசி, மை என்பன மற்றும் அதில் இடப்பட்டிருந்த கையொப்பங்கள் என்பவற்றுக்கமைய அப்பத்திரம் உண்மையான திருமண ஒப்பந்தப் பத்திரமே என்பதை அந்த உளவுச் சேவை உறுதிப்படுத்தியது. ஆயினும் ஹிட்லரின் நிலைமை தொடர்பான முடிவொன்றை மேற்கொள்ள கிடைக்கப்பெற்ற அத் தகவல்கள் போதுமானவை அல்ல என ரோபர் உணர்ந்தார். ஏனெனில் ஹிட்லரின் கடைசி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து நேடியாகக் கண்ட சாட்சிகள் எவரையும் தேடிக்கண்டு பிடிக்க முடியவில்லை. இதனால் ஹிட்லரின் முடிவு குறித்த தகவலெதனையும் ரோபரால் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியாத சிக்கல் நிலை நிலவியது. ஹிட்லரும் அவரது காதலி ஈவாவும் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவர்களது உயிரற்ற உடல்களைத் தாம் நேரடியாகக் கண்டதாகவும் சில இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆயினும் அவர்களது உடல்கள் அவர்களது மறைவிடத்துக்கு வெளியே வீசப்பட்டிருந்ததாக அவர்கள் தெரிவித்தமை சிக்கலை உருவாக்கக் காரணமாய் அமைந்தது.

## ஹிட்லரின் போலி உருவங்கள்

ஏனெனில் தமது மதிப்புக்குரிய தலைவரான ஹிட்லரின் உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாதிருப்பதற்காக ஜேர்மனிய இராணுவத்தினர் பல மாற்று ஏற்பாடுகள் வகுத்திருந்தனர். ஹிட்லரைப் போன்ற தோற்றம் கொண்ட மற்றொரு இராணுவ வீரரைத் தேர்ந்தெடுத்து அவரைக் ஹிட்லரைப் போன்ற தேவையான வேளையில் பயன்படுத்துவதே அத்தகைய ஏற்பாடாகும். ஆபத்து மிக்க பகுதிகளில் ஹிட்லருக்குப் பதிலாக இப்போலி ஹிட்லரே விஜயம் செய்து இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்துவார். உண்மையான ஹிட்லர் பயணம் செய்யும் வேளையில் அந்த வாகனத் தொடரணியில் மற்றொரு வாகனத்தில் போலி ஹிட்லரும் பயணம் செய்வார். சில வேளைகளில் போலி ஹிட்லர் ஒரு பாதையில் பகிரங்கமாகப் பயணம் மேற்கொள்ளும் போது, உண்மையான ஹிட்லர் இரகசியமாக மற்றொரு குறுக்குப் பாதை வழியாகப் பயணத்தை மேற்கொண்டு வந்தார். ஒரு சில உளவுச் சேவைகளின் தகவல்களின்படி இவ்வித போலி ஹிட்லர்கள் பலரை ஜேர்மனிய இராணுவத்தின் உளவுப் பிரிவினர் பயன்படுத்திப் பல செயற்பாடுகளை நிறைவேற்றி வந்ததாகவும் ரோபருக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அவ்வாறானதொரு போலி ஹிட்லராகச் செயற்பட்ட குஷ்டாவ் வேலர் என்பவர் குறித்த தகவல்கள் ரோபருக்குக் கிட்டின. குஷ்டாவ் வேலர் தோற்றத்தில் ஹிட்லரையே ஒத்திருந்தார். அவர் போலி ஹிட்லராக மாற்றப்பட்ட வேளையில் ஹிட்லரைப் போன்றே தலைவாரி, மீசையை ஒழுங்குபடுத்தி, உண்மையான ஹிட்லரைப் போன்றே செயற்பட வேண்டி ஏற்பட்டது. பயணங்களின்போதும், இராணுவ வீரர்களுடன் பேசி அவர்களை உற்சாகப்படுத்திய வேளைகளிலும் அவருக்கு உண்மையான ஹிட்லரின் நடவடிக்கை நடைமுறைகள் பற்றிப் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தத்தில் பெரும்பாலானோரால் ஹிட்லருக்கும் குஷ்டாவ் வேலருக்கும் இடையே வேறுபாடு எதனையும் காண முடியாதவாறு குஷ்டாவ் வேலர் போலி ஹிட்லராக உருமாற்றப்பட்டிருந்தார்.

நேச நாட்டுப் படைகளை ஹிட்லர் இறந்து விட்டதாக நம்பவைப்பதற்காக குஷ்டாவ் வேலரை கொன்று அவரது உடலை பிரசித்தமாக வீசியெறிந்து விட்டு உண்மையான ஹிட்லர் ஜேர்மனியின் ஏதோ ஒரு பகுதியில் மறைந்து வாழ்வதாகப் பெரும்பாலான ஜேர்மனியர்கள் மட்டுமன்றி ரஷ்யர்கள் மற்றும் ஐரோப்பிய நாட்டவர்களும் நம்பத் தலைப்பட்டனர். உண்மையான ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுவது உண்மையானால், ஹிட்லரது உடலெனக் கண்டெடுக்கப்பட்ட உடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் எவ்விதம் காணப்படமுடியுமெனப் பலர் சந்தேகம் எழுப்பினர்.

இது தொடர்பாக பிரித்தானிய இராணுவ உளவுச் சேவையைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் பயிபோரட் ஜோன்ஸ் மேற்கொண்ட ஆய்வின் மூலமும் ஹிட்லர் உயிரிழந்து விட்டதான செய்தி தவறானதென முடிவு செய்யப்பட்டது. 1946 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி அவர் மேற்கொண்ட ஆய்வின் போது, பேர்லின் பொதுமக்களில் கல்விமான்களான இருபது பேரிடம் ஹிட்லரின் கதி குறித்து வினாவப்பட்டது. இவர்களில் ஒரேயொருவரைத் தவிர ஏனையோர் ஹிட்லர் அவ்வேளையிலும் எங்கோ ஓரிடத்தில் உயிருடன் இருப்பதாகத் தாம் நம்புவதாகத் தெரிவித்திருந்தனர். உயிருடனிருக்கும் ஒருவர் தொடர்பாக கருத்துக் கூறும் வகையிலேயே அவர்களது பதில் அமைந்தன. எனவே ஹிட்லரின் முடிவு குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வது சிரமமாயிருந்தது. ஆனால் விசாரணைகளுக்கான அத்தகைய தகவல்கள் அவசியமாயிருந்தன. அந்தவேளையில் மாட்டின் போமனின் உதவியாளனான விலஹெர்ம் ஷான்டர் பற்றிய தகவல் மட்டுமே கிடைக்கப்பெற்றிருந்தது. ஒருதடவை ஷான்டரைக் கைது செய்வதற்கான வாய்ப்பொன்றினை ரோபத் தவறவிட நேர்ந்தது. ஆயினும் எவ்விதமாவது ஷான்டரைக் கைது செய்ய வேண்டிய அவசியம் ரோபருக்கு ஏற்பட்டிருந்தது. ஷான்டரைக் கைது செய்யும் முயற்சியில் தீவிரமாகச் செயற்பட்ட ரோபரும் அமெரிக்க உளவுச் சேவை அதிகாரியான ஆர்னோல்ட் வெளிஸ்ஸும் கடைசியில் ஜேர்மனி செக்கோசிலேவேக்கியா நாடுகளின் எல்லையில் இருந்த சிறு கிராமமொன்றில் வைத்து ஷான்டரைக் கைது செய்தனர். பெரும் சிரமத்தின் மத்தியில் கைது செய்யப்பட்ட ஷான்டரை மியூசிச் நருக்குச் கொண்டு சென்று விசாரணைக்கு உட்படுத்தினர். முதலில் ஹிட்லர் குறித்து தகவலெதனையும் வெளியிட மறுத்த ஷான்டர், பின்னர் மனம் மாறி ஹிட்லர் கடைசியில் பாதுகாப்பாக ஒளிந்திருந்த நிலவறையில் கடைசி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த விவரங்களை வெளியிட்டார். ஹிட்லரின் கடைசி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து அறிய முடிந்த முதலாவது கண்கண்ட சாட்சி என்ற வகையில் ஷான்டரின் அந்த வாக்கு மூலம் முக்கியத்துவம் மிக்கதொன்றாகக் கருதப்பட்டது.

(ஹிட்லரின் நிலவறையின் கடைசி நாள்களில் என்ன நடந்தது என்பது குறித்து பின்னர் பார்க்கலாமே!)

(பொறுத்திருங்கள்).

**தொகுப்பு :– வீயெஸ்ரீ**



# தேவைகள்

பதினைந்து வருடங்களின் பின்னர் சொந்தமண்ணில் கால் பதித்தபோது குதூகலமாய் இருந்தது. தனியாளாய் டென்மார்க் போய் அப்பா, அம்மா பார்த்து அனுப்பியவளையே மணம் முடித்து இன்று ஐவராய் திரும்பி யாழ்ப்பாணத்தில் கால் பதித்த சந்தோசத்தை அளவிட முடியவில்லை.

அக்காவும், அண்ணாவும், தங்கை இருவரும் அவரவர் குடும்பங்களுடன் எப்படியிருப்பார்களோ.... என்ற ஏக்கத்துடன் அக்காவின் வீட்டுக்குள் நுழைந்தபோது ஆஹா... அனைவருமே ஒருமித்து நின்ற காட்சி கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது. ஓடி வந்து கட்டிப்பிடித்து அண்ணா,தம்பி,மாமா என்று கொஞ்சியதும் தேகம் புல்லரித்து.... உடல் நடுங்கி... அன்பு பிரவகித்தது. இதைவிட எனது மனைவி, பிள்ளைகளை உச்சிமோந்து பாராட்டிய விதம் இரட்டிப்பு மகிழ்ச்சியாகியது.

நாள்கள் கடந்தன. அவரவர்க்குக் கொண்டுவந்த ரீ.வி டெக், றேடியோ,கமரா எனப் பிரித்துக்கொடுத்ததும் வீடு காலியாகியது.

அக்காவும் பிள்ளைகளும் எஞ்சியிருக்க மற்றவர்கள் காணாமற் போனார்கள்.

என்ன ஏதாவது பிரச்சனையா.... என அக்காவிடம் வினவ அவளும் 'நீ தங்கச்சி லீலாவுக்குக் கொடுத்த சீதனம் பத்தாதாம். அவளே குறை கூறுகிறாள்' என்றாள்.

ஏனக்கா உனக்கும் தங்கச்சி பிரபாவுக்கும் செய்ததைவிட அவளுக்குத்தானே நிறையச் செய்தனான். அவளுக்குப் பெரிய வீடுமெல்லோ கட்டிக்கொடுத்தனான் இப்ப ஏன் கோவிக்கிறாள்?

எனக்குத் தெரியாதடா நீ அவளோடு கதை.

பின்நேரம் லீலா வந்தாள். அவளுடன் கதைத்தபோது அவள் இன்னும் எதிர் பார்ப்பது விளங்கியது. ஏதோ வெளி நாடென்றால் பணத்திற்கு மேல் இருப்பதென்ற நினைப்பு அவளுக்கு. எனது குடும்பத்தையும் என் மூன்று பிள்ளைகளையும் காரணம் காட்டி இனித் தருவதற்கு ஒன்றும் இல்லையென்று கைவிரித்தேன். அவ்வளவுதான் அவள் சண்டை பிடித்துக்கொண்டு இனி எந்த உறவும் இல்லை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

எனக்கு ஆழமாய், சுருக்கென்று எதுவோ தைத்தது. ஒரு மாதிரியாகியது. போனவள் போனவள்தான். அவள் திரும்பி வரவேயில்லை.

பல்லாயிரம் மைல்கள் கடந்து உறவுகள்தான் தேவை என்று நம்பி வந்த என்னை அவள் புரிந்துகொள்ளவேயில்லை. காசும் பொருளும்தான் அவளுக்குத் தேவையாக இருந்தது. அண்ணன் பாசமும், அண்ணி, மருமக்கள் என்ற உறவும் அவளுக்குத் தேவையில்லாமல் இருந்தது.

எனது லீவு முடிந்து போகும்போதுகூட அவள் வழியனுப்ப வரவேயில்லை. சொந்த நாட்டிற்கு வந்துபோகும் செலவெல்லாம் நான் கடன்பட்டே செய்தனான் என்பதை அவள் கடைசிவரையும் புரிந்து கொள்ளவேயில்லை

கடுகுக் கதை

டிலானி - ஊறணி



## இவள் கண்ணீர்...



விழிகளில் இருந்து
கண்ணீர் விடை
பெறட்டும்...
பார்வை ஒளிபெறட்டும்...
உடைந்து போன
கண்ணாடியாய்....
இவள் மாற
யார் பொறுப்பு?
இவள் இன்று
மெழுகாய் உருகுவதற்கும்
யார் பொறுப்பு?
இரவே!
இவளது கண்ணீரை
நீயே ஏற்றுக்கொள்....
உனக்கு கூட
இதயமில்லையா?
நீ.....?
உன்கைக்குட்டையை
நனைத்தாவது
அவளது கண்ணீரை
துடைத்துவிடு.

கங்கா

# 1983 ஜூலையில் 13 படையினரைப் பலிகொண்ட திருநெல்வேலி கண்ணித் தாக்குதல்......



1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் பலாலி வீதியில் திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் நடத்தப்பட்ட கண்ணிவெடித்தாக்குதல் சம்பவம் இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்பு முனை என்று கூறலாம்.

இந்தத் தாக்குதல் காரணமாக ஒரே சமயத்தில் 13 இராணுவ வீரர்கள் உயிரிழக்க நேர்ந்தது. சம்பவத்தைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பில் உருவான வன்முறைச் சம்பவங்கள் படிப்படியாக ஏனைய பகுதிகளிலும் பரவி, ஈற்றில் நாட்டில் பெரும் இனக் கலவரமாக மாறியது.

சிறிலங்கா இராணுவ ரோந்துப் படையணி ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் அத் தொடரணியில் சென்ற இராணுவத்தினரில் இருவர் மட்டுமே உயிர் தப்பிப்பிழைக்க முடிந்தது. லான்ஸ் கோப்ரல் சுமதிபால மற்றும் கோப்ரல் பெரேரா ஆகிய இருவரே அவ்விதம் உயிர்தப்பிப் பிழைத்தவர்களாவர். இவர்களில் சுமதிபால ஏற்கனவே இராணுவ சேவையினின்றும் இளைப்பாறி விட்டார். தற்போது லெப்டினன்ட்டாகப் பதவி வகிக்கும் மற்றையவரான ஆர்.ஏ. உபாலி பெரேரா, அன்று, 22 வருடங்களுக்கு முன்னர் தாம் சந்திக்க நேர்ந்த அப் பயங்கர தாக்குதல் சம்பவம் தொடர்பான தமது அனுபத்தை சிங்களப் பத்தி ரிகை ஒன்றினூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"அந்தவேளையில் நான் இராணுவ காலாட் படையின் சார்ஜன்ட் மேஜர் தரத் தில் மாதகல் இராணுவ முகாமின் 'சீ' காலாட்படைப் பிரிவுக் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றி வந்தேன். அன்றைய தினம் பகல் காங்கேசன்துறை சிமேந்து தொழிற்சாலை வெடிமருந்துக் களஞ்சியத்தின் பாதுகாப்புக் கடமையில் என்னுடன் மேலும் பத்து இராணுவ வீரர்கள் ஈடுபட்டோம். மாலையில் கடமை முடிந்து மாதகல் முகாமுக்குச் சென்ற சமயம், அன்று யாழ்ப்பாணம் குருநகர் இராணுவ முகாமிலிருந்து இரவு ரோந்துப் பணியில் ஈடுபடவுள்ள குழுவில் இணைந்து கொள்ளுமாறு எனக்கு உத்தரவிடப்பட்டது. அதற்கமைய லெப்டினன்ட் வாஸ் குணவர்த்தன தலைமையில் ஒரு குழுவினர் குருநகர் இராணுவ முகாமுக்குச் சென்றோம். எமக்கென சிறிய ஜீப் வண்டியொன்றும் டிரக் வண்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. குழுவில் இடம்பெற்றிருந்த சகல வீரர்களுக்கும் ரைபிளுடன் தலா அறுபது ரவைகளும் இரு கைக் குண்டுகளும் வழங்கப்பட்டிருந்தன. எமக்குத் தலைமை வகித்துச் செயற்பட்ட அதிகாரி இயந்திரத்துப்பாக்கியொன்றினை தம்முடன் எடுத்து வந்தார்.

முன்னால் சென்ற ஜீப் வண்டியில் எமது அதிகாரியுடன் இரு இராணுவ வீரர்கள் பயணம் செய்தனர். ஏனையோர் பின்னால் சென்ற டிரக் வண்டியில் பயணத்தை மேற்கொண்டோம். சார்ஜன்ட் வேலகரத்ன என்பவரும் எமது டிரக் வண்டியில் எம்முடன் பயணம் மேற்கொண்டார். எமக்கு இடப்பட்டிருந்த கட்டளைப்படி நாம் நல்லூர் கோயில் மற்றும் அதனை அண்டிய உட் பிரதேசத்தினூடாகப் பயணிக்க நேர்ந்தது. சந்தேகத்துக்கு இடமான பகுதிகளில் எமது வண்டிகளை நிறுத்தி நாம் வீதிச்சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எமது இரவு ரோந்துப் பணி பூர்த்தியானதும், குருநகர் இராணுவ முகாமுக்குத் திரும்பிச் செல்வதற்காக பலாலி வீதியைச் சென்றடைந்த நாம், திருநெல்வேலிச் சந்தியிலிருந்து பலாலி வீதியூடாகப் பயணத்தைத் தொடர்ந்தோம். திருநெல்வேலிச் சந்தியைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும், பாதையின் இரு புறமும் மதிற்சுவர்களுடன் கூடிய நெருக்கமாக வீடுகள் அமைந்த பகுதியில் எமது வண்டிகள் சென்று கொண்டிருந்தன. அந்த வேளையில் திடீரென வீதியின் நடுவிலிருந்த கிளைமோர் குண்டு பலத்த சத்தத்துடன் வெடித்தது. அச்சத்தம் பல மைல் தூரத்துக்குக் கேட்கக்கூடிய அளவுக்கு கேட்டிருக்கும். அந்தக் குண்டு அதிசக்தி வாய்ந்த தொன்றாகத் தெரிந்தது. அக் குண்டு வெடிப்பில் சிக்கி எமது டிரக் வண்டிக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப் வண்டி ஆகாயத்தில் தூக்கி வீசப்பட்டுப் பலத்த சேதம டைந்தது. நாம் எம்மைச் சுதாகரித்துக் கொள்வதற்குள், பாதையின் இரு புறத்திலும் தொடராக நீண்டிருந்த சுவர்களுக்குப் பின்னால் மறைந்திருந்தவாறே துப்பாக்கிதாரிகள் எமது டிரக் வண்டி மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ஆரம்பித்[illegible] ஆபத்தின் தன்மையை உணர்ந்து [illegible] டிரக் வண்டியில் என்னுடனிருந்த ஏனைய வீரர்களிடம், பதில் தாக்குதலை மேற்கொண்டவாறே டிரக் வண்டியை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான நிலை எடுத்துப் பதுங்கிக்கொள்ளுமாறு கத்தினேன். டிரக்கினுள்ளிருந்த இராணுவ வீரர்களில் சிலர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். பாதை ஓரத்து சுவர்களுக்கு உட்புறம் நிலை எடுத்துப் பதுங்கியிருந்தவாறே பயங்கரவாதிகள் எம்மீது தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வண்ணமிருந்தனர். எமது இரண்டாவது தர கட்டளை அதிகாரியான லான்ஸ் கோப்ரல் சுமதிபாலாவுடன் இணைந்து நானும் தெற்குத் திசையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டன். இருந்தாற்போல சுமதிபால தம்மைத் துப்பாக்கிச் சன்னங்கள் காயப்படுத்திவிட்டதாக உரத்துக் கத்தினார். அந்த வேளையில் நாம் பயணம் செய்த டிரக் வண்டியில் இருந்த இராணுவ வீரர்களுள் பலர் ஏற்கனவே உயிரிழந்து விட் டதை நான் அவதானித்தேன். அதே சமயம் லான்ஸ்கோப்ரல் சுமதிபாலாவின் உடலில் இருந்து அதிக இரத்தம் வெளியேறியமையால் அவர் ஆபத்தான நிலையை எட்டியிருந்தார். நான் மெதுவாக அவரைத் தூக்கிச் சிறிது தூரம் அப்பால் கொண்டு சென்று ஒரு வீட்டின் சுவரின் மேலேறி சுமதிபாலாவின் கையில் துப்பாக்கியைக் கொடுத்து, அவரை ஒருவாறு அந்த வீட்டின் முன்புறப் பிளாட்டின் மேல் ஏற்றி விட்டேன். டிரக் வண்டியினுள் அகப்பட்டுக்கொண்ட எமது இராணுவ வீரர்க ளின் நிலைமை குறித்து தெரிந்து கொள்ள விரும்பிப்



லெப்டினன்ட் உபாலி பெரேரா

பாதையில் இறங்கியது தான் தாமதம், எங்கிருந்தோ வந்த துப்பாக்கிரவை யொன்று எனது காலைப் பதம் பார்த்து விட்டது. காயத்திலிருந்து வெளியேறும் இரத்தத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எனது சப்பாத்ததின் 'லேஸ்' ஒன்றினைக் கழற்றி காயத்தின் மேற்புறம் இறுக்கிக் கட்டுப்போட்டுக்கொண்டேன் அந்த வேளையில் டிரக் வண்டியை நெருங்கிய பயங்கரவாதிகளில் ஒரு சிலர் காயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சில இராணுவ வீரர்களின் மீது மீண்டும் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்ட வண்ணம் அங்குமிங்கும் சிதறிக்கிடந்த துப்பாக்கிகளை ஒன்று சேர்த்துத் தம்முடன் எடுத்துக்கொண்டு அங்கிருந்து தலைமறைவாகினர். மின்சாரக் கம்பமொன்றின் மறைவில் அதுவரையில் பதுங்கியிருந்த நான், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் படிப்படியாகக் குறைவடைந்ததும் எமது ட்ரக் வண்டி நின்ற இடத்துக்குச் சென்றேன், அங்கு நான் கண்டகாட்சி இத்தனை ஆண்டுகள் கழிந்து இன்னும் என் மனக்கண்முன் நிழலாடுகின்றது. எம்முடன் கூடவந்த இராணுவ வீரர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே உயிரிழந்திருந்தனர். சார்ஜன்ட் வேலகரத்ன கடுமையான துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டு, டிரக் வண்டியின் பின்புறத்தில் நிலத்தில் வீழ்ந்து கிடந்தார். லெப்டினன்ட் வாஸ்குணவர்த்தன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் குறுக்குப்பாதையில் காயங்களுடன் வீழ்ந்து கிடந்தார். மற்றொரு இராணுவ வீரரும் அவருக்கு அருகில் நிலத்தில் வீழ்ந்து கிடந்தபோதிலும் பெரும்பாலும் அவர் உயிரிழந்திருக்கக் கூடுமென எனக்குத் தோன்றியது.

அந்த வேளையில் நான் விரைந்து செயற்பட வேண்டிய நிலையிலிருந்தேன்.

## உயிர்தப்பிய சிப்பாயின் திகில் அனுபவம்....

உடம்பின் வேதனை ஒரு புறம், தனித்து விடப்பட்ட என் மீது பயங்கரவாதிகள் ஒன்றிணைந்து தாக்கக்கூடு மென்ற மரண பயம் மறுபுறம். இதன் மத்தியில் இரா ணுவ முகாமொன்றையோ அல்லது பொலீஸ் நிலைமொன்றுடனோ தொடர்பு கொள்வதற்காக எம்முடன் எடுத்து வந்திருந்த தொலைத்தொடர்புச் சாதனத்தைத் தேடிய போதிலும் அத னைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. மனதைத் திடப்படுத்திக்கொண்டு எனது துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் வந்தவழியில் ஓட்டமும் நடையுமாகக் கோண்டாவில் பஸ் டிப்போவை இலக்கு வைத்து வேகமாகச் செல்லத் தொடங்கினேன். அந்த வேளையில் இராணுவ வீரரொருவனை எதிர்பார்க்காத டிப்போ காவலாளி முதலில் வாசல் கேற்றைத் திறப்பதற்கு மறுத்தார். கையிலிருந்த துப்பாக்கியைக் காட்டிமிரட்டி வாசல் கேற்றைத் திறக்கச் செய்வித்து முதலில் அவரிடமிருந்து தண்ணீர் வாங்கி அருந்தினேன், சற்று ஆயாசம் தணிந்ததும் போவிலி ருந்த தொலைபேசி மூலம் இடம்பெற்ற பயங்கரச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலீசாருக்குத் தெரிவித்து, அவ்விடயத்தை உடனடியாகக் குருநகர் இராணுவ முகாமுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டேன். குருநகர் இராணுவ முகாமிலிருந்து மீட்புக் குழுவினர் வந்து சேரும் வரை கோண் டாவில் பஸ் டிப்போவிலேயே தங்கி நின்ற நான், அவர்கள் வந்து சேர்ந்ததும் அவர்களுடன் இணைந்து சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்றேன். லெப்டினன்ட் வீரதுங்க தலைமையில் வந்திருந்த மீட்புக் குழுவினர் துரிதமாகச் செயற்பட்டு உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களை மீட்டு இராணுவ வாகனத்தில் ஏற்றினர். காயமுற்ற நிலையில் காணப்பட்ட லான்ஸ் கோப்ரல் சுமதி பாலாவையும், சார்ஜன்ட் வேலகரத்னவையும் பாதுகாப்புடன் மற்றொரு வாகனத்தில் ஏற்றிச் சென்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். காலில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவில் இரத்தம் வெளியேறியமையால் என்னை யும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்த்த லெப்டி னன்ட் வீரதுங்க, உயிரிழந்த வீரர்களின் உடல்களை பலாலி இராணுவ முகாமுக்கு எடுத்துச்சென்று சேர்ப்பித்தார்.

அடுத்த நாள் காலையில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் உடல்களைக் கொழும்புக்கு எடுத்துச் சென்ற விமானத்தில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த எம்மையும் ஏற்றிச் சென்று கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

இதனிடையே, காலியிலுள்ள எனது குடும்பத்தினருக்கு கொழும்பு இராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட செய்தியில் தாக்குதலில் நானும் உயிரிழந்தாகவும், எனது உடலைப் பெற்றுக்கொள்ள உடனடியாகக் கொழும்புக்கு வருமாறு தெரிவிக்கப் பட்டிருந்தது. பதறியடித்துக் கொண்டு கொழும்புக்கு வந்த எனது குடும்பத்தினருக்கு நான் சம்பவத்தில் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்ததும் அவர்கள் பெரும் நிம்மதியடைந்ததுடன் ஆண்டவ னுக்கு நன்றி செலுத்திக் கெண்டனர்.

சுமார் ஒரு மாதகாலம் வரை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வெளியேறிய நான் மீண்டும் எனது தாய் நாட்டுக்குச் சேவை செய்யும் நோக்குடன் இராணுவ சேவையில் இணைந்து கொண்டேன். ஆயினும், 22ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற அப் பயங்கரச் சம்பவத்தின் நினைவுகள் ஒருபோதும் எனது மனதைவிட்டு அகலப் போவதில்லை.'

இன்று லெப்டினன்ட்டாக இராணுவ சேவையில் பதவி வகிக்கும் அன்றைய கோப்ரல் உபாலி பெரேராவின் அனுபவத்தை சுவாரஸ்யமாக வாசித்து, சிங்களப் பொதுமக்கள் மகிழ்ச்சியடையக் கூடும். ஆயினும், அச்சம்பவத்தின் எதிரொலியாக, சம்பவம் இடம் பெற்ற தினத்துக்கு மறுநாள் யாழ் குடாநாட்டின் ஏதோ ஓர் இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவ வீரர்களது அணியொன்று பழிக்குப் பழி வாங்கும் உத்வேகத்தில் கொலைவெறியுடன் யாழ்ப்பாணத்தின் ஒரு சில பகுதிகளில் அச்சத்துடன் வீடுகளில் ஒதுங்கியிருந்த பொதுமக்களை வெளியில் அழைத்துச் சுட்டுக்கொன்றும், பஸ் பயணத்தை மேற்கொண்டிருந்த பயணிகளை பஸ்ஸிலிருந்து இறக்கி வீதியில் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டுக் கொன்று பேயாட்டம் நிகழ்த்திய சம்பவத்தை தமிழ் மக்களுக்கு எவரும் நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அச் சம்பவங்கள் ஒருபோதும் அவர்களது மனதினின் றும் அழியப் போவதில்லை. கையில் ஆயுதம் இருப்பதால் அராஜகம் புரியலாம் என்ற இறுமாப்புடன் ஆக்கிரமிப்பில் ஈடுபடவிளையும் எதிரியைத் தடுத்து நிறுத்தி நேருக்கு நேர் நின்று எதிர்த்துப் போராடு வதையே போராட்டம் எனவும், பழிக்குப்பழிவாங்கும் நோக்கில் அப்பாவிப் பொதுமக்கள் மீது அடக்கு முறைத் தாக்குதலை மேற் கொண்டு கொலை புரிவதை மிலேச்சத்தனமான பேயாட்டம் எனவும் உலகம் பாகுபடுத்திக் கணக்கிடு வதை இன்று யதார்த்தமாக எம்மால் காண முடிகிறது.


–வஸந்தா மணாளன்

# ஏமாந்த கீரிகள்

நரி ஒன்று ஆற்றின் கரையோரம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் பெண் நரி, ஆண் நரியிடம் 'எனக்கு மீன் சாப்பிட ஆசையாக இருக்கிறது. இன்றைக்கு எப்படியாவது கொண்டு வாருங்கள்' என்றது.

ஆற்றின் கரையில் நீர்க்கீரிகள் இணையாக மீனை எதிர்நோக்கி ஆற்றில் பார்வை வீசி அமர்ந்திருப்பதைக் கண்டது நரி. திடீரென்று அந்த நீர்க் கீரிகளில் ஒன்று, நீரில் பாய்ந்து மூழ்கி ஒரு கொழுத்த மீனைக் கவ்வியது. ஆனால், பலம் பொருந்திய அந்த மீன் சுழன்று, திமிறி தன்னைக் கவ்வியுள்ள நீர்க்கீரியையும் நீருக்குள் இழுத்தது.

மீனின் அசுர பலத்தின் முன் திணறிப் போன அந்த நீர்க்கீரி . தனது நண்பனை உதவிக்கு வரும்படி அழைத்தது. உடனே நண்பன் நீர்க்கீரியும் ஆற்றில் பாய்ந்தது. இரண்டும் சேர்ந்து அந்த மீனை விடாது பிடித்திழுத்து கரையில் சேர்த்தன.



ஒரு நீர்க்கீரி, 'நான் பிடித்தேன்' என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தது.

'உதவிக்கு நான் வந்திருக்காவிட்டால் மீனும் கிடைத்திருக்காது. நீயும் மூழ்கிப் போயிருப்பாய்' என்றது மற்றொரு கீரி.

இந்தச் சண்டையைப் பார்த்துக்கொண்டிருந்த நரிக்கு ஒரே கொண்டாட்டம். சூழ்ச்சி மிக்க நரியின் மூளை செயல்பட ஆரம்பித்தது. பெரிய மனிதத் தோரணையோடு நீர்க்கீரிகளை அணுகி, 'உங்களுக்குள் என்ன சண்டை? முதலில் சண்டையை நிறுத்தி என் முன் பேச வாருங்கள்' என்றது.

நரியின் அமைதியான முகத்தைப் பார்த்த நீர்க் கீரிக்கு நம்பிக்கை பிறந்தது. எனவே தங்கள் வழக்கை நரியிடம் கூறத் தொடங்கின. 'ஐயா, இந்த மீன் யாருக்குச் சொந்தம் என்பதே சண்டைக்குக் காரணம். இதை நீங்கள் தான் நியாயமான முறையில் தீர்த்து வைக்க வேண்டும்.'

எப்படிப்பட்ட பொன்னான வாய்ப்பு என்று மனதுக்குள் மகிழ்ந்த நரி, 'அதற்கென்ன இதைப் போன்ற பல வழக்குகளில் நான் நீதிபதியாக இருந்திருக்கிறேன். ஆனால், எது எப்படியானாலும் நீதிபதிக்குரிய கூலியை எனக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்றது நரி. நீர்க்கீரிகள் அதற்குச் சம்மதித்தன.

நீர்க்கீரிகள் தங்கள் வழக்கைச் சொல்ல நரி தீர்ப்பு வழங்கியது. 'இந்த மீனின் தலை உங்களில் ஒருவருக்கு. வால் மற்றொருவருக்கு... நடுப்பகுதி நீதிபதிக்கான கூலியாய் எனக்குச் சேரும்' என்றது.

அவ்வளவுதான். நீர்க்கீரிகள் சம்மதித்தா, இல்லையா என்பதைக் கூடப் பார்க்காமல் மீனின் நடுப்பகுதியை பாய்ந்து கவ்விக் கொண்டு தனது குகைக்கு நரி விரைந்தது.மீனுடன் வந்த கணவனைக் கண்டதும் மனைவி நரிக்கு ஒரே மகிழ்ச்சி. 'எங்கிருந்து இதைக் கொண்டு வந்தீங்க' என்று கேட்டது.

'அந்த முட்டாள் நீர்க்கீரிகள் மீனை வைத்துக் கொண்டு சண்டையிடுவதைக் கவனித்தேன். சண்டை வலுக்கும்வரை காத்திருந்தேன். தகுந்த நேரம் வந்ததும் நீதிமான் வேடம் பூண்டு வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டேன் அவைகள் சண்டையிடாமல் ஒற்றுமையாய் இருந்திருந்தால் நமக்கு இந்த மீன் கிடைத்திருக்காது' என்று சிரமப்படாமல் மீன் கிடைத்த கதையைச் சொன்னது நரி.

## நிலா

வானத்தில் ஒரு வட்ட நிலா
எட்டிஎட்டிப் பார்க்குது
தேடும் விழிகள் காணும் முன்பு
திரைக்குள் தன்னை மூடுது

தங்கத் தாரகைகளின் நடுவே
பால் நிலவைப் பொழியுது
வீசும் தென்றல் காற்றினூடே
மெய் மறக்கச் செய்யுது

தேடும் விழிகள் காண
கோடி புதுமை செய்யுது
திகட்டச் செய்யும் நிலவின் புதுமை
பார்த்து ரசிக்க செய்யுது

– தயா




**தம்பி, தங்கைகளே!**

**'சிறுவர் பொழில்'**

பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## உடலைவிட நீண்ட நாக்குள்ள பிராணி உண்டா?

நீலகிரிக் காடுகளில் காணப்படும் ஒருவகைப் பச்சோந்தி, அதன் உடலைவிட நீளமான நாக்கை உடையது. இதன் உடலின் நீளம் 45 செ.மீ. என்றால் நாக்கின் நீளமோ 1.25மீற்றர். இதைவிட நீண்ட நாக்குள்ள பச்சோந்திகள் மடகாஸ்கர் காடுகளில் இருக்கின்றன. இவற்றின் உடலின் நீளம் 45 செ.மீ.தான். ஆனால் நாக்கு இரண்டு மீற்றர் நீளம்.



இவ்வகைப் பச்சோந்திகளின் வாயினுள் கனம் குறைந்த நாக்கு வளைந்து மடிந்து ஒட்டிக் கொண்டிருக்கும். ஒரு மரக்கிளையில் உட்கார்ந்தவாறு இது தனது நீண்ட நாக்கை நீட்டி வேறொரு கிளையிலுள்ள புழு, பூச்சிகளை அதில் ஒட்ட வைத்து இழுத்துக் கொள்ளும். இதன் நாக்கிலிருந்து வெளிவரும் வழுவழுப்பான பொருளில் புழு பூச்சிகள் ஒட்டிக்கொள்ளும்.

இந்தப் பச்சோந்தி படுசோம்பறி. ஒரே மரக்கிளையில் இது நாள் கணக்காக உட்கார்ந்திருக்கும், அதே நிலையில் உட்கார்ந்தபடி நாக்கை நாலாபுறமும் வீசி, புழு பூச்சிகளை இது கபளீகரம் செய்யும்.

இயல்புகளைப் பொறுத்தவரை இப்பிராணி மற்றப் பச்சோந்திகளைப் போன்றது தான். இதுவும் மற்றப் பச்சோந்திகளைப் போல நிறம் மாறும்.

## எங்கள் நாட்டு வளம்

எங்கள் நாட்டு வளங்கள்
எண்ணில்லாத வளங்கள்!
ஒவ்வொன்றாகச் சொல்லவா
ஊரூராகச் சொல்லவா!

வல்வெட்டித் துறையிலே
முத்தெடுக்கும் கடலது
வன்னியெனும் பெரும்பரப்பில்
பொய்கையது இரணைமடு

இயற்கைத்துறைமுகம் திருமலையில்
இன்னிசை பாடும் வாவி மட்டக்களப்பில்
ஆனையிறவிலே உப்பளம்
அழகுக் கானகம் வன்னியில்

பனையுண்டு தென்னையுண்டு
பாடி வரும் பறவைகளும்
தினையுண்டு நெல்லுமுண்டு
திரண்ட பல விலங்குண்டு.

**இ.வித்தகன்**
தரம் 7, யாழ்.இந்துக் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா....?

01. உலகம் முழுவதும் உள்ள மக்கள் பயன்படுத்தும் காய்கறி - *வெங்காயம்*

02. தனக்கென தாய் மொழி இல்லாத நாடு - *சுவிற்ஸர்லாந்து*

03. மனிதனைப் போல நடக்கும் பறவை - *பென்குயின்*

04. உலகில் அதிக தீவுகளைக் கொண்ட நாடு - *இந்தோனேசியா*

05. பெற்றோல் உ ற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு - *சவுதிஅரேபியா*

06. நண்டுகள் இல்லாத கடல் - அண்டாட்டிக்கா-பெருங்கடல்

07. தேவாலயத்திற்குள் நுழைய நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் நாடு - *இங்கிலாந்து*

08. உலகிலேயே அதிக மதிப்புள்ள தபால் தலைகளை வெளயிடும் நாடு - *பூட்டான்*

09. திராட்சை மலரை தேசிய மலராகக் கொண்ட நாடு - *சீனா*

*-மாலினி*

## சிந்திக்கச் சில நொடிகள்....

*01. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்?*

02. வெயிலில் உருவாகுவான், காற்றில் உலருவான் யார்?

03. தலையை சீவினால் தாளில் நடப்பான் யார்?

04. ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டு போகிறார் அவர் யார்?

05. உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவான்?

**விடைகள்**

01. கலண்டர் 02. வியர்வை 03. பென்சில் 04. நுளம்பு 05. தராசு

**யாதினி பரமானந்தம்**
தரம் - 5, கோப்பாய் மகாவித்தியாலயம்.



*வரைந்தனுப்பியவர் :*
**செல்வன் க.சிவசொரூபன்**
*சென்.ஜோன்ஸ் கல்லூரி - தரம் 10*

# புலிகளின் வான் படையும் இனவாதக் கூச்சல்களும்...

ஆள்பலம், ஆயுத பலம், போர்த்திறன், அரசியல் பலம் எனச் சகல நிலைகளில் பலம் பொருந்திய ஒரு மரபு வழி இராணுவ அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று விளங்குகின்றது.

அந்த இயக்கத்தின் தரைப்படை, கடற்படை ஆகியன ஏற்கனவே விரிவான கட்டமைப்புடன் வெளிப்படையாக இயங்கி வருவதை உலகம் அறியும். இந்தப் படைத் துறைகளில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. தாக்குதல் படையணி, சமர் முறியடிப்புப் படையணி, தரைக்கரும்புலிகள், கடற்கரும்புலிகள், பீரங்கிப் படையணி என அந்தப் பட்டியல் நீண்டு செல்கிறது. ஆயினும் விடுதலைப் புலிகளின் விமானப் படை இன்னமும் வெளிப்படையாகச் செயற்படுத்தப்படாததால் அது பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அறியக்கூடிய வாய்ப்புக்களும் இல்லை.

பலம்மிக்க ஓர் இராணுவ அமைப்பானது தனது பலத்தைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கும், இராணுவத் தந்திரோபாயங்களை விருத்திசெய்வதற்கும், இராணுவ ரீதியிலான தனது போர்த்திறனை வளர்த்துக் கொள்வதற்கும் பல்வேறு இராணுவத் தளபாடங்களையும், ஆயுதங்களையும், ஆளணிகளையும் வைத்திருக்க வேண்டியது அவசியமே.

காலத்தின் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப அந்த அமைப்பானது தன்னை நவீன மயப்படுத்திக் கொள்வதென்பது தவிர்க்க முடியாதது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் வளர்ச்சியும் அந்த வகையிலானதே. ஏற்கனவே பல படையணிகளுடன் விளங்கும் புலிகள் இயக்கம் விமானப் படையையும் உருவாக்கிக் கொள்வது அந்த அமைப்பின் வளர்ச்சிப் போக்கின் ஒரு படிநிலைதான்.

இது தொடர்பாக அதிகம் அலட்டிக் கொள்வதற்கு என்னதான் இருக்கிறது? சிங்களப் பேரினவாதிகளும், சிங்கள ஊடகங்களும் இதில் ஏன் அதிக அக்கறை காட்டுகின்றன என்பதுதான் தெரியவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டைப் பிரித்துப் புலிகளுக்குத் தாரை வார்க்கப் போகிறார்கள். பொதுக்கட்டமைப்பு மூலம் நாட்டின் இறையாண்மையை மீறுகிறார்கள் எனக் கூப்பாடு போட்டுக்கொண்டு செயற்பட்டு வரும் சில சக்திகளின் வாய்க்கு இப்போது மேலும் அவல் உருண்டை கிடைத்திருக்கின்றது. இவர்களை விட தென்னிலங்கையில் உள்ள சில பத்திரிகைகள் தமது பக்கங்களை நிரப்பிக்கொள்வதற்கும் விடுதலைப் புலிகள் தொடர்பான சில விமர்சனங்களை – அரைத்த மாவை திருப்பி அரைப்பது போல – எழுதி வந்த சில சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் இப்போது புதியதொரு சரக்குக் கிடைத்திருக்கின்றது. அதுதான் விடுதலைப் புலிகள் தமது வான் படையைக் கிழக்குக்கும் விஸ்தரிக்கின்றார்கள் என்ற விடயம்.

இதனை வைத்துக்கொண்டு புலிகளின் வான் படை விவகாரத்தை மேலும் ஊதிப் பெருப்பித்து விடுவதற்குச் சில சக்திகள் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு வலுச் சேர்ப்பதற்காக அரசின் புலனாய்வுப் பிரிவும் அவ்வப்போது புலிகளின் விமானப்படை தொடர்பான புதிய தகவல்களை வெளியிட்டுத் தனது பணிகளும் செவ்வனே நடைபெறுகின்ற தென்பதைக் காட்டிக்கொண்டிருக்கின்றது.



கொழும்பிலிருந்தும், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்தும் வன்னிக்கு இராஜதந்திரிகளையும் புலிகளின் தளபதிகளையும் ஏற்றிச் செல்லும் சிறிலங்கா விமானப் படை உலங்கு வனூர்த்திகளின் ஓட்டிகள் இந்த உளவுப் பிரிவினருக்குச் சரக்குகளை வழங்கி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் விமானப்படை பற்றி பிரபல இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ், பாதுகாப்பு நிலவரம் தொடர்பாகத் தான் எழுதிவரும் கட்டுரையில் பல தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனை விட இரணைப் மடுப் பகுதியில் அமைந்துள்ளதாகத் தெரிவித்து விடுதலைப்புலிகளின் விமான ஓடு பாதையில் இலகு ரக விமானம், ஒன்று நிறுத்தப்பட்டிருப்பது போன்றதொரு –செய்மதி மூலம் எடுக்கப்பட்ட – படம் ஒன்றை தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்று அண்மையில் பிரசுரித்திருந்தது.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா நோர்வையின் பிரதமருக்கும், வெளிவிவாகர அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளின் வெளிநாட்டமைச்சர் களுக்கும் இந்த விடயம் தொடர்பாகத் தெரியப்படுத்தியிருந்ததுடன் அந்த விமானங்கள் தொடர்பான படங்களையும் அனுப்பி வைத்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. குறித்த விமானங்கள் எந்த நாட்டின் தயாரிப்பு, எங்கிருந்து பெறப்பட்டன என்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தப் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இந்த விடயம் தொடர்பாக அந்த நாடுகள் அவ்வளவு அக்கறை காட்டிக் கொள்ளாத போதும், அந்தப் படங்களைப் பரிசீலனை செய்த அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அதில் ஒன்று செக் குடியரசின் தயாரிப்பான 'Zlins Z143' என்ற இலகு ரக விமானமெனத் தெரிவித்திருந்தனர்.



ஆயினும் அதனை சரியாக உறுதிப்படுத்த முடியாது எனவும் அவர்கள் கூறியிருந்தனர். இதனையடுத்து சில காலமாக இந்த விமானப் படை விடயம் அமைதியாக விடப்பட்டிருந்தது. ஆயினும் அது இப்போது மீண்டும் சூடு பிடித்துக் கொண்டது. விடுதலைப்புலிகள் தமது வான் படையை மேலும் பலப்படுத்தியுள்ளனர் எனவும் அதற்காக நவீன ரகப் பாதுகாப்புச் சாதனங்களைக் கொள்வனவு செய்து விமானத்தளத்தில் பொருத்தியுள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகின. எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து விமானத் தளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் விமானத்தளத்தில் பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு சாதனங்கள் தானாக செயற்பட்டு அந்த நிலைமையை எதிர்கொள்வதற்கும் ஏற்ற வகையில் அவை அமைக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

வன்னிக்குச் செல்லும் ஸ்ரீலங்கா விமானப்படை உலங்கு வானூர்திகளின் ஓட்டிகளும் இது தொடர்பாக ஊகங்களை வெளியிட்டு வந்தனர்.

இரணை மடுப்பகுதியை உலங்கு வானூர்த்திகள் அண்மித்ததும் அவற்றில் உள்ள ஏவுகணை எதிர்ப்பு சாதனங்கள் தானாக செயற்பட்டுப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், புலிகளின் விமான ஓடுபாதையில் பொருத்தப்பட்டிருக்கும் நவீன பாதுகாப்புச் சாதனங்களே இதற்குக் காரணமெனவும் தெரிவித்திருந்தனர். இதனை வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் விடுதலைப்புலிகளும் தமது வான் படையைப் பலப்படுத்துவதற்கு நவீன சாதனங்களைப் பெற்றுள்ளனர் என்பதை ஊர்ஜிதம் செய்தனர்.

இவற்றைக் கேள்வியுற்ற ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் மீண்டும் கூச்சல் போட ஆரம்பித்தன. ஆயினும் இன்னும் பல தகவல்கள் இப்போது வெளியாகியிருக்கின்றன.

**கிழக்கில் புலிகளின் விமான ஓடுபாதை**

புலிகள் தமது விமானப்படையைக் கிழக்கிற்கும் விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான் அந்தத் தகவல். அத்துடன் விமானப் படையின் புதிய தளபதியாக கெனடி என்பவரும் துணைத்தளபதியாகக் கடாபி என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கில் ஒருவிமான ஓடுபாதையை அமைப்பதுடன் விமானப்படைக்குத் தேவையான உலங்கு வானூர்திகள், இலகு ரக விமானங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு தலைவர் பிரபாகரன் இவர்களுக்குப் பணித்துள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகவல்கள் ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கின்றன. புலிகளின் விமானப்படைக்கு எந்தெந்த நாடுகளில் இருந்து உபகரணங்கள் கிடைக்கின்றன. எந்த நாடு பயிற்சியை வழங்கின்றது என்பது தொடர்பான தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சின் உளவுச் சேவை வட்டாரம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. ஆயினும் விமானத்தளம் ஒன்றை வன்னியில் அமைத்து அதற்குத் தேவையான விமானங்களையெல்லாம் வாங்கி அதனைப் பலப்படுத்தும் வரை பொறுத்திருந்துவிட்டு இப்போது உஷார் அடைந்து என்ன பலன் எனச் சில பாதுகாப்பு விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் . பாதுகாப்பு அமைச்சு என்னதான் செய்தாலும் புலிகளின் விமானப் படைக்கு எந்தெந்த நாடுகள் உதவி புரிகின்றன என்பதைக் கண்டு பிடிப்பது இலகுவான விடயமல்ல எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

1998 ஆம் ஆண்டே புலிகள் தங்கள் விமானப்படை வெளிப்படுத்த ஆரம்பித்திருந்தனர். 1998 ஆம் ஆண்டு மாவீரம் நாளன்று கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தின் மீது புலிகளின் உலங்கு வானூர்த்தியி ஒன்று பூ துவியது. இதன் மூலம் தம்மிடம் விமானப்படை ஏற்கனவே உள்ளதென்பதை புலிகள் அப்போதே சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி விட்டனர். இப்போதுதான் அவர்கள் விமானப்படையை ஸ்தாபித்திருக்கிறார்கள் என சில இனவாத சக்திகள் கூறுவது வேடிக்கையானது ஏற்றுக்கொள்ளமுடியாததொன்று. விமானப்படை இன்று 7 வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கின்றது. இந்த 7 வருடங்களாக எதையுமே கண்டு பிடிக்க முடியாமல் போன பாதுகாப்பு அமைச்சு இப்போது எவ்வாறு கண்டு பிடிக்க முடியும். புலிகள் ஏற்கனவே கிழக்கிலும் விமான ஓடுபாதை ஒன்றை அமைத்து விட்டனர். பாதுகாப்பு அமைச்சினதும், ஸ்ரீலங்கா உளவுச் சேவையினதும் கவனத்தைத் திசை திருப்பவே அவர்கள் இப்போது இவ்வாறான தொரு செய்தியைக் கசிய விட்டிருக்கின்றார்கள் எனவும் அவதானிகள் கருதுகின்றனர்.

எது எவ்வாறாயினும் பலம் பொருந்திய ஒரு மரபு வழி இராணுவ அமைப்பாக விளங்கி வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விமானப்படையும் ஒரு கட்டாய தேவையே. தமக்கென்று தனியான நீதி, நிதி, நிர்வாக, பொலீஸ் கட்டமைப்புக்களைக் கொண்டு தனி அரசாகச் செயற்பட்டு வரும் அவர்களுக்கு விமானப்படை முக்கியமானதே. எனவே புலிகளின் விமானத்தளத்தைப் பார்வையிடக் கண்காணிப்புக் குழுவை அனுமதிக்கவேண்டும் என கூறுவது எந்தவகையிலும் நியாயமற்றது. காரணம் அது அவர்களின் போரியல் வளர்ச்சியின் ஒரு படி. அதனை புரிந்துணர்வு ஒப்பந்தமும் எந்தவகையிலும் கட்டுப்படுத்தவில்லை.

எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று ஏற்படாவிட்டாலும் ஈழத் தமிழினத்தின் பாதுகாவலர்களாக விளங்கும் அவர்கள் இவ்வாறான வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் எவரும் அச்சப்படவேண்டியதில்லை. எதிர் காலத்தில் புலிகளின் விமானப் படை தமிழ் மக்களால் அமைக்கப்படும் அரசின் உத்தியோகப் பூர்வ விமான சேவையாக மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே தென்னிலங்கையில் உள்ள சில ஊடகங்களும், இன வாதிகளும் இந்த விவகாரத்தை ஊதிப் பெருப்பிப்பதன் மூலம் எந்தப்பிரயோசனமும் கிடையாது. இதன் மூலம் புலிகளின் விமானப்படை பலமிழக்காது. மாறக இவர் களின் கூச்சல் புலிகள் விமானப்படையை மேலும் பலப் படுத்துவதற்கான தூண்டு கோலாகவே அமையும்.

ஒரு நிரந்தரத் தீர்வு கிடைத்து ஐக்கிய இலங்கைக்குள் சமாதனமாக அனைத்து இனங்களும் வாழும் காலம் வரும்போது, இப்போது கூச்சலிடும் இந்த இனவாதிகள் கூட புலிகளின் விமானத்தில் பயணிக்க வேண்டிய காலம் ஏற்படலாம்.

– இருதயன்

# புலிகளைப் போராட்டத்திற்குள் தள்ளும் புறநிலை மேலும் பலப்படுத்தப்படுகிறது....!

கிழக்கில் - குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் - விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசுப் படைகள் ஆரம்பித்துள்ள நிழல் யுத்தம் எப்போது நிஜயுத்தமாக மாறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் கடந்த ஒரு வருட காலத்தில் 300க்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொண்ட படுகொலைப் படலம் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து சமாதான சூழல் ஏற்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டமும் ஏனைய பிரதேசங்களைப் போல அமைதியாகத்தான் இருந்தது. விடுதலைப் புலிகள் சகல இடங்களிலும் அரசியல்துறை அலுவலகங்களைத் திறந்து அரசியல் பணிகளை செவ்வனே முன்னெடுத்து வந்தனர். மக்களும் நெருக்கடிகள் இன்றி வாழ்ந்து வந்தனர்.

கடந்த வருடம் பெப்ரவரி மார்ச் மாதங்களில் அமைதி குலையும் சூழ் நிலை அங்கு உருவாகியது. விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதியான கருணாவின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகள் அமைதி குலையக் காரணமாகின.

நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுக்காக வன்னிக்கு வரும்படி விடுதலைப் புலிகளின் தலைமை அவருக்கு அழைப்பு விடுத்தது. அந்த அழைப்பை ஏற்க மறுத்ததையடுத்து, முக்கிய தளபதிகள் வன்னி வந்து சேர்ந்தனர். வன்னியில் தலைமையுடன் மந்திராலோசனைகளை நடத்திய தளபதிகள், வகுத்த வியூகத்தின் அடிப்படையில் கருணாவும் அவரது சகாக்களும் கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

தப்பிஓடியோரில் ஒருசிலர் இப்போது காடுகளுக்குள் இருந்தும் படையினருடன் இணைந்தும் செயற்படுகின்றனர்.

கருணாவின் சகாக்களை வைத்துக் கொண்டு அரசுப் படைகளும் புலனாய்வுப் பிரிவும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நிழல் யுத்தம் ஒன்றை நடத்திவருகின்றன.

அவர்களுக்குப் பாதுகாப்பு, உணவு, இருப்பிட வசதிகளை வழங்கி படையினர் நடத்திவரும் நிழல் யுத்தம் எப்போது நிஜயுத்தமாக மாறும் என்று இப்போது கூறமுடியாது.

படைத்தரப்பும் புலனாய்வுத் துறையும் நடத்திவரும் இந்த நிழல் யுத்தத்தில் கடந்த ஒரு வருட காலத்தில் மட்டும் 300 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு விட்டனர்.

புத்திஜீவிகள், விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள், ஊடகவியலாளர், ஆதரவாளர்கள் என 300க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இக்கொலைகளில் 200 கொலைகள் மட்டுமே உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொலையுண்டவர்களில் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்தவர்களும், கருணா தரப்பைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர். கடந்த ஒரு மாதத்தில் பொலநறுவப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்களில் 25பேர் கொல்லப்பட்டுள்ளனர்; 15பேர் காயம் அடைந்துள்ளனர்.

நாளொரு கொலை என தினம் தினம் தொடரும் கொலைப் படலத்துக்கு முடிவு கிட்டுமா என்ற கேள்வி மக்கள் மனங்களில் எழுந்துள்ளது. மக்கள் மத்தியில் பய உணர்வும் ஏக்கமும்தான் விஞ்சி நிற்கின்றன.

'கிழக்கில் தொடரும் கொலைகள் - விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தம் - சமாதான சூழ்நிலையைப் பாதிக்கும். போர் நிறுத்த உடன்பாட்டை நெருக்கடிக்குள்ளாக்கும். படையினரும் புலனாய்வுப் பிரிவினரும் இக் கொலைகளின் பின்னணியில் செயற்படுகின்றனர்' என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அனுசரணையாளர்களான நோர்வேக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறிவருகின்றார்.

விடுதலைப் புலிகளின் இக் குற்றச்சாட்டை படைத்தரப்பு மறுத்து வருகின்றது. ஆனால், கொலைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இக்கொலைகளை நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில், ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்தார். இந்த ஆணைக்குழு அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் விசாரணைகளை நடத்தியது. பொதுமக்கள் இந்த ஆணைக்குழுவைப் புறக்கணித்தனர். படைத் தரப்பினரும் கண்காணிப்புக் குழுவினரும் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியம் அளித்தனர்.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கை இன்னமும் வெளியாகவில்லை. ஆணைக்குழுவின் அறிக்கை சில பரிந்துரைகளை அரசுக்கும் படைத் தரப்புக்கும் விடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

கிழக்கில் புலிகள் பலமான நிலையில் இருக்கின்றனர் என்றும், கிழக்கில் விமானப்படைத்தளத்தை புலிகள் அமைக்கின்றனர் என்றும் செய்திகளை பத்திரிகைகளுக்கு கசியவிட்டு தமது நிழல் யுத்தத்தை நியாயப்படுத்த அரசு முனைந்து செயற்படுகின்றது.

நிழல் யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களைக் கொலை செய்து அதன் மூலம் புலிகளை யுத்தத்துக்கு சீண்டி அழைத்தபோதும், புலிகள் பொறுமை காத்து வருகின்றனர்.

சமாதானத்தில் உள்ள தமது பற்றுறுதியை வெளிப்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகள் அமைதி காத்து வந்தபோதும், அதற்கு எல்லை ஒன்று உண்டு என்று விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள இந்த எச்சரிக்கைக்கு மதிப்பளித்து நிழல் யுத்தத்தை அரசு நிறுத்தப்போகின்றதா? அல்லது நிழல் யுத்தம் நிஜயுத்தமாக மாற வழி சமைக்கப்போகின்றதா? இதுவே இன்று எழுந்துள்ள கேள்விகள்.

இந்த நிலையில் தம்மீது யுத்தம் திணிக்கப்படுமானால் அதை எதிர்கொள்ளத் தயார் என்கின்றனர் விடுதலைப் புலிகள். இது தொடர்பாகப் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் சிறு கருத்தரங்குகளை நடத்த ஆரம்பித்துள்ளனர். இந்த நிலைப்பாடு, புலிகளைப் போராட்டத்திற்குள் தள்ளும் புறநிலை மேலும் பலப்படுத்தப்படுவதை உணரவைக்கிறது.

கடந்த கால அனுபவங்களை மனதில் கொண்டு போராட்டச் சூழ்நிலைக்கு மக்களைத் தயாராக்கும் பணிகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போராளிகளின் கண்காணிப்புப் பணிகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன. மறுபுறத்தில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டேகொட யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் வந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்துப் படைத் தரப்பினருடன் ஆராய்ந்துள்ளார். அத்துடன் அவர் கிழக்குக்கும் சென்று திரும்பியுள்ளார்.

அண்மைக் காலமாக படைத்தரப்பிலும் விடுதலைப் புலிகள் தரப்பிலும் முன்னெடுக்கப்படும் சில செயற்பாடுகளை நோக்கும்போது யுத்தம் ஒன்று அண்மித்து விட்டதா என்ற பீதியே எழுகின்றது.

சமாதானத்துக்கு விடை கொடுத்து யுத்தத்துக்கு வரவேற்புக் கொடுக்கும் நிலை வருமா? சாபக்கேடான இந்தக் கேள்வி நாட்டின் சகல மக்களையும் சூழ்ந்து கொண்டுள்ளது.

– குகா

# "...விடுதலைக் காலங்களிலேயே இலக்கியம் வீச்சுப் பெறுகிறது..."

*கேள்வி:-* நீங்கள் சிறுவராக இருந்த காலத்தில் இலக்கிய வெளிப்பாடுகளின் பால் ஈர்க்கப்பட்ட சூழல் பற்றி குறிப்பிடுங்கள்?

*பதில்:-* நான் மிகமிக இளவயதில் பெற்றோரை இழந்தவன். என் ஆச்சியினால் (அம்மாவின் தாய்) வளர்க்கப் பெற்றவன். என் ஆச்சி நாகமுத்துவின் தமிழறிவு எந்தவொரு தமிழ்ப் பேராசிரியருக்கும் குறைந்ததில்லை. எனது அண்ணன் கணேசபிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த ஆற்றல் கொண்டவர். வீட்டில் ஆச்சி எங்களைக் கண்டிப்பதெல்லாம் பழந்தமிழ் அறநெறி நூல்களின் மேற்கோள்களால்தான். அண்ணர் 1952ஆம் ஆண்டுகளில் தன்நெருங்கிய நண்பருடன் கையெழுத்துச் சஞ்சிகை, மாற்றுச் சஞ்சிகையாக நடத்தி வந்தார். அந்த நண்பர் பத்மநாதன் அமெரிக்க நாட்டில் உயர் அறிவியல் அதிகாரியாக உள்ளார். பத்மநாதன் 'தாரா' என்ற மாதக் கையெழுத்து ஏட்டை மாதமொன்றிற்கு தயாரித்து அனுப்ப எனது அண்ணர் 'செங்கதிர்' என்ற ஏட்டை அனுப்புவார். அப்போது ஐந்தாம் ஆண்டு மாணவனாக யாழ். இந்துவில் இருந்த எனது படைப்புக்கள் பாலர் பகுதியில் இடம்பெறும். சி.ஐ.டி சிங்காரம் என்று அப்போது அதில் எழுதிய சின்னஞ்சிறு நாவலும் இன்றும் நினைவிலுள்ளது. யாழ்.இந்துக்கல்லூரியில் அப்போது ஆசிரியர்களாக இருந்த திருவாளர்கள் கே.எஸ்.சுப்பிரமணியம், க.சிவராமலிங்கம்பிள்ளை, வை.ஏரம்பமூர்த்தி (ஈழத்துறைவன்) ,எ.எஸ். கனகரத்தினம் தேவன்- யாழ்ப்பாணம், பண்டிதர் செல்லத்துரை மற்றும் எங்கள் முன்னோர்களாக இருந்த சோ.பத்மநாதன், கவிஞர் பஞ்சாட்சரம் (ச.வே.அல்ல இவர் இன்னொருவர்) சக தோழர்களாக செங்கை ஆழியான். முனியப்பதாசன், து.வைத்தியலிங்கம், வை.அ.கைலாசநாதன் என்னும் 'அங்கையன்' போன்றோரின்சூழல் எங்களை வளர்த்தெடுத்தது.

*கேள்வி:-* உங்கள் வெளியீட்டுக்காலம் தொடர்பாகக் கூறுங்கள்......?

*பதில்:-* எங்கள் வெளியீட்டுக்காலம் தோன்ற 1956 ஆம் ஆண்டு அரசியல், சமூக, கல்வி மாற்றங்களே காரணமாகின. 1956ஆம் ஆண்டு தனிச்சிங்களச்சட்ட மசோதா, தாய்மொழி மூலம் கல்வி கற்று வந்த எம்போன்றோரை எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வைத்தமையும் தமிழிலேயே சிந்திக்கத் தொடங்கியதுமே காரணம் எனலாம்.

*கேள்வி:-* படைப்புக்கும் அப்படைப்பாளிக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் எழும் விமர்சனக் கோட்பாடுகள் பற்றி ஆக்ககர்த்தா என்ற வகையில் உங்கள் கருத்து........?

*பதில்:-* படைப்பு முதலிலும், கோட்பாடுகள் பின்புமே வந்தன. ஏன் தமிழிலக்கிய வரலாற்றில் இன்று இலக்கணம் என்று கூறப்படுபவை இலக்கியத்தால் பிரசவிக்கப்பட்டவை தான். தொல்காப்பியம் முதலாக நன்னூல் இலக்கணம் வரை நூல்கள் பலவாக, வரலாறாகத் தொடர்ந்தமைக்கும் காரணம் இலக்கியங்களின் வகைகள் பெருகியமையே. 64 அடிச் செய்யுள்கள், வெண்பா.... அகவல்....... எனப் பிரிந்து ஈரடிக்குறளாகச் சிறப்பெய்தியமை கோட்பாடுகளின் தன்னிலைமைகளைப் புலப்படுத்தும்.

*கேள்வி:-* முற்போக்கு, நற்போக்கு தொடர்பான கருத்து நிலைகள் ஈழத்தில் முனைப்புப்பெற்ற சூழல் தொடர்பாக நீங்கள் கூற விரும்புவது....?

*பதில்:-* ஈழத்து இலக்கியப் போக்கில் முற்போக்கு அணி செல்வாக்குப் பெற்ற காலத்தில் அவர்களுக்குப் புறம்பாக வீச்சுடன் செயற்பட்ட எம்போன்றவர்களை 'பிற்போக்கு வாதிகள்' என்று அடக்க முற்பட்டமையும், அன்று எஸ்.பொ.நற்போக்கு என்ற மரபு சார்ந்த கருத்தை முன்னிறுத்திய சூழலிலும் நாங்கள் இனத்துவ விடுதலை சார்பான எமது புலத்தினதும், பண்பாட்டினதும் செழுமைகளை இலக்கிய வரலாற்று ரீதியாக வெளிப்படுத்தினோம். அன்று



ஈழத்துப் படைப்புலகில் நீண்ட காலம் அனுபவம் மிக்கவரான செம்பியன் செல்வன் கடந்த வாரம் காலமானார். ஆறுமுகம் ராஜகோபால் என்னும் இயற்பெயர் கொண்ட இவர், இலக்கிய உலகில் செம்பியன் செல்வன் என அறியப்பட்டவர். பன்முக இலக்கிய முயற்சிகள் மூலம் பரந்துபட்ட கவனத்தை ஈர்த்தவர். கடந்த ஆண்டு 'புலரி' காலாண்டிதழில் வெளியான அவரது செவ்வியில் இருந்து ஒரு பகுதியை அவரது நினைவாகப் பிரசுரிக்கிறோம்.

எமது செயற்பாடுகள் இலக்கிய ரீதியாக வீச்சுப் பெறத் தொடங்கின. இன்று இன அடையாளம் சார்ந்த அரசியல் போராட்ட ரீதியில் தமிழர் தேசியப் பார்வைகள் முனைப்புப்பட்டுள்ள சூழலில் எமது தெளிவான இலக்கியச் செயற்பாடுகள் குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

*கேள்வி:-* படைப்பாளி தனது மன உணர்வுகளைப் படைப்பில் வெளிப்படுத்தும்போது மனத்தடைக்கும் உள்ளாகின்றான் என்று கூறப்படுகிறதே? இது பற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்து யாது?

*பதில்:-* படைப்பாளி உண்மையில் வழிகாட்டி நண்பன், மெய்மைவாதி அவனுக்கு மனத்தடைகள் ஏற்படுமாயின் அவன் முழுமை பெறாதவன் என்பேன். அத்தகைய 'எழுது' பவனால் எதுவும் சாதித்துவிட முடியாது. அச்சமிகக் கொண்டவன் பாரதியின் 'அச்சமில்லை அச்சமில்லை....' பாடலைக் கூட வாய்விட்டுப் பாடமுனைவானா?

*கேள்வி:-* அண்மைக்கால ஈழத்து விமர்சனப் போக்கின் ஆரோக்கியத் தன்மை தொடர்பாக.......?

*பதில்:-* அண்மைக்காலத்திலென்ன 1960 இற்குப் பின் விமர்சகர்கள் தோன்றவில்லை. தமிழாசிரியர்களின் கற்றல் வழி பெற்ற 'இலக்கிய போதனைகள்' கட்டுரைகளாக மேடைப் பேச்சுகளுக்கு வருவதை விமர்சனமாகப் பார்க்கும் பார்வைதான் இன்று நிலவிவருகிறது.

*கேள்வி:-* அப்படியானால் விமர்சன மையங்களாகப் போற்றப்படும் மறைந்த கலாநிதி கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரது பங்களிப்புக் குறித்து நீங்கள் கூறவிரும்புவது....?

*பதில்:-* கலாநிதி கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் தமது விமர்சன அளவு கோல்களாக மேற்கத்தைய இலக்கியக் கோட்பாடுகளைப் பிரதானப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றெனினும், அவ் விமர்சனங்கள் ஈழத்துப் படைப்பாளிகளின் பன்முகப்பட்ட இலக்கியப் பொருள் நிலைகளையும் படைப்பு நிலை நின்று நோக்கியுள்ளனவா என்பது விவாதத்திற்குரிய தொன்றாகவே உள்ளது.

*கேள்வி:-* தமிழ்த்தேசிய விடுதலை வரலாற்றில் இலக்கியப் படைப்புகளின் வெளிப்பாடுகள், அதன் ஆரோக்கியத்தன்மை பற்றிக் கூறுங்கள்.....?

*பதில்:-* தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் தமிழர் தம் சிந்தனை மரபிலும், வாழ்க்கை நெறிமுறைகளிலும் அரசியற், பொருளாதார சமூக நிலைகளிலும் புதிய விழிப்புணர்ச்சியையும், செயலூக்கத்தையும் வழங்கியது. சமகால இலக்கியங்களில் தேசியத் தமிழ் இலக்கியப் பண்பு உண்மையில் தோன்ற ஆரம்பித்தது விடுதலைக் காலங்களில்தான் . இவற்றின் ஆரோக்கியம் ஏனைய கால இலக்கியங்களை விட உயிர்த்துவமானது. இக்கால இலக்கிய கர்த்தாக்களுக்குத் தமிழர் தம் வாழ்வின் பண்பாட்டுக்கூறுகளையே போராயுதமாகத் தூக்கவேண்டிய காலத்தின் கட்டளை கிட்டியது.

*கேள்வி:-* தென்னிந்தியச் சஞ்சிகைகள் - சினிமாக்கள் மீதான மக்களின் ஈடுபாட்டுணர்வு, ஈழத்துப்படைப்புக்களின்மீதான நாட்டத்தை விட மேலாக இருப்பதன் காரணம் என்ன?

*பதில்:-* தென்னிந்தியாவை ஈழத்தின் தாய்த்திருநாடு எனப் பல நூற்றாண்டுகளாக நம்பி வழங்கி வருகிறோம். தென்னகத்து வரலாற்றுடன் ஈழத்தமிழர் வரலாறு பிணைப்புண்டிருப்பது தமிழர் சஞ்சிகைகளும் திரைப்படங்களும் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியான தாக்கம், அவற்றையே முற்றுமுழுதாக நம்பியிருந்த அவை சரியானவை என்ற மயக்கங்கள், நாம் ஒரு தேசத்தவர், அவர்கள் பிறதேசத்தவர்கள் என்று பிரித்தறிய முடியாத அவசநிலையில் ஆழ்ந்து கிடப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*நன்றி :* 'புலரி'